கல்கி

KALKI 9.4.2000 ரூ.5.00



வாயால் கெடுகிறார்
வாழப்பாடி!
— ராமதாஸ் ஆவேசம்!



ஸ்நேகிதனே...





ஸ்நேகமாய்ச் சிரித்துக் கொண்டு கதவைத் திறக்கிறாரே... அவர்தான் 'ஸ்நேகிதனே... ஸ்நேகிதனே...' என்று 'அலைபாயுதே'வில் குழைபவர்.

" 'ஸ்நேகிதனே' என்றால் அன்புக்குரியவனே என்றுதானே அர்த்தம்?" என்று கேட்பவரிடம், "இல்லை... நட்புக்குரியவன்" என்று விளக்கம் சொல்ல வேண்டியிருந்தது - புரிந்து கொண்டிருப்பீர்களே, சாதனா சர்க்கம் என்று!

இந்தியில் எழுதிக் கொண்டு தமிழில் பாட்டு படிக்கும் இந்தக் குயில் தெலுங்கு, குஜராத்தி, மராத்தி, நேபாளி, பெங்காலி என பல மொழிகளிலும் இசைக்கிறது

'தமிழில் கொஞ்சம் 'ழ', 'ள' தகராறு செய்யும்; மற்றபடி நூறு சதவீதம் இல்லாவிட்டாலும், 99.99 சதவீதம் உச்சரிப்பில் தேறி விடுவேன்' என்று சொல்லும் இவர், கலைக் குடும்பத்தைச் சேர்ந்தவர் தான். அப்பா கமர்ஷியல் நடிகர்; அம்மா பாடகி; ஒரே ஒரு தம்பி மட்டும். புனாவில் வேலை பார்க்கிறார்.

"அம்மா நீலா கானேகர்தான் என் முதல் குரு; மராத்தி சானல்களில் அடிக்கடி அவர் பாட்டைக் கேட்கலாம்; வகுப்புகள் நடத்துகிறார்; அவர் தான் என்னைப் பண்டிட் ஜஸ்ராஜிடம் சேர்த்தார். ஜஸ்ராஜ் எனக்குக் குருவானது பெரும் பாக்கியம். அவரிடம் வந்து போய்க் கொண்டிருந்த அனில் மொஹிதே என்பவர் ஒருமுறை, 'கோரஸ் பாட ஆள் வேண்டும்' என்றுதான் கல்யாண்ஜி ஆனந்த்ஜியிடம் அழைத்துச் சென்றார். அப்போது பிரதான பாடகரான கிஷோர் குமார் வர லேட்டாகவே, என்னை சும்மா ஒரு பாட்டுப் பாடச் சொன்னார்கள். நான் 'குட்டி'யில் ஜெயாபாதுரி பாடும் 'ஹம் கோ மன் கீ சக்தி தேனா' பாட்டைப் பாடினேன். அவர்களுக்கு ரொம்பப் பிடித்து விட்டது" என


அந்த நாட்களை அசைபோட்டார்.

பின்னணி பாடுவது என்பது ஈஸியான விஷயம் ஒன்றுமில்லை.. அட்லீஸ்ட் என் வரையில். எனக் கலகலக்கும் சாதனாவுக்கு, முதல் 'ப்ரேக்' கிடைத்தது தாராசிங்கின் படத்தில்.

தீபா மேத்தாவின் 'வாட்டரு'க்காகவும் லேட்டஸ்டாகப் பாடியிருக்கிறார். 'நிச்சயம் வெளிவரும்' என்பதில் உறுதியாயிருக்கிறார்.

"ரெகுலர் ஸிங்கர்" ஆன பிறகு, அடுத்த கட்டம் வெளிநாடுகள் சென்று "ஷோ" நடத்துவதுதானே? அதுவும் பிராப்தித்திருக்கிறது. லண்டனில் அமிதாப் குழுவோடு சென்று நடத்திய நிகழ்ச்சியை நினைவு கூர்கிறார்.

"நானும் புதுசு; அல்காயக்னிக்கும் புதுசு; இருவரும் சேர்ந்து ஒரு க்ளாஸிகல் பாடல்



பதினாறு
வயதில்
அழகாய்
இருப்பதில்
உனக்குப்
பெருமை ஒன்றும்
இல்லை.
அறுபது வயதில்
அழகாய் இருந்தால்
அது உன்
ஆன்மாவின்
தனிப்பட்ட
சாதனை.
– மேரி ஸ்டோப்ஸ்
தொகுப்பு:
பா. குணா

பாடப் போவதாக அறிவித்து விட்டார்கள். எங்களுக்கு ஒரே உதறல். ஜாலியாகப் பாட்டுக் கேட்க வந்தவர்களிடம் 'ஆஹா... ஆ... ஊ...' என்று இழுத்துப் பாடினால் கலாட்டா செய்ய மாட்டார்களா? வெறும் நான்கு நிமிஷப் பாடல்தான் என்றாலும், க்ளாஸிகல் ம்யூசிக்கை அனுபவிப்பவர்கள் தனி ரகம்; கமர்ஷியல் மியூசிக்கை ரசிப்பவர்கள் வேறு ரகமாயிற்றே? ஆனால்... நம்ப மாட்டீர்கள்... அந்தப் பாடலை நாங்கள் பாடும் போது அப்படி ஒரு மௌனம்; முடிந்தபின் அப்படி ஒரு கைதட்டல்.. நாங்கள் அசந்து விட்டோம். உண்மையில் நம் கலாசாரத்தை நம்மை விட ஆழமாக அவர்கள் அறிந்து வைத்திருக்கிறார்கள் என்பது அப்போது தான் எனக்குத் தெரிந்தது" என்கிறார் ஆச்சர்யத்துடன்.

தமிழில் இவரைப் பாட அழைத்தது ரஹ்மான். புதிய கலைஞர்களை அறிமுகப் படுத்தும் தாகம்தான் தன்னைத் தமிழுக்கு அவர் அழைத்ததன் பின்னணியாக இருக்கும் என நம்புகிறார் சாதனா. ரஹ்மானை பெரும் சாதனையாளர் என்கிறார்.

"எவ்வளவு திறமைசாலி அவர். தாம் எதை எதிர்பார்க்கிறாரோ அதை அப்படியே சொல்லிக் கொடுப்பார். அப்புறம் நம் கற்பனையில் தோன்றும் விதத்திலும் பாடிக் காட்டச் சொல்வார். எல்லாவற்றையும் விஞ்சி எது நிற்கிறதோ அதையே 'செலக்ட்' செய்வார். ஒவ்வொரு பாடகரிலும் உள்ள ஸ்பெஷாலிடியை வெளிக் கொணர்வதே இவர் ஸ்பெஷாலிடி" எனப் புகழாரம் சூட்டுகிறார். தேவா, இளையராஜா போன்றோர் இசையமைப்பிலும் பாடியிருக்கும் இவர் 'தமிழ் நாட்டுத் தயாரிப்பாளர்கள், இயக்குனர்கள், இசையமைப்பாளர்கள் எல்லோரும் என் குரலைப் பாராட்டியது எனக்கு சந்தோஷத்தையும் தைரியத்தையும் அளித்தது என்கிறார்.

அந்தக் காலத்தில் லதாவும் ஆஷாவும் கோலோச்சியது போல் இன்று யாரும் நிலைப்பதில்லையே என்றால், "இன்றுள்ள மக்கள் ரசனை வேகமாக மாறி வருவதைக் காரணம் காட்டுகிறார். ஒரு சானலை கூட நம்மால் தொடர்ந்து பார்க்க முடியவில்லை; அலைபாய்ந்து கொண்டிருக்கிறோம்; பாட்டில் மட்டும் ஒருவர் குரலையே கேட்டுக் கொண்டிருக்க எப்படி முடியும்? அதுவும் ஒரு சாய்ஸ் இருக்கும்போது?" என யதார்த்தமாகப் பேசுகிறார்.

ம்ம்... குழந்தைத்தனமான முகம்; அதில் நிரந்தரமான ஒரு சிரிப்பு; சாந்தஸ்வரூபி என நினைக்க வைக்கும் இனிமையான சுபாவம்... யாருக்கு இவரை அடையக் கொடுத்து வைத்திருக்கிறதோ?

"இந்த நிமிடம் வரையில்... அரேன்ஜ்ட் மேரேஜ்தான். நாளை என்ன நடக்குமோ தெரியாது" என்று சூட்சுமமாக உணர்த்துகிறார்.

தமிழ் மக்களைப் பார்த்து, 'ஸ்நேகிதனே... ஸ்நேகிதனே' என்கிறார். நினைவிருக்கட்டும்... அவர் ஸ்நேகிதனே என்றால் காதலனே என்றுதான் இன்று வரையில் நினைத்திருக்கிறார்!

— ஜெயஸ்ரீ ராஜ்

"அப்போது எனக்கு வயது பதினான்கு. மாப்பிள்ளை பார்த்துக் கொண்டிருந்தார்கள். மருமகன் நல்லவராக இருக்க வேண்டும் என்று என் அப்பா நினைத்தார். அதன்படி எனக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்தான் என் கணவர்" — இப்படிச் சொல்லியிருப்பவர் வேறு யாரும் அல்ல, ராப்ரிதேவிதான்! பொதுவாகவே பத்திரிகையாளர்களை ஒதுக்கி வைத்திருக்கும் ராப்ரி, சமீபத்தில் அளித்துள்ள பேட்டியில்தான் இப்படி கூறியிருக்கிறார்:



லாலு கேட்ட வரதட்சணை!

லாலுவுக்கு உங்கள் அப்பா வரதட்சணை கொடுத்தாரா?

"அப்போதைய மரபுப்படி, எங்கள் அப்பாவிடம் ஐயாயிரம் ரூபாய் கேட்டார் அவர். அதன்படியே இவரும் பணம் கொடுத்தார். தவிர, எனக்குச் சீதனமாக ஐந்து ஏக்கர் நிலம் கொடுத்தார் என் அப்பா. அது இன்னமும் என் பேரிலேயேதான் இருக்கிறது.

உங்களைத் திருமணம் செய்து கொள்ள லாலு சம்மதித்ததன் காரணம் என்ன?

"அவருக்கு நாகரிகமான நகர்ப்புறப் பெண்களைக் கண்டாலே பிடிக்காது. எனவே, கிராமத்துப் பெண்ணான என்னைத் தேர்ந்தெடுத்தார்."

வீட்டில் லாலுவின் அதிகாரம் தானே?

"அப்படி நினைத்துக் கொண்டிருந்தால் அது தவறு. படித்தவரானாலும் படிக்காதவரானாலும் சரி, மனைவியைக் கலந்தாலோசிக்காமல் கணவன் முடிவுகளை எடுப்பதில்லை."

ஆரம்பகால மணவாழ்க்கை எப்படி இருந்தது?

"திருமணமாகி, பல மாதங்கள் கழித்து முதல் தடவையாக அவர் வீட்டுக்குப் போன அன்று இரவு, அவர் கைதாகி, சிறைக்குப் போய் விட்டார். எனக்குத் துக்கம் தாங்க முடியவில்லை. ஏன் இது போன்ற ஒருவருக்கு என்னைத் திருமணம் செய்து கொடுத்தீர்கள் என்று என் அப்பாவிடம் அழுதேன். அதற்கப்புறமும் அவர் அடிக்கடி சிறைக்குப் போக நேர்ந்தது."

"எனக்கு ஒன்பது குழந்தைகள் இருப்பதை சிலர் கேலியாகப் பேசுகிறார்கள். இப்படிப் பேசுகிறவர்கள், தமது ஒன்றிரண்டு குழந்தைகளையும் நன்றாக வளர்த்து ஆளாக்க முடியாதவர்கள். ஆனால் நான் அப்படியில்லை. என் குடும்பத்தையும் பார்த்துக் கொண்டு, பீகார் மாநிலத்தையும் நிர்வகிக்கிறேன். என் மீது ஏற்பட்ட பொறாமைதான் இப்படிப் பேச வைக்கிறது. எனக்கு வரிசையாக ஆறு பெண் குழந்தைகள் பிறந்தபின்னும் கூட என் மாமியார், 'எத்தனை பெண்கள் இருந்தாலும், வீட்டுக்கு ஆண் வாரிசு இல்லாமல் போகக் கூடாது என்று சொல்லி ஊக்கப்படுத்துவார்! குழந்தை பெற்றுக் கொள்ளுவது என்பது குற்றமா?"

நீங்கள் கோபக்காரியாமே?

"நான் பொய் சொல்ல மாட்டேன். தவறுகள் செய்ய மாட்டேன். எனவே எனக்கு நிறைய கோபம் வரும். என் கணவரைப் பற்றி யாராவது அபாண்டமாகக் குற்றம் சாட்டினால் எனக்குக் கோபம் வந்துவிடும். ஆதாரமில்லாமல் குற்றம் சாட்டுபவர்களை, ஆதாரம் காட்டும்படி சவால் விடுவேன்!"

— சி.எம்.

நன்றி: 'டெக்கான் கிரானிகில்'



சென்னைக்குப் பறக்கும் ரயில் வரப் போகிறது என்ற செய்தி கேட்டு, இறக்கைகள் முளைக்கிறதோ என விலாபுறத்தைத் தடவிப் பார்த்து மகிழ்ந்த சென்னைவாசிகள்... இப்போது பறக்கும் ரயிலுக்குப் பஸ்சிலிருந்தபடியே 'டாட்டா' காட்டுகிறார்கள்.

அகலமான பிராட்கேஜ் ரயில் பெட்டிகள், உலகத் தரத்தில் நிலையங்கள்... என வியப்பூட்டும் வசதிகள் இருந்தும் பயணிகள் கூட்டம் பஸ்ஸை நோக்கியே ஓட்டம் பிடிப்பது ஏன்? என்ற ஆராய்ச்சியில் இறங்கினோம்...

பறக்காத ரயில்கள்!

மார்ச் 29. மயிலாப்பூர் பறக்கும் ரயில் நிலையம். காலை 7.30 மணி. ஸ்டேஷன் மாஸ்டர் முருகன், "போக்குவரத்து நெரிசல்ல சிக்கி கஷ்டப்படாம ஆபீஸ் போய்ச் சேர, ரயில்தான் ஒரே வழி. தாம்பரம் டு கடற்கரை மீட்டர்கேஜ் மின்சார இரயில்களே இதுக்கு சாட்சி. இப்போதைக்கு கடற்கரையிலேர்ந்து, மயிலாப்பூர் வரைக்கும்தான் பறக்கும் ரயில்... இடையில ஆறு ஸ்டேஷன்கள் இருக்கு. இங்கேயிருந்து கடற்கரை போக வர எட்டு ரூபா. ஒரு மாச சீசன் டிக்கெட் 75 ரூபா... பஸ்ஸோட ஒப்பிட்டுப் பார்க்கிறப்போ எழுபத்தஞ்சு ரூபா குறைவு. அதிகாலை 4.35க்கு முதல் வண்டி. அப்புறம் 5.30க்கு பொன்னேரி வண்டி. காலை 6.05க்கும், மாலை 8.55க்கும் கும்மிடிபூண்டிக்கும் 9.50க்கு ஆவடி, 10.20க்கு பட்டாபிராம் சைடிங், மாலை 4.30க்கு அரக்கோணம், 4.10க்கு வில்லிவாக்கம், இதெல்லாம் புறநகர் வண்டிகள். இது இல்லாம, இங்கிருந்து கடற்கரை வரைக்கும் அடிக்கடி வண்டி விடுகிறோம். மக்கள் ஸ்டேஷன் மேல ஏறி வர்றதுக்கு எஸ்கலேட்டர் (நகரும் படிகட்டு) இருக்கு. இவ்வளவு வசதிகள் இருந்தும் மக்கள் குறைவாத்தான் வர்றாங்க'' என்கிறார். இதற்கிடையில் அந்தக் கம்பீரமான நிலையத்திற்குள் 8.10க்கு புறப்படும் கடற்கரை வண்டி நுழைந்தது. பத்து பெட்டிகள் இருந்த வண்டியிலிருந்து நான்கு பேர் மட்டுமே இறங்கினார்கள். வண்டி புறப்பட்டபோது பதினைந்து பேர் ஏறினார்கள். பள்ளி, கல்லூரி மாணவர்கள், அலுவலக ஊழியர்கள் வருவார்களோ என எதிர்பார்த்து நிலைய பிளாட்பாரத்தில் போடப்பட்டிருந்த நவீனரக பைபர் பெஞ்சில் அமர்ந்தோம். ஒவ்வொருவராக வரத் தொடங்கினர். எட்டு மணி கடற்கரை வண்டிக்காக வந்தவர்களின் எண்ணிக்கை நூற்றி ஐம்பது. பயணிகளிடம் மெள்ள பேச்சுக் கொடுத்தோம். ஒவ்வொருவருக்குள்ளிலிருந்தும் ஒரு எரிமலை வெடித்தது. முதலில் உக்கிரமாக வெடித்தவர் கொரட்டூர் வெங்கட்ரமணா ஆயுர்வேதக் கல்லூரியில் பணியாற்றும் பூங்கோதை! "ஃபேஸின்பிரிட்ஜ், பெரம்பூர் தொடங்கி, திரு





• முருகன்



• விஸ்வநாதன்



• லீலா

வள்ளூர் வரைக்கும் போய் வேலை செய்யறவங்கதான் அதிகம்... ஆரம்பத்துல திருவள்ளூருக்கு அதிக சர்வீஸ் விட்டவங்க, இப்போ அதையெல்லாம் கட் பண்ணிட்டு, கடற்கரைக்கு அரைமணிக்கு ஒரு வண்டி விடுறாங்க. இதனால என்ன சார் பிரயோசனம்... காலையிலும், சாயந்தரமும் பீக் அவர்ஸ்ல இன்னும் இரண்டு டிரைன் கூட விட்டாதான் நாங்களெல்லாம் வர்றதா இருக்கோம். கட் பண்ணின வண்டிகள் எல்லாத்தையும் திரும்பவும் விடணும்''

"திருவள்ளூர் தமிழ்நாடு நுகர்பொருள் வணிபக் கழகத்தில் கணக்கு அதிகாரியா வேலை செய்யறேன். இப்போ 8.55 மணிக்கு கும்மிடிப்பூண்டி வண்டி. அதுலதான் போறேன். பத்து மணிக்கு திருவள்ளூர் போய்ச் சேர வேண்டிய வண்டி 10.45க்கு போய்ச் சேருது. இதுக்கு காரணம் கடற்கரையிலேர்ந்து நேராக கொரட்டூர் போற வண்டி, திரும்பவும் பேசின்பிரிட்ஜ் வழியா சென்ட்ரலுக்கு வந்து, திரும்பவும் பேசின் பிரிட்ஜ், பெரம்பூர் வழியா கொரட்டூர் போயி... அங்கேருந்து கும்மிடி பூண்டி போகுது... இப்படி தலையைச் சுத்தி மூக்கைத் தொடுறதால தினசரி ஆபீஸ்ல அசிங்கப்பட வேண்டியதா இருக்கு... இந்தக் கோரிக்கையைப் பரிசீலித்து, கடற்கரையிலேர்ந்து கொரட்டூர், கொரட்டூர்லேர்ந்து நேராக திருவள்ளூர், கும்மிடிபூண்டிக்குக் காலைல 9 மணிக்கு ஒரு வண்டி விட்டே ஆகணும்'' இப்படி லட்சுமிதேவி ஆவேசப்பட்டு முடித்த கையோடு 8.45க்கு வர வேண்டிய கடற்கரை வண்டி 8.55க்கு வந்தது. வந்த பிறகுதான் தெரிந்தது. அது கும்மிடிபூண்டி வண்டி என்பது! 8.45க்கான கடற்கரை வண்டி கேன்சலாம்!

"இப்படித்தான் சார்... அவங்க இஷ்டத்துக்குக் கேன்சல் பண்ணுவாங்க. திருவள்ளூர் போறதுக்கு 8.45 வண்டியில பூங்கா நகர்ல இறங்கி அங்கேயிருந்து சென்ட்ரல் நடந்து போய் ஏறிக்குவேன்... கடற்கரை வழியா போற வண்டிகள் ஊரைச் சுத்துறதால என்னை மாதிரி வர்றவங்கதான் அதிகம். இப்போ பாருங்க இந்த வண்டி கேன்சல். இரு ஒரு பக்கம்ன்னா நான் மந்தைவெளி பாக்கத்திலேர்ந்து ஸ்கூட்டியில வந்து, அதை பிரண்ட் வீட்ல விட்டுட்டு இங்க வரணும். ஏன்னா சைக்கிள் ஸ்டாண்டு இங்கே இல்ல. முன்னாடி இருந்தது இப்போ எடுத்துட்டாங்க. நான் என்ன சொல்றது'' - இது அனுராதாவின் குமுறல்.

''எனக்குப் பிரச்னை இல்ல... ஆனா சனிக்கிழமை பஸ்லதான் போகணும். சனி, ஞாயிறு மார்னிங் சர்வீஸ் கிடையாது. முக்கியமா சொல்ல வேண்டிய விஷயம், பெண்கள்



• கீர்த்திவாசன்

பெட்டியில தைரியமா ஆண்கள் ஏறிட றாங்க... பாதுகாப்பே இல்லை. அதுலயும் தனியா மாட்டிகிட்டா அவ்வளவுதான்!'' என்கிறார் சென்னை சட்டக் கல்லூரி மாணவியான லீலா.

''மாணவர்களுக்கு மட்டுமில்ல சார், எங்களுக்கும் ரொம்ப கஷ்டமாயிடுது... வங்கிகள், அரசு அலுவலகங்கள் சனிக்கிழமை உண்டு. ஞாயிற்றுக்கிழமை வேணும்னா ரெகுலர் சர்வீஸ் கட் பண்ணிக்கட்டும்'' என்கிறார் ரமா.

அடுத்து ஆண்கள் தரப்பில் ஒருவரை பிடித்தோம். ''சார் இப்போதான் ரொம்ப சௌகரியமா இருக்கு. மயிலாப்பூர்லேர்ந்து, கடற்கரை வரைக்கும் வண்டிகளை அதிகப்படுத்தினதுதான் சரி. ஏன்னா... பூங்காநகர்லயோ, கோட்டையிலயோ இறங்கி, பஸ்சோ, டிரைனோ பிடிச்சுடலாம்...'' என்கிறார் சென்னை துறைமுகத்தில் பணியாற்றும் மயிலைவாசியான விஸ்வ நாதன்.

இப்படியொரு மெகா போக்குவரத்து திட்டத்தில் ஏன் இத்தனை குளறுபடிகள், குறைபாடுகள்?

தெற்கு ரயில்வே பொதுமேலாளர் கீர்த்தி வாசனிடம் பயணிகளின் குறைகளைப் பட்டியலிட்டோம்.

''பறக்கும் ரயில் திட்டம் செயல்படத் தொடங்கினபோது எங்கள் காதுக்கு வந்த முதல் புகார்... பாலத்துக்குக் கீழே வசிக்கிற குடிசைவாசிகள்... ஸ்டேஷனை பொதுக் கழிப்பிடமாக மாத்திட்டாங்கங்கிறது தான்... இதை மாநில அரசின் கவனத்துக்குக் கொண்டுபோய் பல இடங்கள்ல குடிசைகளை மாற்றிக் கொடுத்தோம். இப்போ திருமயிலையிலிருந்து வேளச்சேரி வரை ஒன்பது ஸ்டேஷன்கள் அமைய இருக்கறது. இந்த ஸ்டேஷன்களுக்குக் கீழே பஸ் ஸ்டாண்டும் கொண்டு வறோம். ஸ்டேஷன்களுக்குக் கீழேயே பஸ் ஸ்டாண்டு வந்துடுச்சின்னா.. பயணிகள் தானா வந்துடுவாங்க... இப்போ கடற்கரையிலேர்ந்து திருமயிலை வரைக்கும் எல்லா ஸ்டேஷன்லேயும் ரயில்வே போலீஸ்காரங்களைப் பாதுகாப்பிற்குப் போட்டிருக்கிறோம். ஒவ்வொரு ஸ்டேஷன்லேயும் மின் பராமரிப்பு, சைக்கிள் ஸ்டாண்டு, சுற்றுச்சூழல் தூய்மை இதெல்லாம் தனியார்ட்ட விட்டிருக்கோம். அதுல சில குறைபாடுகள் இருந்தது உண்மை. அதை சரி செய்ய ஏற்கனவே நடவடிக்கை எடுத்துட்டோம். கடற்கரையிலேர்ந்து கொரட்டூர் வழியா சென்ட்ரல் வராமல் நேராக திருவள்ளூருக்கு ஒரு சர்வீஸ் விடுவதைப் பற்றி பரிசீலித்திருக்கிறோம். மார்ச் 2002-ல் வேளச்சேரியிலிருந்து சர்வீஸ் தொடங்கி விடும்... அதுவரைக்கும் இப்படிப்பட்ட குறைகள் வரலாம்... அதை பொதுமக்கள் எங்கள் கவனத்துக்கு கொண்டு வந்தா உடனே நடவடிக்கை எடுப்போம் என்கிறார்.

— ஆர்.சி. ஜெயந்தன்

படங்கள்: வெங்கடேஷ்



சைக்கோவாக கமல்!

'தெனாலி' படத் துவக்க விழா!

மேடையில் வித்தியாசமாக மலையாள ஸ்டைல் கொடி விளக்கு வைத்திருந்தார்கள். கமல், ரஜினி, கே.எஸ். ரவிக்குமார், ஜோதிகா என்று ஆரம்பித்து 50 பேர் வரை விளக்கேற்றினார்கள்! அழைப்பிதழிலும், சுவர் போஸ்டர்களிலும் ஏ.ஆர். ரஹ்மான், கமல், கே.எஸ். ரவிக்குமார் மூவரும் சேர்ந்து போஸ் கொடுக்க, விழாவில் ரஹ்மான் மிஸ்ஸிங்!

ஒரு கொசுறு தகவல்: படத்துல கமல் சைக்கோவா நடிக்கிறாராம்!

— ஆர்.சி. ஜெ

ஸ்ரீ டிராவல்ஸ்

194-A, முதல் மாடி, அண்ணாசாலை, சென்னை - 600 006.
12/a, ரெட்ஹில்ஸ் ரோடு, கொளத்தூர், சென்னை - 600 099.
போன் : 5568620, பேக்ஸ் : 5564866
பேஜர் : 9632-701579 இ-மெயில் :sritrave@satyam.net.in

கோடை விடுமுறையை உங்கள் குடும்பத்துடன் மகிழ்ச்சியுடன் கழித்திட ஸ்ரீ டிராவல்ஸ் அளித்திடும் அருமையான சுற்றுலாக்கள்!

அனல் பறக்கும் கோடையில் ஹிமாசல பிரதேசத்தின் பனிப்பொழிவுகளில் உங்கள் குடும்பத்துடன் குதூகலித்து மகிழ்ந்திடுங்கள்!



ரோடங் பாஸில் எமது சுற்றுலா குழுவினர்

புறப்படும் தேதிகள் :
30-04-2000 & 13-05-2000

சென்னை-டில்லி-குருசேத்திரா-சண்டிகார்-சிம்லா-குலு-மணாலி-ரோடங்பாஸ்-டில்லி-விருந்தாவன்-மதுரா-ஆக்ரா-சென்னை.

பயணத்தொகை : ரூ.6,500/-
பயணநாட்கள் : 13 நாட்கள்

ST - 17 அந்தமான் சுற்றுலா

அந்தமான் தீவுக்கூட்டகளின் இயற்கையழகை
கப்பல் பயணத்திலும், விமானப் பயணத்திலும் கண்டு களியுங்கள்

புறப்படும் தேதிகள்:
21.04.2000 & 05.05.2000

சென்னை-போர்ட் பிளேர்-சென்னை

பயணநாட்கள் :9 பயணத்தொகை : ரூ.11,600/-
(கப்பல் மற்றும் விமானப் பயணத்துடன்)

65 வயதானவர்களுக்கு : ரூ. 8,900/-
குழந்தைகளுக்கு
(10 வயது வரை) : ரூ. 7,250/-

ST - 20 நேபாள சுற்றுலா

கொளுத்தும் வெயிலில் குளுகுளு மலைப்பிரதேசங்கள்

புறப்படும் தேதி : 22.05.2000

சென்னை-கல்கத்தா-கேங்டாக்-டார்ஜிலிங்-காத்மாண்டு-போக்ரா-கோரக்பூர்-வாரணாசி-சென்னை

பயணநாட்கள் :14 பயணத்தொகை :ரூ.6,900/-

- மிகவும் தரமான ஹோட்டல்களில் பிரத்தியேகமான தங்கும் அறைகள். [கலர் டி.வி., போன், ஹீட்டர், கார்பெட் மற்றும் பாத்டப் வசதிகளுடன்]
- பிராமண சமையல்காரர்களால் தயாரிக்கப்படும் தரமான தென்னிந்தியசைவஉணவு.
- வழக்கம்போல் விருந்து மற்றும் இன்னிசை நிகழ்ச்சியும் உண்டு.
- வெளியூர்களில் இருந்து கலந்து கொள்பவர்களுக்கு எமது செலவிலேயே ரயிலில் டிக்கெட் வசதி செய்து தரப்படும்.
- 16 பேர் கொண்ட குழுவினராக வருபவர்களுக்கு பிரத்தியேக தள்ளுபடி உண்டு.

அனைத்து கிரெடிட் கார்டுகளும் கமிஷன் இன்றி ஏற்றுக் கொள்ளப்படும்.

L.T.C. வசதி உண்டு.

ஏமாற்றத்தை தவிர்க்க உடனே முன்பதிவு செய்யுங்கள்!

எந்தப் பத்திரிகையைப் புரட்டினாலும் ஏதாவது ஒரு சுண்டல் ஜோக் வந்து 'ஹிஹி' என்கிறது. இந்த மாதிரி ஜோக்குகளெல்லாம் பீச்சில் சுண்டல் விற்கும் சிறுவர்களுக்குத் தெரியுமா? நான்கைந்து ஜோக்குகளைத் 'தூக்கிக்' கொண்டு பீச்சுக்குப் போனோம்.

கடல் அலை முட்டும் இடத்தில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஒரு குடும்பத்தினருடன் ஒன்றி, குரங்கு மாதிரி ஆக்ஷன் கொடுத்து ஒரு குழந்தையைச் சிரிக்க வைக்கப் படாதபாடுபட்டுக் கொண்டிருந்த சுண்டல் காரச் சிறுவனை அணுகினோம்.

"நான் புக்கெல்லாம் படிக்க மாட்டேன். பள்ளிக்கூடத்தோட படிக்கறதுக்கு முழுக்குப் போட்டுட்டேன்" என்று வெட்கமாய்ச் சிரித்தவனின் பெயர் வைரமுத்து.

"அந்தச் சிரிப்பை கொடுங்க பார்ப்போம்' என்று நம்மிடமிருந்து 'ஜோக்'கை வாங்கியவன், "இதெல்லாம் சிரிக்கும்படியாவா இருக்கு?" என்றான் சிரித்துக் கொண்டே...!

"புதுக்கோட்டை அருகேயுள்ள ஒரு கிராமம்தான் எங்க ஊரு. (பெயரைச் சொல்ல மாட்டேன்) இந்த வேலைக்கு வந்து ரெண்டு மாசம் ஆச்சு. இப்படி யாராவது குடும்பத்தோட வந்தா இவங்களை மாதிரி இருக்கணுங்கற ஆசை வந்துடும். அதான் குழந்தைக்குச் சிரிப்புக் காட்டிட்டு இருந்தேன்."

"இந்த மாதிரி புத்தகம் படிக்கற பழக்கமெல்லாம் கிடையாதுங்க. எனக்குச் சுண்டல் விக்கணும், காசு கிடைக்கணும், நமக்குத் தெரிஞ்சதெல்லாம் அவ்வளவுதான்" - சொன்னது விஜயகுமார். அரியலூரைச் சேர்ந்த இவன் மூன்றாவது வரை படித்திருக்கிறானாம்.

"ஊர்ல அப்பா கல்லு உடைக்கிறாரு. அம்மா கூலி வேலைக்குப் போறாங்க. நானும் அங்க இங்கன்னு சுத்திட்டிருந்தேன். மெட்ராஸ்ல வேலைக்கு வர்றியான்னு ஒரு அண்ணன் கூப்பிட்டாரு. எங்க வீட்லயும் போகச் சொன்னாங்க. வந்துட்டேன். மாசம் 500 ரூபாய் சம்பளம். ஜாலியா இருக்கேன்" என்று மடமட வென்று பேசுகிறான்.

"தினமும் அறுவது ரூபாய்க்கு வித்திடுவேன். காலைல அண்ணா சமாதி, எம்.ஜி.ஆர் சமாதியில் விற்பேன். இந்தக் கதையெல்லாம் உங்களுக்கு எதுக்கு? வரட்டுமா,"

- எந்தக் கவலையுமின்றி கடகட வென்று கடமையே கண்ணாய் விரைகிறான். அவனையே நாம் பார்த்துக் கொண்டிருக்க, பின்னாலிருந்து "சுண்டல் வேணுமாண்ணே" என்ற குரல். திரும்பினால் இரண்டு சிறுவர்கள்!

"சுண்டல் வாங்குனாத்தான் நான் எதுவும் சொல்வேன்" என்று அடம்பிடித்





• சிவா

• விமல்

நாங்க ஒன்னும் சுண்டல் விக்கிறவங்க இல்ல..!

தனர் இருவரும் வாங்கி விட்டுக் கேட் டால், நாங்க ஒன்னும் சுண்டல் விக்கிறவங்க இல்ல; இங்க வந்த கதைப் பெரிய கதை" என்று புதிர் போட்டனர் சிவாவும் விமலும்.

பக்கத்தில் உட்காரச் சொல்லி முழுக் கதையையும் கேட்டோம்!

"எங்க ரெண்டு பேருக்குமே திருப்பூர்தான் சொந்த ஊர். ஏழாம் வகுப்பு பரீட்சை எழுதியிருக்கோம். இப்ப ரெண்டு மாசம் லீவு விட்டிருக்காங்க. எங்க ஃப்ரெண்டு வேணுகோபால்ங்கறவன் 800 ரூபாய் வச்சிருந்தான். மெட்ராஸ் போக ப்ளான் பண்ணினோம். அங்கிருந்து பஸ்ல ஏறி இங்க வந்துட்டோம். பீச்சுக்கு வந்தோம். ஜாலியா சுத்திட்டு இங்கேயே படுத்திட்டோம். காலைல வேணு கோபாலைக் காணலை: ஊருக்குத் திரும்பிப் போய்ட்டான்! என்ன செய்யறதுன்னு தெரியாம, ஒரு சுண்டல்கார பையன்கிட்ட சுண்டல் வாங்கிட்டு, வேலை கிடைக்குமான்னு கேட்டோம். சுண்டல் விக்க வர்றியான்னான். சரின்னோம். வேலைல சேர்ந்தாச்சு. ஒரு மாசம் வேலை பார்த்துட்டு, வர்ற காசுல ஊருக்குத் திரும்பிடணும்னு திட்டம் போட்டிருக்கோம். ஆனா அதுக்குள்ள வேணுகோபால் போய் ஊர்ல சொல்லி எங்கப்பாவைக் கூட்டிட்டு வந்துடக் கூடாது. அதான் பயமாயிருக்கு. இதெல்லாம் நீங்க ஏன் கேட்கறீங்க? எங்க வீட்ல சொல்லிடாதீங்க... வரோமண்ணே..." என்று இருவரும் சிரித்துவிட்டுப் போகின்றனர்.


கையில் சுண்டல் பொட்டலத்துடன் திகைத்து நிற்கிறோம்.

— ஏக்நாத். செ.

படங்கள் : ஜரிஷ்

• வைரமுத்து





• அருணாசலம்



• குமரி அனந்தன்

'டின்னர்' பாலிடிக்ஸ்!

● தில்லியில் நடக்கும் 'டின்னர்' பாலிடிக்ஸ் சென்னையையும் தொற்றிக் கொண்டுவிட்டது. முன்னாள் அமைச்சர் அருணாசலம் (த.மா.கா.விலிருந்து காங்கிரஸுக்கு போனவர்) காங்கிரஸில் உள்ள கோஷ்டி தலைவர்களையெல்லாம் அழைத்து சமீபத்தில் விருந்து கொடுத்தார். "எல்லோரும் போய் தலைவர் பதவிக்கு முட்டி மோத வேண்டாம்; நமக்குள் ஒருவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்வோம்" என்று முடிவெடுக்க நடத்தப்பட்டதுதான் அந்த டின்னர். அன்பரசு, குமரி அனந்தன் என்று கலந்து கொண்ட அந்த டின்னரில் எடுத்த முடிவு திண்டிவனத்துக்கு மாற்றாக அருணாசலத்தை ப்ரொஜக்ட் செய்வது என்பதுதான்! காங்கிரஸ் அ.தி.மு.க.வினை நெருங்கி வரும் இந்தச் சூழலில் தமிழக காங்கிரஸ் தலைவராக வருபவர் ஜெ.க்கும் உடன்பாடானவராக இருக்க வேண்டும் என்பது விதி. ஆனால் முன்னர் விமானத்திலிருந்து இறக்கி விடப்பட்ட பிரச்னையில் அருணாசலம் கொடுத்த அறிக்கையில், கடுப்படைந்து போயிருந்தார் ஜெ. "எனவே ஜெ.வை சமாளிப்பது எப்படி?" என்று தீவிரமான யோசனையில் இறங்கியிருக்கிறார் அருணாசலம். அம்மா சொல்வாங்க... அருணாசலம் கேட்பார் போலிருக்கிறது!

● சி.எம்.டி.ஏ. அமைப்பு சென்னை வளர்ச்சிக்காகப் பல திட்டங்களைத் தீட்ட வேண்டிய பொறுப்பில் உள்ள அமைப்பு. ஆனால் கடந்த இரண்டு வருடங்களாக எந்தத் திட்டமும் தயாரிக்கப்படவில்லையாம். இது மட்டுமல்லாமல் ஏற்கெனவே போடப்பட்ட திட்டங்களை விரைந்து செயல்படுத்த விடாமல் ஸ்பீட் பிரேக்கர் போடும் வேலையும் நடந்து வருகிறதாம். உதாரணமாக சென்னை கோயம்பேட்டில் 40 கோடி ரூபாய்ச் செலவில் பஸ் நிலையம் அமைக்கும் பணி, இதற்கெனத் தனி பொறியாளர்களைப் போட்டு வேலையை விரைந்து முடிக்க வேண்டுமென்பது உலக வங்கியின் அட்வைஸ். ஆனால் சி.எம்.டி.ஏ. இதைக் கண்டுகொள்வதில்லையாம். இதனால் பஸ் நிலையப் பணியில் பெரும் சுணக்கம் ஏற்பட்டிருக்கிறதாம். "இங்கு நடப்பதைப் பார்க்கும்போது அரசுக்குக் கெட்ட பெயர் வாங்கித் தருவதுதான் சி.எம்.டி.ஏ. நோக்கமோ என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது' என்று பெருமூச்சு விடுகிறார் இளம் அதிகாரி ஒருவர்.

● ஜெ. ஆட்சி முடியும் தருவாயில், சட்டசபையில் அ.தி.மு.க. ஆதரவு – தி.மு.க. ஆதரவு என்று இரு பிரிவாக காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் செயல்பட்டார்கள் அல்லவா! கிட்டத்தட்ட இப்போதும் அதே நிலை உருவாகும் என்று தெரிகிறது. இந்த பட்ஜெட் கூட்டத் தொடர் முடியும் தருவாயில் தி.மு.க. ஆதரவு – அ.தி.மு.க. ஆதரவு என்று த.மா.கா. உறுப்பினர்களிடையே இரு பிரிவுகள் உருவாகலாம் என்று சொல்லப்படுகிறது. இதை மோப்பம் பிடித்த த.மா.கா. தலைமை, தி.மு.க. ஆதரவு சட்டமன்ற உறுப்பினர்களை அடையாளம் கண்டு அவர்களை பட்ஜெட் விவாதத்தில் கலந்து கொண்டு அரசை தாக்கிப் பேசும்படி கேட்டுக் கொள்ளப் போகிறதாம்!

— சஞ்சயன்

காதில் விழுந்தவை :



'ஜெய'ட்டா!

ஜெயாஸ்ரீ. தமிழ் சினிமாவுக்குப் புதிய வரவு. இயக்குனர் எழில் இயக்கத்தில், பிரபு தேவாவை காதலித்துக் கொண்டிருந்த (படத்திற்காகத்தான்!) இவரை 'வார்த்தை விளையாட்டுக்கு' இழுத்தோம். ஆனால் மூன்று நிபந்தனைகள். ஐந்து வினாடிக்கு மேல் மௌனம் சாதிக்கக் கூடாது. மனத்தைத் தொட்டு பதில் சொல்ல வேண்டும். (அதாகப்பட்டது மனசாட்சியுடன் எனப் பொருள். கொள்க!) இறுதியாக - பதில் இரண்டு வரிக்கு மிகக் கூடாது.

ஊர்: கௌஹாத்தி, அசாம்.

வேர்: அப்பாவும் அம்மாவும். அப்பா பிரபுல்ல சில் ஒரு சினிமா விநியோகஸ்தர். அம்மா மாலா சில் குடும்பத் தலைவி. *(ஓ...கே...?)*

பாசம்: மிசாராமிலிருந்து ஸ்வெட்டர் வாங்கி வரும் தம்பி, மும்பையிலிருந்து சுடிதார் வாங்கி வரும் அக்கா. பாசம் காட்ட இவங்ககிட்ட சுத்துக்கணும்... *(நல்லது...!)*

வேஷம் : +2 படிக்கும்போது மாறுவேடப் போட்டியில், கவிக்குயில் சரோஜினி நாயுடுவா போட்டது. *(ஜெய்ஹிந்த்!)*


தகுதி: பி.ஏ. எகனாமிக்ஸ். ஹண்டெல் பெண்கள் கல்லூரி. கௌஹாத்தி தேசிய நாடகப் பள்ளியில் (நேஷனல் ஸ்கூல் அஃப் டிராமா) 97ல் படித்து தேர்ந்தது. *(அட...!)*

தொகுதி: கௌஹாத்தி சட்டமன்றத் தொகுதி. சத்தியமா இன்னும் ஓட்டுப் போடலை... *(கவலைப்படாதீங்க... நாங்க வயசு என்னன்னு கேட்க மாட்டோம்!)*

அனுபவம்: என்.எஃப்.டி.சிக்காக 'காகுலி விஷ்யா' இயக்கிய 'அம்ரிதா' ஹிந்திப் படத்தில் முதன் முதலில் டாக்டராக நடித்தது... பிறகு பல ஹிந்தி படங்களில் தோழி பாத்திரங்கள். *(இனிமே கலைச் சினிமாவை மறந்துடுவீங்களே!)*

அற்புதம்: அன்னை தெரசா, டயானா *(பிழைச்சுக்குவீங்க)*

மறுமை: நைட்டிங்கேல் பறவையாக, 'பெர்முடா தீவுகளில் பிறந்து, தனிமையில்



பாடிக்கிட்டே இருக்கணும். பெர்முடாவில் வாகனப் புகையே கிடையாது. *(கடவுள் ஆசிர்வதிப்பாராக)*

தயக்கம்: கவர்ச்சியாக நடிக்க... *(வாழ்த்துக்கள்...)*

மயக்கம்: பரீட்சை ஹாலில் உட்கார்ந்ததும் வரும். *(ஓ... நம்ம கேஸா...?)*

காதல்: ஆதாம் ஏவாள் தொடங்கி நாளைக்கு உலகத்தின் கடைசி மனுஷன், மனுஷி வரைக்கும்... இருக்கும். *(யுரேகா!... நல்ல கண்டுபிடிப்பு!)*

மோதல்: நிதிஷ்குமார் அமைச்சர் பதவியை ராஜினாமா செய்ய வைத்த எக்ஸ்பிரஸ் ரயில்களின் மோதல் இன்னும் மனசை விட்டுப் போகவே இல்லை. *(நெஞ்சைத் தொட்டுட்டீங்க)*

பேட்டி: தமிழ்ல நீங்கதான் முதல் பேட்டி... ரொம்ப நன்றி... *(ஓ.கே.!)*

போட்டி: போட்டி இருந்தால்தான், ப்ராடக்ட் நல்லா வரும். நான் ப்ராடக்ட்ன்னு சொன்னது கதையை. *(நிஜமாலுமா...?)*

தோழன்: இதுவரை இல்லை... *(என்ன இழுக்கறீங்க?)*

தோழி: கனிகா. *(சிறுகதை எழுத்தாளர்கள் கவனிக்க.. கதாநாயகிக்கு வைக்க நல்ல பெயர்தானே?)*

லட்சியம்: நன்றாக உழைத்துத் தேசிய விருது வாங்கணும்... *(நல்லவேளை எம்.பி. ஆகணும்ன்னு சொல்லாம இருந்தீங்களே)*

லட்சம்: பணம் வரும்... போகும்... *(சே... எல்லா ஊர்லயும் இந்த புலம்பல் உண்டா?)*

இடம்: ஹோட்டல் மௌரியா ரொம்பவும் பிடிச்சிருக்கு. *(சீக்கிரம் வீடு வாங்கிடுங்க)*

படம்: தமிழில் நான் நடிக்கும் முதல் படம் 'பெண்ணின் மனதைத் தொட்டு' இயக்குனர் எழில் திறமையில் எனக்கு நம்பிக்கை இருக்கு. நிச்சயமா நூறு நாள்தான். *(நல்லா யோசிச்சுச் சொல்லுங்க..)*

தமிழ்: பழைமையான மொழி... கேட்க நல்லா இருக்கு... *(தி.மு.கவுல சேர்ந்துட்டீங்களா?)*

ஹிந்தி: தாய்மொழி.... குறிப்பாக கௌஹாத்தி வட்டார வழக்கில் நல்லா பேசுவேன்... *(மன்னிச்சுக்குங்க! நான் கிளம்பணும்.)*

வாசக எஜமான்களே... ஜெயஸ்ரீக்கு பாஸ் மார்க் கொடுத்துடலாமா? மறக்காம லெட்டர் போடுங்க.

— வால்பையன்

ஜெயஸ்ரீ

பாண்டிச்சேரியில் பழைய பஸ் ஸ்டாண்ட் மற்றும் ரயில்வே ஸ்டேஷனுக்கு அருகில் உள்ள பாலசுப்பிரமணியர் கோயிலைப் பற்றிக் குறிப்பிடும்போது, 'கவுஸ் கோயில்' என்றுதான் சொல்கிறார்கள். கவுஸ் என்கிற முகமது கவுஸுக்கும், முருகனுக்கும் என்ன சம்பந்தம்?

பாண்டிச்சேரி மற்றும் சுற்று வட்டாரத்தில் உள்ள பல கோயில்களில் உற்சவங்கள் நடக்கும் போது ஸ்வாமிக்கு அலங்காரம் செய்யும் தொழில் செய்து வந்தவர் முகமது கவுஸ். சித்தியின் கொடுமை காரணமாக ஒருநாள் தற்கொலைக்குத் துணிந்து விட்டார். கடலில் இறங்கியவரை ஒரு வயதானக் கிழவர் பிடித்து இழுக்கவே திரும்பி அவரை நன்றாகப் பார்த்துத் திகைப்படைந்தார் கவுஸ். அப்புறம் என்ன நடந்தது? கவுஸே சொல்கிறார்.

"எத்தனையோ கோயில்களில் முருகனுக்கு அலங்காரம் செய்திருக்கிறேன். சர்வ அலங்காரங்களுடன் சாட்சாத் அந்த முருகனே என் முன்னால் நிற்பது போல உணர்ந்தேன். வாழ்க்கையில் நமக்கு இன்னமும் சில கடமைகள் பாக்கியிருக்கிறது போலிருக்கிறது என்று தற்கொலை எண்ணத்திற்கு விடைகொடுத்து விட்டேன். இந்தச் சம்பவம்தான் திருப்புமுனை. இதை பல பேர் நம்ப மாட்டார்கள். முருகன் என் இஷ்ட தெய்வம் ஆகி விட்டார்."

'இஷ்ட தெய்வமான முருகனுக்கு ஒரு கோயில் கட்டி விட வேண்டும்' என்ற வெறி கவுஸின் மனத்துக்குள் வளர இடம் தேடத் துவங்கினார். "நீ ஒரு முஸ்லீம். முருகனுக்கு கோயில் கட்ட இடமா?" என்னப்பா.... தலையில் கோளாறா?" ஏகமாகக் கிண்டல் பேச்சுக்கள். இந்த நிலையில்தான் ரயில்வே ஸ்டேஷனுக்கு அருகில் துளசி முத்துமாரி அம்மன் கோயிலை ஒட்டி அரசின் இடம் இருப்பது கவுஸின் கவனத்துக்கு வந்தது. நேராகப் போய் மேயராக இருந்த குபேரைப் பார்த்தார். குபேருக்குச் சந்தோஷம். 'மிகவும் ஊக்கப்படுத்த வேண்டிய முயற்சி' என்று நிலத்தைக் கொடுத்து விட்டார்.

"முருகன் புண்ணியத்தில் என்னிடம் கொஞ்சம் சேமிப்பு இருந்தது. அதை வைத்து 1964ம் ஆண்டில் பாலசுப்பிரமணியன் கோயில் உருவாகிவிட்டது.

உருது பேசும் இஸ்லாமியக் குடும்பத்தில் பிறந்தவர் கவுஸ். முருகனோடு ஒன்றிப் போன அவரது செயல் அவரது சமுதாயத்திடையே மிகுந்த பரபரப்பையும் எதிர்ப்பையும் உண்டாக்கியது. 'ஜமாத்' நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ப்ரெஷர். ஆனால் இதெல்லாம் சில காலம் தான். கவுஸின் "முருகப் பிடிப்பைப்" பார்த்து அவர்களே ஒதுங்கிக் கொண்டார்கள். அவரது மகன்களும், மருமகளும் மசூதியில் தொழுகைக்குப் போனால் கூட முருகன் கோயில் வளர்ச்சியிலும் அக்கறை காட்டியது இவரது அதிர்ஷ்டம்.

அர்ச்சனை மந்திரங்கள், கந்தசஷ்டி எல்லாம் மனப்பாடம் கவுஸுக்கு.



* முகமது கவுஸ்

முகமது கவுஸின் முருகன் கோயில்!

முருகனுக்கு எந்த விசேஷத்தையும் விடாமல் செய்கிறார். சுவாமி பவனி வர எல்லா வாகனங்களும் செய்து வைத் திருக்கிறார் கவுஸ்.

"என்னோட ஊர் விழுப்புரம் அருகி லுள்ள சிறுவங்காடு. என் அப்பாவுக்கு தாத்தா காலத்தில் ஒரு சம்பவம் நடந்தது. ஆற்காடு நவாப் அந்தப் பக்கமாகப் போகும்போது, அவருக்குத் தொழுகை நடத்த எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொடுத்தார் தாத்தா. மகிழ்ந்து போன நவாப் ஏராளமான நிலங்களை அவருக்குக் கொடுத்து விட்டார். அவர் கொடுத்த நிலத்தில் ஒரு பெருமாள் கோயிலும் இருந்தது. 'நிலம் முஸ்லிமிடம் போய் விட்டதே' என்று இந்துக்கள் பதற்றப்பட் டார்கள். அப்போது தாத்தா, 'கவலைப்பட வேண்டாம்...' என்று சொல்லி கடைசி வரை அந்தக் கோயிலுக்கு டிரஸ்டி போல பாதுகாத்தது மட்டுமல்லாமல், கோயிலுக் கென்று நிலத்தையும் ஒதுக்கிக் கொடுத்து விட்டார். எனவே என் ஈடுபாட்டிற்கும் ஒரு அடித்தளம் இருக்கிறது."

"எல்லா மதங்களும் மனிதனுக்கு நல் லதைத்தான் சொல்கின்றன. எனவே மதத்தின் அடிப்படையில் வேறுபாடுகளை யும், சண்டைகளையும் வளர்த்துக் கொள் வது தேவையற்ற வேலை" என்கிறார் கவுஸ்.

முகமது கவுஸ் சந்திக்கும் சங்கடமான நிலை என்னவென்றால், ஒரு பக்கம் அவரது மதத்தைச் சேர்ந்தவர்களின் புறக்கணிப்பு. மற்றொரு புறம், உதவி கேட்டு இந்து தலைவர்களிடம் சென்றால், "உனக் கெதற்கு இந்த வேலை; கோயிலை எங்களிடம் ஒப்படைத்து விடு.... நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்" என்ற தொனி யில் பேச்சு.

"முன்பு போல உடம்பில் தெம்பில்லை; 61 வயதாகி விட்டது. சர்க்கரை வியாதி படாதபாடுபடுத்துகிறது. என்னோட விருப்பத்தை அவன் பூர்த்தி செய்வான் என்று முழு நம்பிக்கை உண்டு."

– கவுஸ் கைகாட்டிய மூலஸ்தானத்தில் வள்ளி – தேவசேனா சமேதராய் பால சுப்பிரமணியன் புன்னகைத்துக் கொண்டி ருக்கிறார்.

— ஸ்ரீநிவாசன்

படங்கள் : வெங்கடேஷ்



'மௌன' மொழிபெயர்ப்பு!

பெண்களின் முன்னேற்றத்திற்காகவும் பிற்படுத்தப்பட்டோரின் முன்னேற்றத்திற்காகவும் தினமும் பலமணி நேரங்கள் செலவழிக்கும் இந்த எழுத்தாளர் ஓர் அதிசயம்! இவர் எதிர்கொள்ளும் அனுபவங்கள், பார்க்கும் மனிதர்கள், சிறுகதைகளாக மாறி நம்மைச் சிந்திக்க வைக்கின்றன.

வசதி படைத்த மேல்வர்க்கத்தினரின் பிரச்னைகள் இந்த எழுத்தாளரை ஈர்க்கவில்லை. மேல்தட்டினரின் மன உணர்வுகளையும் உளைச்சல்களையும் அறிந்திருந்தாலும், மிக நேர்த்தியாக சிறுகதைகளாகப் புனைந்தாலும், அவரது மனத்தை முழுமையாக ஈர்ப்பவை, சமுதாயத்தின் கீழ் மட்டத்தில் இருப்பவர்களது வேதனைக்குரல்தான். அதிலும் பெண்களது பிரச்னைகள் இவரது தனிக் கவனத்தைப் பெறுகின்றன.

சமூகத்தின் விளிம்புகளில் இருப்போரும் பழங்குடியினரும், பொருளாதாரச் சுரண்டல்களுக்கு ஆட்படுகிறார்கள் என்ற உண்மை 'பாயன்', 'மாலையும் காலையும் நீ அம்மா' போன்ற பல கதைகளில் வருகிறது. பழங்குடியினர் மனத்தில் வேரூன்றிப் போயிருக்கும் நம்பிக்கைகளே அவர்களைக் கட்டிப் போடுகின்றன. பரம்பரை நம்பிக்கைகள்தாம் கங்காபுத்திரன் மலிந்தரை, தன் மனைவியையே ஒரு 'பாயனாக' இனம் கண்டு கொண்டு அவளை வீட்டை விட்டுத் துரத்தச் செய்கின்றன. அவனே சவக்கிடங்கு வேலையுடன் சட்ட விரோதமான செய்கைகளையும் செய்துகொண்டு, சமூகத்தின் விளிம்பில் நிற்கிறான். ''முன்பொரு காலத்தில் அவள் ஒரு மனுஷியாக இருந்தாள். உன்னுடைய அம்மாவா இருந்தாள்'' என்று அவன் தன் மகனிடம் சொல்லும்பொழுது அவனே எவ்வாறு மனிதத் தன்மை இழந்து நிற்கிறான் என்று புரிகிறது.

வங்காளத்தில் மிக வலிமையான எழுத்து மஹாஸ்வேதாதேவியினுடையது. அந்த வலிமை குன்றாமல் மொழி மாற்றம் செய்திருப்பவர் என்.எஸ். ஜகன்னாதன்



மொழியாக்கங்களும் மொழி மாற்றங்களும் தமிழில் மிகவும் குறைந்து போய்விட்ட நிலையில், என்.எஸ். ஜெகந்நாதனின் இம்முயற்சி வரவேற்கத்தக்க ஒன்றாகும். ஆங்கில வழி தமிழ் மொழியாக்கம் செய்யும் பொழுது ஏற்படக் கூடிய பிரச்னைகள், வங்காளத்திலிருந்து நேரடியாகத் தமிழில் செய்யும்போது இருப்பதில்லை. இச் சிறுகதைகளின் தமிழாக்கம் பல நேரங்களில் சொந்தமாகப் புனையப்பட்ட சிறுகதைகளோ என்று நினைக்க வைத்து, மொழி மாற்றம் செய்யப் பட்டவை என்பதையே மறக்க வைக்கின்றன. சில இடங்களில் தெரியும் குழப்பங்களுக்கு அச்சுப் பிழைகள் காரணமாக இருக்கலாம். இவை இந்த புத்தகத்திற்குத் திருஷ்டியாக வந்திருப்பன என்றே சொல்லலாம்.


ஒவ்வொரு தமிழனும் மஹாஸ்வேதாதேவியைப் பற்றி அறிந்து கொள்ள இப் புத்தகம் நிச்சயமாக உதவும்.

— சீதாலக்ஷ்மி விஸ்வநாத்

மஹாஸ்வேதா தேவியின் சிறுகதைகள்
தமிழாக்கம்: என்.எஸ். ஜெகந்நாதன்
வெளியீடு: நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா.
விலை: ரூ. 55.00



•மஹாஸ்வேதா தேவி





2000 ஏப்ரல் 9
பிரமாதி பங்குனி 27
மலர் : 58
இதழ் : 37

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



கிளின்டன் வைத்த குட்டு!


இத்தனை நாளாக இல்லாத திருநாளாக பாகிஸ்தானில் ஓர் ஆச்சர்யம் நிகழ்ந்துள்ளது. பாக். உள்துறை அமைச்சர் மொய்நுத்தீன் ஹைதர், தீவிரவாத மத அமைப்புகளைப் பேச்சு வார்த்தைக்கு அழைக்கப் போவதாக அறிவித்திருக்கிறார்! அவ்வமைப்புகளுடன் ஏற்கெனவே தனித்தனியாக 'அரசு' பேச ஆரம்பித்து விட்டதாகவும் கூறியுள்ளார்! பாகிஸ்தான் முன்னேற வேண்டுமானால் அதற்குத் தடையாக விளங்கும் பயங்கரவாதமும் வன்முறையும் முதலில் களையப்பட வேண்டும் என்று ஒப்புதல் வாக்குமூலமே அளித்திருக்கிறார் ஹைதர்!

இந்த அதிரடி அறிக்கையை வெளியிட்ட கையோடு அமெரிக்கா, பிரிட்டன் பயணம் புறப்பட்டு விட்டார் ஹைதர்!

அயல்நாட்டிலுள்ள பாகிஸ்தானியர்களின் பிரச்னைகளை ஆராயவே இப்பயணம் என்று சொல்லப்படுகிறது. ஆனால், பாக் - அமெரிக்கா உறவுகளைச் செப்பனிடவே இந்த ஏற்பாடு என்பது அரசியல் வட்டாரத்தின் கணிப்பு.

அமெரிக்க அதிபரின் பாகிஸ்தான் விஜயம் வரலாறு காணாத வகையிலான அதிர்ச்சியை அந்நாட்டிற்கு அளித்துள்ளது. பாக். அதிபரும் அயலுறவுத் துறையினரும் சற்றும் எதிர்பாராத வகையில் பாகிஸ்தான் அரசைக் கண்டனம் செய்து எச்சரித்தார் பில் கிளின்டன்! தீவிரவாதத்துக்கு அவ்வரசு அளிக்கும் ஆதரவைக் கண்டித்து, அவர் வன்மையாகவும் வெளிப்படையாகவும் எச்சரிக்க, பாகிஸ்தான் அரசு வேறு வழியின்றித் தனது போக்கில் ஒரு மாற்றத்தைப் புகுத்தியிருக்கிறது.

இந்த மாற்றம் மட்டும் நீடித்து, பாகிஸ்தான் தீவிரவாத அமைப்புகளின் கொட்டம் அடங்குமானால், இரு நாடுகளுக்கிடையே நேசக்கரங்கள் நீளுமானால், இந்தியாவின் பல பிரச்னைகள்



பறந்து விடும்.

இந்தத் திருப்பத்துக்குப் பிள்ளையார் சுழி போட்ட கிளின்டனின் பாகிஸ்தான் விஜயம்தான் உண்மையில் அவரது இந்திய விஜயத்தைக் காட்டிலும் நமக்கு அதிக பயனை அளித்திருக்கிறது!

கிளின்டன் பாகிஸ்தானில் ஆற்றிய அதிரடி உரைக்குத் தூண்டுகோலாக இருந்தது அவர் இந்தியாவிலிருந்தபோது காஷ்மீரில் நடந்த அக்கிரமம்தான். தீவிரவாதிகளால் கொல்லப்பட்ட 35 சீக்கியர்கள் தங்கள் உயிர்த் தியாகத்தால் வரலாற்றிலேயே ஒரு முக்கிய திருப்பம் ஏற்படுத்தியுள் ளனர் என்று கூடச் சொல்லலாம்! அமெரிக்கா, இந்தியாவுக்கு மிக ஆதரவான நிலையை எடுக்கும் படி தூண்டியது இந்த நிகழ்ச்சிதான்.

மற்றபடி, இந்தியா - அமெரிக்காவிடையே பொருளாதார ரீதியான ஒப்பந்தங்களோ, சலுகை களோ, கூட்டு முயற்சிகளோ பெரிய அளவில் கிளின்டன் வருகையால் சம்பவிக்கவில்லை.

ஆனால், கிளின்டனின் பாக். உரையில் ஒரு தீர்மானமான இந்திய அனுதாபம் தொனிக்கிறது. அதைப் பயன்படுத்திக் கொண்டு பொருளாதாரத் தடைகள் நீக்கப்படுவதற்கும் ஏற்றுமதி பெருக் கத்துக்கும் தொழில்ரீதியான ஒப்பந்தங்களுக்கும் இந்திய அரசு தீவிர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.


நடப்பதென்னவோ வேறு கதை! பாகிஸ்தான் தரப்பில் அமெரிக்கத் தொடர்பை பலப்படுத்திக் கொள்ளக் காட்டப்படும் சுறுசுறுப்பு நம் தரப்பில் காணவே காணோம்.

இந்திய அரசு விழிப்புடன் இயங்காவிட்டால் பாகிஸ்தானின் ராணுவ ஆட்சி அமெரிக்காவை ஆசுவாசப்படுத்தி ஆதாயத்தை அள்ளிக் கொண்டு விடும்!

மயிலிறகு பட்ஜெட்!

'பட்ஜெட்டுக்கு முன்பாகவே முக்கியப் பொருள்களின் விலைவாசிகளை உயர்த்தியாயிற்று; இப்போது வரிகளில்லாத பட்ஜெட் என்று பெருமைப்பட்டுக் கொள்ள என்ன இருக்கிறது?' என்கின்றனர் எதிர்க்கட்சியினர்.

தமிழக முதல்வரே கூட இது தேர்தல் ஆண்டின் மயிலிறகு பட்ஜெட் என்பதை ஒப்புக் கொண்



டிருக்கிறார்.

எனினும் தமிழக அரசின் 2000 - 2001ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் சில முக்கியமான நல்ல அம்சங்களைச் சுட்டிக்காட்டியாக வேண்டும்.

1999 - 2000 ஆண்டுக்கான பட்ஜெட் பற்றாக்குறை 790.13 கோடி என்று கணக்கிடப்பட்டது. ஆனால் அந்நிதியாண்டின் இறுதியில் பற்றாக்குறை 159.9 கோடி என்ற அளவுக்குக் குறைந்துள்ளது என்பது மறுகணக்கெடுப்பில் உறுதியாகியிருக்கிறது. அதாவது, எதிர்பார்த்த அளவைக் காட்டிலும் பற்றாக்குறை வெகு குறைவு.

வரும் நிதியாண்டுக்கான பற்றாக்குறை 667.96 கோடி என்று கணிக்கப்பட்டிருக்கிறது. இத்தொகையும் கணிசமாகக் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பற்றாக்குறையை வெகுவாகக் குறைக்க முடிந்திருப்பதுமல்லாமல் வரும் நிதியாண்டு இறுதியில், மாநிலத்தின் மொத்த உற்பத்தியில் 6.6 சதவிகிதம் வளர்ச்சி இருக்கும் என்றும் கணித்திருக்கிறார் முதல்வர்.

இத்தனைக்கும் புதிய வரிகளை மிகக் குறைவாகவும் எச்சரிக்கையுடனும் விதித்துள்ளார் நிதியமைச்சரான முதல்வர். (புதிய வரிகள் மூலம் கூடுதல் வருமானம் இரண்டு கோடி ரூபாய்தான் எதிர்பார்க்கப்படுகிறது.)

அடிப்படை வசதிகள் பெருக்கத்தில் முதலீடு, சமுதாய நலத் திட்டச் செலவுகள் என்ற இரு முக்கிய அரசு செலவுகள் குறைக்கப்படவில்லை. மாறாக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கீடை கணிசமாக அதிகரித்து, மத்திய அரசு அறிவித்துள்ள ரேஷன் அரிசி விலை உயர்வையும் மக்கள் மீது சுமத்தாமல் தானே ஏற்றுள்ளது தமிழக அரசு. (ரேஷன் அரிசி விலை உயர்வால் மட்டும் கூடுதல் செலவுச் சுமை 300 கோடி ரூபாய்)

தமிழக அரசின் இந்தச் சாதனைக்குக் காரணம் தனியார் முதலீடுகளையும் தொழில் முயற்சிகளையும் ஊக்குவித்து, வரிகளைக் குறைத்து, அதன் மூலம் வரி ஏய்ப்பைத் தவிர்த்து, வரி வசூலைப் பெருக்கியதுதான். அதோடு நிதி நிர்வாகமும் மிக கவனமாகச் செய்யப்பட்டிருப்பதை இந்த பட்ஜெட் காட்டுகிறது. ○

வாழப்பாடி – ராமதாஸ் சூடான மோதலையடுத்து தேசிய ஜனநாயகக் கூட்டணித் தலைவர்களின் கூட்டம் முடிந்த நிலையில், 'இதுதான் கடைசி, இனி வாழப்பாடியைப் பற்றி எதுவும் பேசமாட்டேன்' என்ற முடிவோடு, பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் நம்மிடம் பேசினார்.



"திடீரென்று பா.ம.கவுக்கு எதிரான குரல்கள் எழுந்துள்ளனவே? குறிப்பாக வன்னியப் பிரமுகர்கள் உங்களுக்கெதிராக கூட்டு நடவடிக்கைக் குழு அமைத்திருக்கிறார்களே!

"மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு வேண்டி துவக்க காலத்தில் நடத்திய போராட்டங்களில் உயிரைத் தியாகம் செய்தவர்கள் பா.ம.க. தொண்டர்கள். லட்சக்கணக்கானவர்கள் சிறைக்குச் சென்று, வழக்குகளைச் சந்தித்தார்கள். பல கடுமையான போராட்டங்களுக்குப் பிறகு இட ஒதுக்கீடு அமுல்படுத்தப்பட்டது. ஆனால் இதற்காக மற்ற கட்சிகளில் உள்ள வன்னியர் தலைவர்கள் எங்களுக்கு ஒரு பாராட்டு கூடத் தெரிவிக்கவில்லை. நாங்கள் அடக்குமுறைகளை எதிர்த்து அல்லல்பட்டபோது ஆறுதல் சொன்னதும் இடையாது.

"1996 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்து போட்டியிட எல்லா ஏற்பாடுகளும் முடிந்து விட்டன. வாழப்பாடி என்ன செய்தார்? சிங்கப்பூரில் சன் தொலைக் காட்சிப் பேட்டியில், "ராஜீவ் கொலையில் தி.மு.க.வுக்கு அக்னிப்பரீட்சை செய்ய வேண்டுமென்றார்" அவ்வளவுதான் கூட்டணியிலிருந்து இவரை விடுவித்து விட்டார் கலைஞர். இவருக்காக நானும் வெளியில் வந்தேன். இணைந்து தேர்தலைச் சந்தித்தோம்.

"1998ம் ஆண்டு தேர்தலில் இவருக்காக சேலம் தொகுதியை ஜெயலலிதாவிடம் போராடி பெற்றுக் கொடுத்தேன். 1999ல் இவருக்காக எங்கள் தொண்டர்கள் கடுமையாக உழைத்தார்கள். இவர் தோற்றார் என்றதும் எங்கள் குடும்பமே துக்கமடைந்தது.

"எங்களை தியாகம் செய்து கொண்டு வாழப்பாடியின் அரசியல் வளர்ச்சிக்கு ஒத்துழைத்தோம். இப்போது எங்களைப் பார்த்து சேற்றை வாரி வீசுகிறார். பல்வேறு கட்டங்களில் பல்வேறு காரணங்களுக்காக பா.ம.க.வில் இருந்து வெளியேறியவர்கள் ஒன்றுசேர்ந்திருக்கிறார்கள். இவர்கள் சேர்ந்து ஒரு புத்தகம் போட்டிருக்கிறார்கள். அதற்கு ஐந்து லட்சம் பண உதவி செய்தவர்



"வாயால் கெட்டுப் போகிறார் வாழப்பாடி!"

— சீறுகிறார் ராமதாஸ்!

வாழப்பாடிதான். அதில் உள்ள அத்தனையும் பொய். இவர்களால் பா.ம.க.விலிருந்து ஒரு தொண்டனை கூட வெளியே கொண்டு வர முடியாது. இவர்கள் சென்றால் இவர்கள் நிழல் கூட பின்னால் வராது. அந்த அளவுக்கு மக்கள் "ஆதரவு" பெற்றவர்கள் இவர்கள். இவர்கள் எதிர்க்க, எதிர்க்க என் சக்தி கூடிக் கொண்டே இருக்கும்.

ஒரே இனத்தைச் சேர்ந்த தலைவர்களான நீங்கள் மோதிக் கொள்வது சமுதாயத்தின் வளர்ச்சியை பாதிக்காதா?

"வாழப்பாடி ஜாதிரீதியாக வன்னியராக இருக்கலாம். ஆனால் சமுதாயத்தின் வளர்ச்சியில் அவரது பங்களிப்பு என்ன?"

"வன்னியர் சங்கத் தலைவரான காடு வெட்டி குரு 'வாழப்பாடியின் தலையை வெட்டுவோம்' என்று பேட்டி கொடுத்தது தவறில்லையா?"

"குரு அது போன்று பேட்டி கொடுக்கவில்லை. அவரே மறுப்பு வெளியிட்டிருக்கிறார். பேட்டியைப் போட்ட பத்திரிகையும் மறுப்பை வெளியிட்டிருக்கிறது. அந்த மறுப்பை தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தலைவரான கலைஞருக்கும் அனுப்பியிருக்கிறார். தவறான கருத்துக்களைத் தெரிவிக்கும்போது நாங்கள் மன்னிப்புக் கேட்க சிறிதும் தயங்கியதில்லை."

"இந்தச் சூழ்நிலையில் வாழப்பாடியார் உங்களைக் கடுமையாக தாக்கி வந்ததன் பின்னணி என்ன?"

"அதுதான் எனக்குப் புரியவில்லை. வாழப்பாடியாரின் அரசியல் வரலாற்றை எடுத்துப் பார்த்தால், அவர் வாயில் விழுந்து எழாதவர்கள் இல்லவே இல்லை என்று சொல்லலாம். கலைஞர், மூப்பனார், ஜெயலலிதா ஏன்.. பிரதமராகவும் அவரது கட்சித் தலைவராகவும் இருந்த ராவைப் பற்றிப் பேசாத பேச்சுக்களா? இப்போது என் 'டார்ன்' போலிருக்கிறது. வாயால் கெட்டுப் போகிறார் வாழப்பாடி."

"வாழப்பாடியார் விவகாரத்தைப் பொறுத்தமட்டில் தேசிய ஜனநாயக முன்னணி கூட்டத்தில் உங்கள் நிலைக்கு ஆதரவு இருந்ததா?"

"நான் வாழப்பாடியாரைப் பற்றி

தலைவர்கள் கூட்டம் நடக்கும் வரை எதுவுமே பேசவில்லையே! எனவே எல்லோரும் என் பக்கமுள்ள நியாயத்தைப் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

''தமிழகத்தைப் பொறுத்தவரை என்.டி.ஏ. தலைவர் என்ற முறையில் கலைஞர் வாழப்பாடியாரை முன்னமே கட்டுப்படுத்தியிருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்களா?''

''கலைஞர் கட்டுப்படுத்தியிருக்கலாம். அவர் சொல்லி இவர் (வாழப்பாடி) கட்டுப்படாமலும் போயிருக்கலாம். முன்பு ஒரு முறை என்னைத் திட்டி தாறுமாறாகக் கடிதம் எழுதினார் வாழப்பாடி. கலைஞரிடம் விஷயத்தை எடுத்துச் சென்றேன். இருவரையும் கூப்பிட்டுப் பேசினார் கலைஞர். இதுபோன்று பிரச்னைகள் எழாது என்று உறுதி கொடுத்தவர், பத்து நாட்கள் கழித்து அவரது "வேலையைத்" தொடர்ந்தார்.''

''உங்கள் பா.ம.க. அமைச்சர்கள் பற்றி தனி கோப்பு போட்டு அவர்களது ஊழல்களை வெளிப்படுத்தப் போவதாகவும் அந்த அமைச்சர்களை ஆட்டி வைப்பது உங்கள் மகன் அன்புமணிதான் என்றும் வாழப்பாடியார் சொன்னாரே?''

''அதற்கு எங்கள் அமைச்சர்களே பதில் சொல்லி விட்டார்கள். எல்லாம் அவதூறு! இப்போ சொல்றேன். ஒரு சின்னத் தவறு கூட நடக்கவில்லை என்பதுதான் உண்மை. அன்புமணி அவர் உண்டு; அவரது 'பசுமைத் தாயகம்' அமைப்பு உண்டு என்று செயல்பட்டு வருகிறார்.''

''2006ல் ஆளும்கட்சியாக பா.ம.க. வரும் என்று சொன்னால் கூட சிலருக்கு எரிச்சலாக இருக்கிறது என்று சொன்னீர்கள்... அது பற்றி?''

''ஆமாம் ஸார். மூப்பனார் 2001ல் காமராஜ் ஆட்சி உருவாக்குவேன் என்கிறார். அவரை இணைத்துக் கொள்ள முக்கியக் கட்சிகள் போட்டி போடுகின்றன. தமிழகத்தில் உள்ள 56 கட்சிகளும் 'நாங்கள் ஆட்சிக்கு வருவோம்'னு சொல்றாங்க. ஆனால் பலமுள்ள பா.ம.க. சொல்லும் போது எரிச்சல் அடைகிறார்கள்.''

— ப்ரியன்

படங்கள் : **வெங்கடேஷ்**

சிந்திப்பதானால்
நிதானமாகச் சிந்தியுங்கள்.
செயல்படுவதானால்
உறுதியோடு
செயல்படுங்கள். விட்டுக்
கொடுப்பதானால்
மனநிறைவோடு விட்டுக்
கொடுங்கள்.
எதிர்ப்பதானால், யோசித்து,
திடமாக எதிர்த்திடுங்கள்.
– கோல்டன்

வயலூர் மு. இராமசாமி

கி.வா. ஜகந்நாதன் பங்கேற்ற ஒரு விருந்துக்கு திருவிள்ளைவாரணம் என்ற வேறொரு நண்பரும் வந்திருந்தார். விருந்தில் கேசரியைப் பரிமாற வந்தபோது, வாரணம், "கேசரியா? தயவு செய்து வேண்டாம்... நான் சாப்பிடுவதில்லை" என்றார்.

உடனே கி.வா.ஜ, "இந்த வாரணம் கேசரியைக் கண்டு பயப்படுகிறதே! என்றார்.

வாரணம் என்றால் யானை என்றும், கேசரி என்றால் சிங்கம் என்றும் பொருள்.

– 'கி.வா.ஜ.வின் சிலேடைகள்' நூலிலிருந்து
பா. அச்சுதன்


• கி.வா.ஜ

குளத்தில் மீன்கள் எவ்வளவு தூரத்திலிருந்தாலும், ஓர் இலையைப் போட்டதும், நாலா பக்கங்களிலிருந்தும் அதனிடம் ஓடி வருகின்றன. அது போல நம் மனத் தடாகத்தில் பக்தி சிரத்தையைப் போட்டோமானால் பகவான் அதைத் தேடி ஓடி வருகிறான்.
– இராம. கிருஷ்ணன்



கங்கை நீர் சிறந்தது. அதனினும் சிறந்தது அபிஷேக நீர். அதனினும் உயர்ந்தது கும்பாபிஷேக நீர். அதனினும் உயர்ந்தது ஏழைகளுக்காக உழைக்கும் ஓர் உத்தமனுடைய முகத்தில் துளிர்க்கும் வியர்வை நீர்.
– வாரியார்
பா. குணா

பட்டுப்
புடைவையில் கறை
ஏற்பட்டு விட்டால்,
கறைபட்ட
இடத்தில் சிறிது
யூகலிப்டஸ் தைலம்
தேய்த்தால் கறை
போய்விடும்!
– ஆர். பார்த்திபன்

தொழுபவனுடன்
வசித்தால் நீங்கள்
தொழுவீர்கள்.
இசை மேதையுடன்
வசித்தால் நீங்களும்
பாடுவீர்கள். எனவே,
எப்போதும்
நல்லவர்களோடு
நல்ல
சூழ்நிலையிலேயே
இருங்கள்.
– அரபு பழமொழி
பா. அச்சுதன்

தேங்காய் மூடியைத் தண்ணீரில் வைத்தால், அல்லது மூடியில் சிறிது உப்பைத் தடவி வைத்தால் கெடாமல் இருக்கும்.

தேங்காயைச் சரிபாதியாக உடைக்க, தண்ணீரில் நனைத்து பின்னர் உடைக்க வேண்டும்.
– பா. அச்சுதன்

ஜொலிக்க...

சக்தி ஸ்தலங்கள் மொத்தம் ஐம்பத்து ஒன்று. இவற்றுள் முதலாவது காஞ்சி. ஐம்பத்தோராவது திருமுல்லைவாயில். 'ஐம்பத்தோர்' என்பதே இப்போது அம்பத்தூர் என்று வழங்கப்படுகிறது.
– '100 உண்மைகள்' நூலிலிருந்து:
பா.கு.


தஞ்சை மாவட்டம் ஸ்ரீ வாஞ்சியத்தில் தனிக் கோவிலில் யமதர்மன் தன் கணக்கர் சித்ரகுப்தனோடு அமர்ந்திருக்கிறார்.
– ஆர். பார்த்திபன்



தமிழ்ப் புத்தாண்டுக்கு வெளியாகும் சில படங்கள் பற்றிய ஒரு எக்ஸ்பிரஸ் ட்ரெய்லர்:

ஜேம்ஸ் பாண்டு :

ஜேம்ஸாம், பாண்டுமாக பிரபுதேவாவும், பார்த்திபனும். மும்பையிலிருந்து இறக்குமதியாயிருக்கும் ரேணு என்ற புதுமுகம் பிரபுதேவாவுக்கு ஜோடி! டைரக்ஷன் செல்வா. காமெடிக்கு அதிக முக்கியத்துவமாம். கதை? விடுங்கப்பா!




கண்ணுக்குக் கண்ணாக :

கே. எஸ். ரவிக்குமாரின் அஸிஸ்டெண்டான தயாளன் இயக்கியிருக்கும் படம். ஹென்ரியின் பங்கஜ் புரொடக்ஷன் தயாரிப்பு! முரளிக்குத் தங்கையாக தேவயானி.



அலைபாயுதே :

மணிரத்னம், ஏ.ஆர். ரஹ்மான் கூட்டணி; மாதவன் ஷாலினி ஜோடி. இனிமையான காதல் கதை என்பதை மட்டும் (?!) சொல்லியிருக்கிறார்கள்.



ராஜகாளியம்மன் :

கிராபிக்ஸ் உதவியோட வந்திருக்கிற பக்தி படம்! அம்மனாக ரம்யா கிருஷ்ணன். பச்சை(!) கலரில் வருகிறார். அண்ணன் தங்கையாக வடிவேலு, கௌசல்யா. பக்தி பரவசமூட்டும் படமாம். மருதுவோட கிராபிக்ஸைப் பார்த்து மூக்கு மேல விரல் வைப்பாங்களாம்!

...ரிலீஸ்!



கண்ணால் பேச வா :

அருண்குமார், கவலட்சுமி ஜோடி. புது டைரக்டர் ராஜ்கண்ணா இயக்கியிருக்கிறார். பட்டணத்து ஹீரோ, கிராமத்து ஹீரோயின், லவ் என்று போகிறது ஸ்டோரி. படத்தில் இன்டர்வலாக கவுண்டரும், நெல்சன் மண்டேலாவாக செந்திலும் நடிக்கிறார்களாம்! எதிர்பாராத கிளைமாக்ஸ் என்கிறார் டைரக்டர். நூறு சதவீத காமெடிக்கு உத்தரவாதமாம்!



கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்:

அஜீத், ஐஸ்வர்யாராய், தபு, மம்முட்டி, அப்பாஸ் என்று ஒரே நட்சத்திரப் பட்டாளம். ராஜுவ் மேனன் இயக்கம். சகோதரிகளின் காதல் கதையாம்.

சந்தித்த வேளை :

கண்ணெதிரே தோன்றினாலுக்குப் பிறகு ரவிச்சந்திரன் இயக்கியிருக்கும் படம். கார்த்திக், ரோஜா, கௌசல்யா ஜோடி. தேவா மியூசிக். முக்கோணக் காதல் கதை. க்ளைமாக்ஸ் எதிர்பார்க்காதபடி இருக்குமாம்.

இந்த வரிசையில் விஜயகாந்தின் வல்லரசும்!

– ஏக்ஜி



நடக்குமென்பார் நடக்கும்!




மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

நீங்க கொஞ்சம் அடக்கி வாசிக்க வேண்டிய கட்டாயத்துல இருக்கீங்க. கோபம், பொறாமை, எரிச்சல் இதெல்லாம் இப்ப உதவாது. சாந்த சொரூபியா இருந்தாத்தான் உங்களுக்கு நல்லது. வீண் சண்டைகள்ல மாட்டிக்காதீங்க. கணவன் - மனைவி உறவுல பிணக்கு வரும்போது நீங்க விட்டுக் கொடுங்க. புது வியாபார ஒப்பந்தங்கள், வீடு வாங்கறது, ஷேர் எதுவும் இப்ப வேணாம்.




ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

கிரகங்கள் சாதகமாத்தான் இருக்குது. நினைச்ச காரியம் நடக்கும். சிலர் அவங்க துறைல சாதனை புரியற அளவுக்கு ஜொலிப்பீங்க. எதிரிகள் காணாமப் போயிடுவாங்க. வழக்குகள்ல வெற்றியே கிடைக்கும். வீட்டுல ஒரு நல்ல காரியம் நடக்கும். உறவினர்களால ஆதாயம் உண்டு. பணப் பிரச்னையும் இருக்காது.




மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர் பூசம் 3-ம் பாதம் வரை)*

வாலிப அன்பர்களுக்குத் திருமண யோகம் கூடி வருது. சிலருக்குப் புதிய வேலை கிடைக்கும். வெளிநாடு போற சான்ஸ்கூட வாய்க்கும். பொருளாதார ரீதில பிரச்னை எதுவும் இருக்காது. சிலருக்கு திடீர் வருமானங்கள் - பழைய பாக்கி வசூல் இருக்கும். தன்னம்பிக்கை ஓங்கியிருக்கும்ங்கறதால புதிய முயற்சிகளைத் தாராளமா தொடங்கலாம். எழுத்தாளர்கள் புகழ் பெறுவார்கள். பேச்சுல இனிமை கலந்து இருக்குங்கறதால, எந்தப் பிரச்னையையும் சுலபமா தீர்த்துடுவீங்க.




கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

கிரகங்கள் சுமாராத்தான் உங்களை சப்போர்ட் பண்ணுது. வாரத் தொடக்கத்துல நீங்க எந்தப் புது முயற்சியையும் செய்யக் கூடாது. கடன் வாங்கறதோ ஜாமீன் கையெழுத்துப் போடறதோ கண்டிப்பா கூடாது. வழக்குகள் சாதகமா இருக்காது. முடிஞ்சா வாய்தா வாங்கப் பாருங்க. பெண்கள் வீண் விவகாரங்கள்ல மாட்டிக்கிட்டு அவஸ்தைப் பட நேரும். வெளியூர் பயணங்களைத் தவிர்க்கறது நல்லது.



சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

மதிப்பும் செல்வாக்கும் உயரும் வாரம். உடல் நலன் பத்தின கவலை இருந்தா விட்டுத் தள்ளுங்க. உற்சாகமா வேலையைப் பாருங்க. புதிய பதவிகள், உத்யோக உயர்வுகள்னு சக்கை போடு போடப் போறீங்க. அரசியல்வாதிகளுக்கும் புகழ் கூடும். வியாபார வளர்ச்சி அமோகமா இருக்கும். சிலர் அசையா சொத்துகள் வாங்குவாங்க. அரசுப் பணியாளர்களுக்கு திடீர் அதிர்ஷ்டத்துக்கு வாய்ப்பு உண்டு.



கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*

துணிச்சலான காரியங்கள்ல




மிதுன ராசிக்காரரான டைரக்டர் விக்ரமன் புதிய முயற்சிகளைத் தாராளமா தொடங்கலாம்!

அக்னிசர்மா பக்கம்


ஏப்ரல் 5 முதல் 11 வரை

ஈடுபட்டு வெற்றி அடைவீங்க. மனசுல தன்னம்பிக்கை பொங்கும். எதிரிங்க ஓடி ஒளிவாங்க. வெளிநாட்டுத் தொடர்புள்ளவங்களுக்கு ஆதாயமும் வளர்ச்சிக்கான பாதையும் கிடைக்கும். வேலை வாய்ப்புகள் தேடி வரும். பெண்களுக்குக் கல்யாண நேரம் கூடி வருது. மாணவர்கள், விஞ்ஞானிகள், பத்திரிகையாளர்கள் எல்லாருக்கும் புகழும் பாராட்டும் உறுதி. இரவுப் பயணமோ, நீண்ட நேர கண் விழிப்போ வேணாம். சிலருக்கு அலர்ஜி மாதிரி ஏதாவது வரலாம்.




துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம், 3-ம் பாதம் வரை)*

வியாபாரிகள் தங்கள் தொழில்ல ஏற்றம் பெறுவாங்க. இப்ப உங்களுக்கு நண்பர்கள் உதவ முன் வருவாங்க. பண உதவி தாராளமா கிடைக்கும். அதனால புதிய முயற்சிகள்ல துணிஞ்சி இறங்கலாம். மனசுல சிறு சலனங்கள் இருக்கும். எல்லாம் உங்க திறமை மேல உங்களுக்கே அதிருப்தி இருக்கறதாலதான்! விட்டுத் தள்ளிட்டு முன்னேறும் வழியைப் பாருங்க. எதிர்பாராத பெரிய மனிதர்களோட தொடர்பு இப்ப உங்களுக்கு பாஸிடிவான வாழ்க்கைப் பாதையைக் காட்டக் கூடும்.



விருச்சிகம் : *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

வெளியூர் அல்லது வெளிநாட்டுலேருந்து ஏதாவது நல்ல செய்தி கண்டிப்பா வரும். உல்லாச அனுபவங்களுக்குக் குறைவிருக்காது. கவிஞர்கள், பத்திரிகையாளர்களுக்குப் புதிய வாய்ப்புகளும் பொருளாதார அபிவிருத்தியும் இருக்கும். உடல் ஆரோக்கியம் சீராவே இருக்கும். விளையாட்டுத் துறையினருக்கு வெற்றி வாய்ப்புகள் கூடும். எதிரிங்க காணாமப் போயிடுவாங்க. பெண்களுக்கு மனதுக்கினிய சம்பவங்கள் நடக்கும்.




தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

பயணம் பலன் தரும். பண வரவும் அமோகமா இருக்கும். கருத்துகள்ல கலந்துக்குவீங்க. எதிர்ப்புகள் அடங்கி இருக்கும். சிலருக்கு வீட்டுல கல்யாணப் பேச்சு நடக்கும். தயங்காம பண்ணிக்கங்க. முக்கியமான ஒரு விஷயத்துல முடிவெடுக்க முடியாம தவிப்பீங்க. பெரியவங்களை கன்சல்ட் பண்ணுங்க. ஷேர், வீடு, நிலம் எல்லாமே ஆதாயம் தரத்தான் செய்யும். போட்டி – வம்பு தும்புகள்ல தலையிடாம இருக்கறது நல்லது.




மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

வீடு, மனை வாங்க ஏற்ற வாரம் இது. ஆனா நம்பகமான நபர்களைத் தேர்ந்தெடுத்து அணுக வேண்டியது முக்கியம். இப்ப நீங்க கேட்ட இடத்துல பண உதவி கிடைக்கும்தான். அதுக்காக நிறைய கடன் வாங்கிட்டுப் பின்னால அவஸ்தைப் படாதீங்க. இளைஞர்கள் காதல் கனவுகள்ல மிதப்பாங்க. தப்பில்லை. வேலையிலும் கவனமா இருந்தா சரிதான். பெண்களுக்குப் புடைவை, நகைகள்னு யோகம் அடிக்கப் போவுது. சிலர் வெளிநாடு போற சான்ஸும் இருக்கும்.



கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

கிரகங்கள் சாதகமா இருக்குது. தேக ஆரோக்கியம், பண வரவு, வெளி வட்டாரத் தொடர்பு எல்லாம் சீராக இருக்கும். சொந்த பிஸினஸ் பண்றவங்களுக்கு லாபம் கூடும். வெளிநாட்டு முதலீடு சிலருக்குக் கிடைக்கும். அரசு உத்தியோகஸ்தர்களுக்குக் கொஞ்சம் சிரமதசைதான். மேலதிகாரிங்களோட அதிருப்திக்கு ஆளாகலாம். சமூகப் பணியாளர்களுக்கும் மாதர் சங்க மாமிகளுக்கும் புகழ் உயரும். வீட்ல ஏதோ விசேஷம் நடக்கப் போவுது. எதுக்கும் பண விஷயத்துல சிக்கனமா இருக்கறதே நல்லது.



மீனம் : *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

தெய்வ காரியங்களை நிறைவேற்ற சரியான நேரம். நீண்ட நாள் பிரார்த்தனைகள் பலிக்கும். குழந்தைப் பேறு கிடைக்கும். வெளிநாட்டு வேலை வாய்ப்பும் சிலருக்கு அமையலாம். போட்டிகள்ல வெற்றிதான். விஞ்ஞானிகள் புகழடைவாங்க. சமூகப் பணியாளர்கள், அரசியல்வாதிகள் அளவோடு ஆதாயம் அடைவாங்க. பணப் பிரச்னை இருக்காது. ஆனா பணம் தண்ணியா செலவழியும். சிலருக்கு வெளியூர் டிரான்ஸ்பர் இருக்கும். ●

காச்மூச்!

வி.ஐ.பி. விருப்பம்

ONE & ONLY

பரபரப்பான

3

புதிய பகுதிகள்!

மறக்க விட மாட்டோம்!

— இது தலைப்புதான்!

இந்த சிறப்புப் பகுதியும் உங்கள் நினைவை விட்டு நீங்காது!

இங்கிலீஷ்ல பேசறது செம ஈஸி!

கல்கி

ஏப்ரல் 23

இன்னும் அசத்தல்!

விவேகானந்தா கல்வி நிலைய இயக்குநர்

ராஜகோபால்

எழுதும்



ஆங்கிலமே அருகில் வா!


வாழ்க்கையில் வெற்றிபெற ஒரு 'ஃப்ரண்ட்லி' தொடர் ஆரம்பம்!



சொன்னா நம்பமாட்டீங்க!

'கடல் கன்னி'யின் கோபம்!

அமெரிக்காவில் உள்ள ப்ளோரிடா கடற்கரையிலிருந்து படகில் சென்ற சிலர், கடலில் ஒரு பெண்மணியின் தலை தெரிவதைப் பார்த்து அவளை படகில் இழுத்துப் போட்டுக் கொண்டு கரைக்கு வந்தனர். நன்றி கூறுவதற்குப் பதிலாகப் புலம்பித் தீர்த்து விட்டார் அந்தப் பெண்மணி. "நடுக்கடலில் மூழ்கிய நான் மூன்று நாட்களாகக் கடற்பஞ்சைத் தின்றுதான் வாழ்கிறேன். நீரில் வாழ்ந்தே பழகி விட்டேன். இனி நிலத்தில் என்னால் வாழ முடியாது; ஏதோ கொஞ்சம் காற்றை வாங்கிக் கொள்ளலாம் என்று கடல் மட்டத்திற்கு மேலே வந்தால் உடனே கரைக்கு கூட்டிக் கொண்டு வந்து விட்டீர்களே?" என்று புகார் கூறிய அவரை மருத்துவமனைக்கு அனுப்பினார்கள் மனநிலையை சோதிக்க. "சரியாகத்தான் இருக்கிறார்" என்கிறார்களாம் மருத்துவர்கள்!



மரண மர்மம்!

தென்னாப்பிரிக்காவில் உள்ளது பெலோனோமி மருத்துவமனை. இதன் ஊழியர்கள் ஒரு மர்மத்தின் விடை தெரியாமல் உறைந்து போயிருந்தார்கள். காரணம் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஒரு குறிப்பிட்ட கட்டிலில் படுக்க வைக்கப்படும் நோயாளிகள் இறந்து விடுவதுதான். ஒருவழியாக விடை கிடைத்தது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மருத்துவமனையின் தரையைப் பாலீஷ் செய்வதற்காக வரும் ஊழியர் அறியாமலேயே ஒரு பெரும் முட்டாள்தனத்தை தொடர்ந்து செய்து வந்தார். அந்த வார்டில் நுழைந்தவுடன் ஆக்ஸிஜன் செலுத்துவதற்காக வைக்கப்பட்டிருந்த மின் இணைப்பை நீக்கி விட்டு அதில் தரையைப் பாலீஷ் செய்யும் கருவியின் ப்ளக்கை செருகி விடுவாராம். வேலை முடிந்தவுடன் மீண்டும் பழையபடியே மின் இணைப்பைப் பொருத்தி விடுவார். ஆனால் அதற்குள் அந்த நோயாளியின் கதை முடிந்து விட்டிருக்கும்!

தூக்கத்தில் ஒரு கொலை!

வெனிசுலாவில் வசித்த கார்லோ ஜிமினஸ் என்பவர் மீது மனைவியைக் கொன்றதாக வழக்கு. மனைவியின் சாவுக்கு அவர்தான் காரணமென்பது உண்மை. ஆனாலும் அது மிகவும் தற்செயலாக நடந்த ஒன்று. கட்டிலில் தூங்கிக் கொண்டிருந்த இவர் உருண்டு தரையில் படுத்துக் கொண்டிருந்த தம் மனைவியின் மீது வேகமாக விழ, இவரது கை முட்டிப் பகுதி, மனைவியின் கழுத்தில் விசையுடன் மோதியதில் மனைவி இறந்து விட்டார். இதைத் தற்செயல் என்று ஏற்றுக் கொண்ட நீதிபதி கார்லோவை விடுதலை செய்திருக்கிறார்.

— குல்லூ



பில்லின் மும்பை விஜயத்தில் ஒரு பாலிவுட் மசாலாத்தனம் கலந்திருந்தது. கதாநாயகனை அறிமுகப்படுத்த – (காலில் ஆரம்பித்து முகத்தில் முடிக்க) – ஒரு நீண்ட சஸ்பென்ஸ் இடைவெளி கொடுப்பார்களே – அதுபோல, இவர் விமானம் வந்திறங்கி 15 நிமிடமான பின்னும் ஹீரோ வெளியே வரவில்லை! ஏர்போர்ட் அதிகாரிகளுக்கு வயிற்றுக்குள்ளேயே திரில்லர் படம் ஓட, ஒருவழியாக இருபது நிமிடம் கழித்துத்தான் கதவு திறந்தது. தாமதத்திற்கான காரணம், இன்னும் முடிச்ச விழாத மர்மம்தான்! பில் வரவே

பில்-தில்-ஜில்!



• செல்ஸி

த்ரில்!

அப்புறம் அந்த மேக்-அப்! சுற்று வட்டாரங்களெல்லாம் நாற்றமடிக்கும் குப்பை மேடுகளாயிருக்கையில் – சமயம் பார்த்து பி.எம்.சி. ஊழியர்கள் ஸ்டிரைக் செய்தனரே? – கிளின்டன் செல்ல வேண்டிய பாதை மட்டும் என்ன ஒரு பளபளா? ஜிலுஜிலு? (Bill Clean Town) என்று அமுல் கச்சிதமாக விளம்பரப்படுத்தியிருந்ததே? பாவம், எத்தனையோ மும்பைவாசிகள், ராப்பகலா தெருக்களைச் சுத்தப்படுத்தியிருக்கிறார்கள், பில் கிளின்டனுக்கென்று! நிஜத்தின் நிழலைக் கூட அவர் பார்த்திருந்தால் போதும்... ஸ்டாக் எக்ஸ்சேஞ்சில் மலேரியா பற்றி லெக்சரடித்ததுடன் நிறுத்தியிருக்க மாட்டார்! எப்படியோ கொசு விஷயத்தை கிசுகிசுப்பாகவே கடைசி வரை வைத்து விட்டார்கள்!

பில் வருவதற்கு முன்பே, அவரது சாக்லேட் ப்ரௌன் நாய் பட்டி (Buddy) பற்றி அல்லோலகல்லோலப்பட்டது. தினசரிகளில் 'பில்'லே பொறாமைப்படுமளவு 'பட்டி' புராணம்தான்! வி.ஐ.பிகளிடமெல்லாம் இதன் வருகை பற்றிக் கணிப்பு வாக்கெடுப்பு நடத்தி, நாய்க்கு ஸ்பெஷல் டாய்லெட்டா அல்லது தெருக் கம்ப ஸ்டைலில் ஏதாவது வைக்க வேண்டுமா என்றெல்லாம் கார்ட்டூன் போட்டு வரவேற்பளிக்க, தெருநாய்களா, வளர்ப்பு நாய்களா என்று பட்டிமன்றமே நடத்துமளவுக்கு கலகலத்தார்கள். கடைசியில் பட்டிதான் சுவடே தெரியவில்லையே! பில்லைக் கண்டால் நாயைக் காணோம்!




• கலாநிதி மாறன்

ஸ்டாக் எக்ஸ்சேன்ஞ் அருகே கிளின்டனைக் கண்டதும், ஒரு பெண் படு குஷியாகி, கைவசமிருந்த 'டிஷ்யூ' பேப்பர்களை, ஒவ்வொன்

மும்பையில் கிளின்டன்

தமிழண்ணலின் கடிதம்

“திருவள்ளுவர் சிலன்', 'வள்ளுவரை ஆங்காங்கே கொத்து பரோட்டா போடுகிறார்கள்', 'அறிஞர்கள் அடிதடியில்; அய்யன் நடுத்தெருவில்'- இவ்வாறான வாசகங்கள் திருக்குறளைத் தமிழ் மறையெனப் போற்றும் எங்கள் உணர்வைப் புண்படுத்திவிட்டன.



“பரிசு பெற வேண்டிய எழுத்தாளர்களையெல்லாம் உறுப்பினராகப் போட்டால், அவர்களுக்குப் பரிசும் விருதும் தருவதெப்படி? கலைஞர் தலைமையில் மிக நடுவுநிலைமையோடு செயல்படும் நம்பிக்கை இருக்கிறது. நம் எழுத்தாளர்களின் திறமையை, தில்லியில் உள்ளவர்கள் கண்டு கொள்ளவில்லை. அதனால்தான் ஞானபீட மனைய விருதுகள் தமிழுக்குக் கிடைக்கவில்லை.

தில்லி சாகித்திய அகாதெமி 'இந்திய இலக்கியச் சிற்பிகள்' என வெளியிடுவது போல, 'தமிழ் இலக்கியச் சிற்பிகள்' எனப் பல மொழிகளிலும் ஒரே சமயத்தில் வெளியிட்டு இவர்கள் சிறப்பை உலகறியச் செய்ய வேண்டும். முதல் கூட்டத்திலேயே, மாண்புமிகு முதல்வர், தலைவர் அவர்களிடம் கேட்டு, இவற்றைச் செய்யலாம் என்ற நம்பிக்கை, உறுதி எனக்கு இருக்கிறது” என மிக அழுத்தமாகத் திரும்பத் திரும்பச் சொன்னேன்.

'வியோனி' என் மாணவரல்லர், அதுவும் தவறான செய்தி.

'சின்டு முடியும் வேலை'யை, எளிதில் செய்யலாம். தங்கள் செய்தியாளர்கள், 'இனி யாருக்கும், எந்த இதழுக்கும் பேட்டி அது இது என்று கொடுக்காதே', என எச்சரிக்கை செய்துள்ளார்கள். நன்றி.

'தமிழ்ப் பண்டிதர்கள்' என்று போட்டுப் போட்டு, எங்களைத் தாழ்த்திவிடலாம் என்று தான் அன்றுதொட்டு இன்றுவரை பலரும் முயல்கிறார்கள். நாங்கள் நிலையில் தாழ்வதுமில்லை; தளர்வதுமில்லை. ஏனென்றால் 'நிலையிலிருந்து இழிந்தால், தலையிலிருந்து விழுந்துவிட்ட முடிகளுச் சமமாவாய்' என்று அய்யன் திருவள்ளுவர் சொல்லியுள்ளார். இதை மற்றவர்களும் உணர்ந்தால் நல்லது.

- தமிழண்ணல்,
சென்னை - 33

(வியோனி, ஆய்வுப் படிப்பில் தமது மாணவர் என்று தமிழண்ணல்தான் பேட்டியின் போது குறிப்பிட்டார் என்கிறார் கட்டுரையாளர். - ஆசிரியர்.)

றாக, புறாவைப் போல் பறக்க விட்டுக் கொண்டிருந்தார். டிஷ்யூவை ஒரு இஷ்யூ ஆக்காமல் செக்யூரிட்டிக்காரர்கள் விட்டார்களே!


ராஜஸ்தானத்துப் பெண்களுடன் டான்ஸெல்லாம் ஆடியிருக்கிறாரே என்று, இங்கே ஒபராய் லாபியில், நிலவொளியில், குஜராத்தி உடையில், ஸமீர் தன்னாவின் பாலிவுட் டான்ஸர்கள் சுழன்றுச் சுழன்று டாண்டியா ஆடிக் காட்டினர். ஊஹூம்! பில் தமது 21ம் மாடி அறை பால்கனியிலிருந்து பார்த்து 'ஸ்மைல்' அடித்ததோடு சரி... அதுவும் செல்வி வற்புறுத்தலுக்காக!

இந்தியாவை அடுத்த நூற்றாண்டுக்கு அழைத்துச் செல்லப் போகிறவர்களில் ஒரு ஏழு பேரை ரகசியமாக, கஃபே ரோயலில் சந்தித்தார். இந்த இரானியன் ரெஸ்டாரெண்டுக்காரர் 'அஞ்சு வருஷம் முன்னாடி தானே புதுப்பிச்சேன்?' என்று அதிகமாக அலட்டிக் கொள்ளாமல் இருந்து விட்டார்; (ஆனால் கிளின்டனுடன் ஃபோட்டோ எடுத்து, உணவகத்தில் மாட்டத் தவறவில்லை). சந்தித்த லக்கி ஸெவனில், சன் டீவி கலாநிதி மாறனும் ஒருவர்!

இங்கே 'தில்' இந்தியாவின் எதிர்காலச் சிற்பிகளுடன் டீ குடித்துக் கொண்டிருக்கையில், அங்கே நியூயார்க்கின் ஒரு ரெஸ்டாரண்டில் ப்ரேக்ஃபாஸ்ட் சாப்பிட்டுவிட்டு, வெயிட்ரஸுக்கு டிப்ஸ் வைக்காமல் எழுந்து விட்டார் ஹில்லாரி! அங்குள்ள தினசரிகள் கிழி கிழி என்று இதைக் கிழிக்க, டீவியில், 'ஹிலாரி ஏன் டிப்ஸ் வைக்கவில்லை?' என்று பெரிய டிஸ்கஷன். செனட் தேர்தலில் இவருக்கு எதிராக நிற்கும் மேயரோ முன்னாள் வெயிட்டர்; எக்கச்சக்கமாக டிப்ஸ் வைப்பவர் என்று விஷயம் ஹிலாரிக்கு எதிராக ஓர்க் அவுட் ஆக, ஒரு வெப்சைட் உருவாக்கி, அதில் அந்த சர்வரிணிக்கு, ஆளுக்கொரு டாலர் 'அன்பளிக்க' வேண்டுகோள் விடுக்கும் வரை போய்விட்டது! டென்ஷனில் ஹிலாரி மறந்திருப்பார் என்று அவர் ஆதரவாளர்களும் அவமானப்படுத்துவதற்கென்று எதிராளிகளும் டாலர்களைக் குவிக்க, ஆயிரம் டாலர்கள் வசூலாகி விட்டது! இந்த விஷயங்களெல்லாம் பில்லை டென்ஷனாக்கி இந்திய வெயிட்டர்களுக்கு நிறைய டிப்ஸ் தர வைத்துவிட்டதாம்!

— ஜெயஸ்ரீ ராஜ்

பெரியாரின் வட்டத்திலிருந்து நான் வெளியே வந்து விழுந்து விட்டேன் என்றால் அவர்கள் ஏதோ என்னை வெளியே தூக்கியெறிந்து விட்டார்கள் என்று அர்த்தமல்ல. நான் கூட்டுப் புழு பருவத்திலிருந்து மாறிச் சிறகடித்த போது நானே அப்படி



நான் நாத்திகனில்லை – 13

பேராசிரியர் பெரியார்தாசன்

நடிக்காமல் போலி தத்துவம்!

வந்து விழுந்து விட்டேன். அப்போது பெரியார் காலமாகிச் சில ஆண்டுகளும் முடிந்திருந்தன.

அப்போதெல்லாம் நான், எனது கல்லூரித் தோழரும் பிறகு வங்கி வேலைக்குப் போய் விட்டவருமான ராஜேந்திர பாபு என்னும் நண்பரோடு விவாதித்துக் கொண்டிருப்பேன். நான் பிறந்த அகரம் பகுதியில், முன்னிரவில் கடைகளெல்லாம் அடைக்கப்பட்ட பிறகு, அங்கே உட்கார்ந்து நீண்ட நேரம் பேசிக் கொண்டிருப்போம். அப்போது எங்களுக்குச் சிறிது தூரத்தில் உட்கார்ந்தபடி ஐம்பது வயதுக்கு மேற்பட்ட ஒரு பெரியவர் நாங்கள் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டுக் கொண்டிருப்பார்.

சில நாட்களுக்குப் பிறகு, எங்களுக்கும் அவருக்கும் இடையில் பழக்கமும் நட்பும் ஏற்பட்டது. குருபூஷணம் என்பது அவர் பெயர். பெரியாரின் மேல் மிகுந்த பற்றுக் கொண்டவர். எனது பேச்சுக்களில் ஈர்க்கப்பட்ட அவர், தமது அற நெறி மன்றத்தின் சார்பில் ஒரு கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தார். காந்தி ஞாபகார்த்த மண்டபத்தில் 'வ.உ.சியும் பகுத்தறிவும்' என்கிற தலைப்பில் நான் பேசினேன். அதுதான் எனது முதல் கூட்டம்!

அது வெற்றிகரமாக அமைந்து விட்டதால், அகரத்திலும் அதன் அருகிலும் என்னை அழைத்துப் பேசச் சொன்னார்கள். அப்படியே மெல்ல மெல்ல வடாற்காடு

மாவட்டம் வரை கூட்டங்கள் பேச ஆரம் பித்தேன்.

அப்படியொரு முறை ஜோலார்ப்பேட்டையில் நான் பேசியதைக் கேட்ட கே. கே. சின்னராஜ் என்பவருக்கு என் மீது மிகுந்த அன்பு வந்து விட்டது. பெரியார் கட்சிக்காரர் அவர். 'பெரியாரின் கருத்துக்களையும் தத்துவங்களையும் இத்தனை செழுமையாகப் பேசுகிறாயே' என்று சொல்லி, அவர் பல கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தார்.

அவரால் இன்னும் சில கட்சிக்காரர்களுக்கு நான் அறிமுகமானேன். அவர்களும் என்னைப் பேச அழைத்தார்கள். நான் பேசும் கூட்டங்கள் பற்றி 'விடுதலை'யில் செய்திகளாகவும் வரும். எனவே நான் தி.க.வில் உறுப்பினராகக் கூட இல்லை என்கிற நிலையிலும் நான் அக்கட்சியின் பேச்சாளனாகவே பல இடங்களிலும் அறியப்பட்டேன்.

"குருவை மிஞ்சிய சிஷ்யர்கள்!"

“விவேக் இங்க வாடா... இவன் என்னையே கிண்டல் பண்ணுவான். வஸந்த் நீயும் வா; இவங்க ரெண்டு பேரையும் என் சிஷ்யர்கள்னு சொல்றதுல ரொம்ப பெருமை படறேன். என்னையும் தாண்டி எங்கேயோ



• வஸந்த், கே.பி, விவேக்

போயிட்டிருக்காங்க” – 'அப்பு' பாடல் கேசட் வெளியீட்டு விழாவில் முதல் கேசட்டை வெளியிட்ட கே.பி. இப்படி உரிமையோடு(!) அழைத்து இருவரையும் புகழ்ந்து தள்ள, ஏற்கெனவே கூச்ச சுபாவமுள்ள வஸந்த் அநியாயத்துக்கு வெட்கப்பட்டுப் போனார்!

– கிங்

படம் உதவி: நிகில்

நான் பெரியாரை வர்ணிக்கிறபோது, 'இந்தச் சமூகத்தில் நடக்கிற கொடுமைகளுக்கு எதிராக ஒரு சிங்கத்தைப் போல் எழுந்து வந்தார் பெரியார். எப்படிப்பட்ட சிங்கத்தைப் போல் தெரியுமா?

'மாரி மலை முழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து
வேரி மயிர்பொங்க எப்பாடும் பேர்ந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
போதருமா போலே...' என்று ஆண்டாள் வர்ணிப்பதைப் போல அவர் புறப்பட்டார் என்று பேசுவேன்.

இப்படியெல்லாம் நான் அவ்வப்போது தலைவர்களைப் பற்றிப் பேசினாலும் எனது மொத்தப் பேச்சில் தலைவர்களை விட அதிகமாக தத்துவத்தைப் பற்றித்தான் பேசுவேன். என்பதால் அது சிலருக்குப் பிடிக்காமல் போனது. அதன் விளைவு திடீரென்று ஒருநாள் எனக்குத் தெரிய வந்தது.

திருச்சிக்கு அருகில் உள்ள திருவெறும்பூரில் எனது கூட்டத்துக்கு ஏற்பாடாகியிருந்தது. அதற்காகச் சென்னையிலிருந்து அங்கே செல்வதற்காக ஐம்பது ரூபாயையும் அனுப்பியிருந்தார் ஒரு தோழர். நானும் ஒப்புக் கொண்டு விட்டேன். பிறகு அவர், 'கூட்டத்துக்கு வராமல் போய் விடாதே! அப்படிச் செய்து விட்டால் இங்கே என்பாடு திண்டாட்டமாகி விடும். எனவே கண்டிப்பாக வந்து விடு!' என்று எனக்கு நினைவூட்டல் கடிதம் ஒன்றையும் அனுப்பியிருந்தார்.

நானும் அந்தக் கூட்டத்துக்காக பஸ்ஸைப் பிடித்துப் போய்ச் சேர்ந்தேன். சாப்பாட்டுச் செலவு, திரும்பி வருவதற்கான செலவு ஆகியவற்றைத்தான் கூட்டம் ஏற்பாடு செய்திருந்தவர்கள் கவனித்துக் கொள்வார்களே என்கிற தைரியத்தில், ஐம்பது ரூபாயில் வழிச் செலவு போக மீதிக்குப் புத்தகம் வாங்கி விட்டேன். (அண்மையில் நடந்த புத்தகக் கண்காட்சியில் கூட பத்தாயிரம் ரூபாய்க்குப் புத்தகம் வாங்கினேன்) அதனால் டீ குடிக்கக் கூட என்னிடம் காசில்லை என்கிற நிலையில்தான் திருவெறும்பூரிலுள்ள அந்தத் தோழரைப்

போய்ப் பார்த்தேன். ஆனால் அவரோ என்னைக் கண்டு கொள்ளவேயில்லை. சரி, கவனிக்க வில்லை என்று மறுபடியும் வணக் கம் சொன்னேன். அப் போதும் என்னைக் கண்டுகொள்ள வில்லை.



இந்த நிலையில் தான் சுந்தரராஜன் என்கிற இன்னொரு நண்பரைச் சந்தித்தேன். அவர்தாம் எனக்கு டீ வாங்கித் தந்து, சாப்பாடும் வாங்கித் தந்து சென்னை திரும்புவதற்கான வழிச் செலவையும் தந்துதவி னார். காரணம், என்னை வைத்துக் கூட்டம் நடத்தக் கூடாது என்று கட்சியி லிருந்து அந்தத் தோழருக்குச் செய்தி அனுப் பப்பட்டிருந்ததுதான்! அந்தத் தோழர் என்னைக் கண்டுகொள்ளாமல் போன வருத்தம் ஒருபுறம் இருந்தாலும் தாம் சார்ந்த இயக்கத்துக்குக் கட்டுப்பட்டு அவர் என் னைப் புறக்கணித்த விதம் என்னை வியப் பிலாழ்த்தவும் செய்தது.

ஏறத்தாழ இதே சமயத்தில் கட்சியி லிருந்து வெளியேற்றப்பட்டிருந்த ஆனை முத்து அவர்கள் 'பெரியார் சம உரிமைக் கழகம்' என்று தனி இயக்கம் ஒன்றைத் தொடங்கியிருந்தார். பெரியாரின் பேச்சுக் களையெல்லாம் தொகுத்து அதைப் பெரி யாரிடமே படித்துக் காட்டி, அவரது ஒப்பு தலைப் பெற்று நூலாக வெளியிட்டவர் என்கிற முறையில் ஆனைமுத்து அவர்களி டம் எனக்கு மிகுந்த மரியாதை உண்டு. அவரைச் சந்திக்க நேர்ந்த போது அவருக் கும் என் மேல் மரியாதையும் எனது பேச் சுக்களில் ஈடுபாடும் இருப்பதை உணர்ந் தேன். அதன் காரணமாக, பெரியாரின் தத்து வங்களைச் சாதாரண மக்களிடம் எடுத்துச் செல்கிற எனது பொதுக் கூட்டப் பணி மீண்டும் தொடர ஆரம்பித்தது.

ஏராளமான கூட்டங்களில் நான் பேச வேண்டியிருந்ததால், என்னால் சில கூட்டங்களுக்குப் போக முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. அதோடு எனது ஆசிரியர் தொழிலையும் செய்ய வேண்டியிருந்ததால் மிகுந்த சிரமமாக இருந்தது.

இதற்கு என்ன தீர்வு என்று யோசித்த போது, பெரியார் சொன்னதையே எடுத்துக் கொண்டேன். தொழில், குடும்பம், இயக்கம் என்று வரிசைப்படுத்திக் கொண்டு அதன் படி செயல்பட வேண்டும் என்று பெரி யாரே சொல்லியிருக்கிறார். எனவே, நான் தொழிலுக்கு முதலிடமும் குடும்பத்துக்கு இரண்டாமிடமும் கூட்டங்களுக்கு மூன்றாமிடமும் கொடுக்க ஆரம்பித்தேன்.

இதனால், ஆனைமுத்து அவர்கள் என்னி டம் எதிர்பார்த்த அளவுக்கு என்னால் கூட் டங்களில் கலந்து கொண்டு பேச முடியாமல் போய் விட்டது. இந்த நிலை தொடர்வது நல்லதல்ல என்று கருதினேன். அதனால் மெல்ல மெல்ல கூட்டங்களைக் குறைத்துக் கொள்ள ஆரம்பித்தேன். எனது இக்கட் டான நிலைமையை அவர்களும் உணர்ந்த தால் என்னை வற்புறுத்தி அழைப்பதை அவர்களும் நிறுத்திக் கொண்டு விட்டார் கள்.

என்றாலும் ஆனைமுத்து அவர்களின் எதிர்பார்ப்பை என்னால் பூர்த்தி செய்ய முடியவில்லையே என்கிற குற்ற உணர்வு இன்னமும் என்னிடம் இருப்பதால், அவரை நேரில் சந்திப்பதைக் கூட தவிர்த்து வருகிறேன்.

இப்படிப்பட்ட பெரியார்தாசனான நான் எப்படி சித்தார்த்தன் ஆனேன்?

(தொடரும்)

டாக்கியான் அணுவிண்கலம் வங்காள விரிகுடாவில் விழுந்து மிதந்தது. கீழ்க் கதவைத் திறந்து கடலுக்குள் வெளிப்பட்டான் சத்யா. மனித அம்பாய் கடலின் மேல் மட்டம் பாய்ந்தான்.

கடல் நீர் நீல நிறத்திலிருந்து மரகத பச்சை நிறத்துக்கு மாறியிருந்தது. கடல் வாழ் உயிரினங்களை அறவே காணவில்லை. 'என்ன நடந்திருக்கிறது இங்கே!'

'ஜுபிடர் கிரகத்தில் இரு வருடம் தங்கி ஆராய்ச்சி செய்யப் போனோம். பூமியின் தரை நிலையத்துடன் தகவல் பரிவர்த்தனை நடந்தது. பின் அறுந்தது. வெறும் தொழில் நுட்பக் கோளாறு என்றல்லவா நினைத்தேன்! ஆனாலும் திட்டமிட்டபடி மீதி காலமும் இருந்து ஆராய்ச்சி முடித்தேன்; பூமி திரும்பினேன். இங்கு கடல்வாழ் உயிரினங்களே இல்லையென்றால் - மற்ற உயிரினங்கள்!- குறிப்பாக மனிதர்களின் கதி!' விண்வெளி ஆடையை உதறிவிட்டு மெரினா கடற்கரைக்கு நீந்தினான் சத்யா.

கடற்கரை மணலில் மக்கிப் போன சடலங்கள் - மனிதர்கள், வளர்ப்பு மிருகங்கள், காகம், கழுகு போன்ற பறவைகள்.

காமராஜர் சாலைக்கு வந்தான். ஆங்காங்கே மனிதர்கள் வாகனங்களில் அமர்ந்தபடி மக்கிப் போயிருந்தனர்!

காற்று மண்டலத்தில் மையமான துர்நாற்றம்.

சத்யா பதற்றமானான். "கடவுளே!" வானம் வெடிக்கக் கூவினான்.

தனது அபார்ட்மெண்ட் இருக்கும் தி. நகர் வெங்கட்நாராயணா சாலைக்கு ஓட ஆரம்பித்தான்.

வழியெங்கும் சடலக் குவியல்கள். தனது பிளாட்டுக்கு ஓடினான்.

வரவேற்பறை சோபாவில் அமர் நிலையில் மனைவி ரோஜா சடலமாய். மூன்று சக்கர வண்டியில் ஆறு வயது மகன்!

முகத்தில் அறைந்து கொண்டு கதறினான் சத்யா.

ஏறக்குறைய அரைமணி நேரம் அழுது தீர்த்தான். பின் மெதுவாக மனைவியின் சடலத்தை நெருங்கினான்.

அவளது மடியில் மைக்ரோ வீடியோ ரிக்கார்டர். பேட்டரியால் இயங்குவது.

'எனக்கு எதாவது கடைசிச் செய்தி அதில் பதித்து வைத்திருப்பாளோ காதல் மனைவி!'

எடுத்தான்.

பொத்தானை அமுக்கினான்.

இயங்க மறுத்தது. பேட்டரி இருக்கும் பக்கம் 'தொப் தொப்' எனத் தட்டினான். வீடியோ ரிக்கார்டர் உயிர்த்தது.

டாப் ஆங்கிளில் மனைவியின் முகம் டைட் குளோஸப்பில்.

ரோஜா கவலை படர்ந்த முகத்துடன் பேச ஆரம்பித்தாள்.

"அன்பு சத்யாவுக்கு.

காதல் முத்தங்கள் பல.



ஆர்னிகா நாசர்

கடைசி மனிதன்

இன்று தேதி 01.03.2010 காலை மணி 10:20:48. பழமைவாதம் பேசி தீவிரவாதம் வளர்க்கும் பில்லியனர் நஷிமாவைத்தான் நீங்கள் அறிவீர்களே?

அவனது அட்டூழியம் போன மாதம் எல்லை மீறி விட்டது. நியூயார்க்கில் இருக்கும் சுதந்தர தேவி சிலையை ஏவுகணை செலுத்தி சிதறடித்து விட்டான்.



பதிலுக்கு அமெரிக்காவின் விமானப் படை ஆப்கானுக்குள் புகுந்து ஒரே நாளில் 90000 வீரர்களை இழந்து நஷிமாவைக் கொன்றது. ஆப்கானை நிர்மூலம் செய்தது. அத்துடன் இல்லாமல் நஷிமா சடலத்தை வாஷிங்டனில் நடுரோட்டில் கட்டித் தொங்க விட்டது.

பழமைவாதம் பேசும் அரபு நாடுகளுடன் பாகிஸ்தான், சீனா, லிபியா சேர்ந்து கொண்டன. வெள்ளை மாளிகை மீது குண்டு மழை.

அமெரிக்காவுக்கு ஆதரவாக இந்தியா, ரஷ்யா, பிரான்ஸ், ஜெர்மனி, இங்கிலாந்து போன்ற நாடுகள்.

மூன்றாம் உலகப்போர் ஆரம்பித்து விட்டது.

நாள்தோறும் கோடிக்கணக்கானோர் பலி. சேதாரம் அரபு நாடுகளுக்கு அதிகம். கண்டம் விட்டு கண்டம் தாக்கும் ஏவுகணைகளால் பாதி பாகிஸ்தானை இந்தியா அழித்தொழித்திருந்தது.

அரபு நாடுகள் அலறின.

தொடர்ந்து தாக்கினால் கிருமியுத்தம் செய்வோம் என அறிவித்தன. ஒரு புதுவித கிருமியைக் கண்டு பிடித்திருப்பதாக மிரட்டின. மனித வெடிகுண்டு போல, தாக்கிய உயிரினத்தைக் கொன்று விட்டு தானும் சாகும் தற்கொலை கிருமிகளாம் இவை. பெயர் – 'DHANU 2010'

அரபு நாடுகளின் மிரட்டலை அமெரிக்கா சார்ந்த நாடுகள் கண்டு கொள்ளவில்லை.

நானும்தான்.


மனிதகுலம் மட்டுமல்ல

பூமியின் ஒட்டு மொத்த உயிரினங்களையும் ஒரே ஒரு நிமிட அவகாசத்தில் அழித்தொழிக்கும் தாக்குதலை அரபு நாடுகள் எந்த தருணத்திலும் செய்...யா...து!... செய்! ச...த்...யா! (ஈனமான அலறல்) மகளே ப....பக்கத்ல.... வா....கா...காத்ல ஏ... ஏதோ விபரீத வா.... வாசனை ப..பரவுதே! (பேச்சு நின்று மூச்சுத் திணறல் தொடர்கிறது) க்....க்....க்விக்.... க்விக்.....(ஓசைகள் ஆயிரம் திசைகளிலிருந்தும் (பின் உயிர் கரைத்த கிசுகிசுப்புக் குரல்) சத்யா என் உயிரே!...."

பின் மரண அமைதி ரோஜா முகத்தில் உறைகிறது.

பதிவு முடிந்து மானிட்டர் பொர பொரத்தது. 'ஆஃப்' பொத்தானை அழுத்தினான் சத்யா.

அடுக்கடுக்கான அதிர்ச்சியில் உலறைந்து போயிருந்தான். இனி அழக் கண்ணீரில்லை.



"யோவ், ஆபீசுக்கு வந்து திங்கள் முதல் வெள்ளி வரை மௌன விரதம்னு ஜாடை காட்டுறியே... இது உனக்கே நல்லாயிருக்கா?"

— லட்சுமி பிள்ளை

இப்போதும் அந்த 'தனு-2010' காற்று மண்டலத்தில் காணப்படுமா? வைரஸ் மீட்டரை இயக்கினான். 'STERILE ATMOSPHERE' என பதில் வந்தது. கைக் கடிகாரத்திலுள்ள உலக ஜனத்தொகை மீட்டரை அழுத்தினான்.

ஹக்!

சத்யா ஜுபிடருக்குப் பயணம் போகும்போது எண்ணூறுகோடி!

இப்போது–

டிஜிட்டல் எண்கள் மின்னின.

000000001

உலகின் கடைசி மனிதன் நான்தானா!

அடுத்து என்ன செய்வது! மனைவி மகள் சடலங்களைப் புதைக்க வேண்டும்.

சூரிய சக்தி மின்சாரம் தயாரிக்க வேண்டும். உணவுக்காளான் விளைவிக்க வேண்டும்.

கிருமி தாக்க முடியாத ஆழ்துளை கிணறு நீர் சேகரிக்க வேண்டும்.

'சோகத்திலும் ஒரு சாதனை... உலகின் கடைசி மனிதன் நான்தான்... பிரபஞ்ச சரித்திரத்தில் முதலும் கடைசியுமான திகில் சாதனை! அலறலாய்ச் சிரித்தான். அவனது சிரிப்பைப் பார்க்க யாருமில்லை; அங்கீகரிக்க யாருமில்லை; பதிலுக்குச் சிரிக்க ஆளில்லை!

அப்போதுதான் அது நடந்தது!

ஹ!

கதவு தட்டப்பட்டது.

தலையை உலுக்கி காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டான் சத்யா. இதயம் 'தொம் தொம்' என்றது.

மீண்டும் கதவு பலமாகத் தட்டப்பட்டது.

துள்ளி எழுந்தான் சத்யா.

டாமிட் டாமிட் டாமிட்! உலகின் கடைசி மனிதன் நானல்ல; இன்னொரு மனிதன் அல்லது மனுஷி அல்லது ஏதாவது மிருகம் இருக்கிறான்/ள்/து.

திறப்போமா, வேண்டாமா?

மீண்டும் கதவு தட்டப்பட்டது.

தாளாமல் கதவை நோக்கி நடந்தான் சத்யா.

'மேஜிக் ஐ' மூலம் வந்திருப்பது யாரென பார்த்தான்.

Miming பண்ணுபவர்கள் முகத்தில் பெயின்ட் பண்ணியிருப்பார்களே... அதனைப் போல வந்தவனும் முகத்தில் வர்ணங்கள் பூசியிருந்தான்.

கதவைத் திறந்து அந்நியனை அனுமதித்தான் சத்யா.

வந்தவன் "ஹேய்... யார் நீ?"

"நான் சத்யா. நீ?"

"நான் தியோடர். நீ எப்படி உயிர் தப்பித்தாய்?"

"இரு வருடம் ஆராய்ச்சிக்காக ஜுபிடர் கிரகம் போயிருந்தேன். அதனால தப்பித்தேன். நீ?"

"நா... நான் அ...அதே இரு வருட ஆராய்ச்சிக்காக செவ்வாய்க்கிரகம் போயிருந்தேன்..."

"முகத்ல என்ன பெயின்டிங்?"

"ஜஸ்ட் ஃபன்!"

"பூமியே இடுகாடாய் கிடக்கும்போது உனக்கென்ன ஃபன் வேண்டிக்கிடக்கு!"

சிரித்தான் தியோடர்.

"நடப்பு நிமிஷத்ல பூமில உயிரோட இருக்கிறது நாம ரெண்டு பேர்தானா? இல்ல... இன்னும் புதன் கிரகத்துக்கு ஆராய்ச்சிக்குப் போன ஆசாமி தரை திரும்ப வேண்டியிருக்குமா?"

தியோடர் தன் கை கடிகாரத்திலுள்ள ஜனத்தொகை மீட்டரை அமுக்கினான்.

0000000002

"யாரும் இனி வரப் போவதில்லை!"

தியோடரும் சத்யாவும் எதிர் எதிரே அமர்ந்தனர்.

"தியோடர்! நான் ஒரு மரபியல் பொறியியல் விஞ்ஞானி. நீயும் நானும் சேர்ந்து முதலில் நமது சுற்றுப்புறத்தை சுத்தப்படுத்துவோம். கானான் விளைவிப்போம். குடிநீர் சேமிப்போம். சூரிய சக்தி மின்சாரம் உற்பத்தி செய்வோம்... எப்படியாவது உயிரினங்களை மீண்டும் உருவாக்குவோம்."

"நிறுத்து நிறுத்து... உன் பேத்தலை!"

"என்ன சொல்ற!"

"மூன்று மணி நேரத்துக்கு முன்னாடி இருந்த தியோடர் வேற... இப்ப இருக்கற தியோடர் வேற. நடப்பு நொடிக்குத்தான் வாழ்ந்து ஆவணும். எனக்கு உலகின் கடைசி மனிதன்னு பெருமை வேணும். நீ உபரியா இருக்கறது என் தலை மீது விண்கல் விழுந்தது போலிருக்கிறது. ஆங்காரமும் கொலை வெறியும் நரித்தனமும் பூக்கின்றன. உன்னிடம் கூட்டணி வைக்க உண்மையில் நான் தயாரில்லை. நீ இல்லாமலேயே நான் தன்னந்தனியாக நான் விரும்பும் உலகம் நிர்மாணித்துக் கொள்வேன். யோசித்து முடிவெடுத்து விட்டேன். நீ சாகவேண்டும்..." பேண்ட் பாக்கெட்டிலிருந்து கத்தியை எடுத்தான். காற்றில் விசிறினான் தியோடர்.

கத்தி ராஜநாகத் தலையாய்ப் பளபளந்தது.

துள்ளி விலகினான் சத்யா.

"வேண்டாம்... வேண்டாம்... சொல்றதைக் கேளு... சொல்றதைக் கேளு.... வேணாம்... 'பூமியின் கடைசி மனிதன்'ற பெருமையை நானும் கூட விரும்பினேன்தான். ஆனா தெளிவா யோசிச்சுப் பார்த்தா அது முட்டாள்தனமா தெரியுது. தனிமை கொடூரமானது. ஒட்டு மொத்த உலகமும் உனக்குச் சிறையாகிவிடும். மூச்சிரைக்க நீ முன்னூறு வருஷம் ஓடினாலும் இந்த பூமி தாண்டி உனக்கு விடுதலை கிடைக்காது. நீ என்னைக் கொல்லாம விட்டாயானால் நான் உனக்கொரு சலுகை செய்கிறேன். நீ எனக்கு தலைவனாக இரு; நான் உனக்கு அடிமையாக ஊழியம் செய்கிறேன்!"

"நீ என்னடா எனக்குச் சகாயம் பண்றது! நீ கொடுக்க யாசகம் பெறும் நிலையில் நானில்லை..."

"கெஞ்ச கெஞ்ச மிஞ்சுகிறாயே... தியோடர்!" மின்னலாய்ப் பாய்ந்து தானும் ஒரு கத்தியை எடுத்துக் கொண்டான் சத்யா. "போர்ல ஜெயிக்கும் திறன் உள்ளவன்தான் மொதல்ல எதிரிகிட்ட சமாதானம் பேசுவான். நானும் அப்படியே. இவ்வளவு தூரம் வாதிட்ட பிறகு வன்முறைதான் தீர்வாகத் தெரிகிறது. வா, மோதிப் பார்ப்போம்!"

கத்திகளுடன் இருவரும் ஒருவர் மீது ஒருவர் பாய்ந்தனர்.

ஒரு தங்க நொடியில் சத்யாவின் கத்தி தியோடரின் நடு நெஞ்சில் செருகி மீண்டது. இரத்தம் பீய்ச்சியடித்தது. தியோடர் பின்னுக்குச் சிதறி மல்லாந்தான்.

ஹிஸ்டரிகலாய்க் கத்தினான் சத்யா. "சொன்னேனே...கேட்டியா? இனி நானே உலகின் கடைசி மனிதன்!... விரும்பியோ விரும்பாமலோ.... "இரு கைகளை உயர்த்தி ஆட்டினான். இரண்டாவது திருப்பம் நிகழ்ந்தது.

கையில் கத்தியுடன் இரத்த வெள்ளத்தில் கிடந்த தியோடர் மறைந்து மறைந்து தெரிந்தான். கண்களை கசக்கி தலையை உதறி சத்யா பார்க்க 'தியோடர்' மறைந்தான். சத்யாவின் நடு நெஞ்சில் வலி. தடவிப் பார்த்தான். இரத்தம். இரத்தம்!

அப்படியென்றால்... அப்படியென்றால்... நடந்தது?

அதீத கவலையான மனநிலையில் நாமே ஒரு கற்பனை மனிதனை வரவழைத்திருக்கிறோம். தியோடரும் நானே. நானே இரு மனிதனாய்ப் பிரித்துப் பேசி சண்டையிட்டு இருக்கிறேன். எனது கெட்ட குணம் Vs நல்ல குணம். தியோடரை காயப்படுத்துவதாக நினைத்து என்னை நானே உயிர்க்காயப்படுத்தி இருக்கிறேன். மரணத்தருவாயில் தெளிவான மனநிலை மீண்டிருக்கிறது. கடவுளே! நான் உயிர் பிழைக்க வேண்டுமே?...'

இரத்தப் பெருக்கை நிறுத்த முயன்றான். பிரயோஜனமில்லை. அறைக்குள் உயிர் காக்கும் மருந்து தேடினான். கிடைக்கவில்லை.

'படித்த முட்டாள் நான்!'


சரிந்தான் சத்யா.

உயிரின் கடைசி நொடிகளில் அல்லாடினான்.

அப்போது மெய்யாலுமே கதவு தட்டப்பட்டது. இளம்பெண் குரல் வினவியது. "உள்ளே யாராவது உயிருடன் உண்டா?"

பதில் சொல்ல முயன்று தோற்றுக் கொண்டிருந்தான் சத்யா.

கதவுத் தட்டல் தொடர்ந்தது!




"வாஸ்து சாஸ்திரம் படிச்சுட்டுத்தான் தலைவர் தூங்குவாரா... ஏன்?"

"கனவுலே ஆகாயக் கோட்டை கட்டுறாராம்!"

– தஞ்சை தாமு

புத்தாண்டு விருந்துக்கு புத்தம் புதிய விருதுகள்!



வளமையும் புதுமையும் பூத்துக் குலுங்க வரும் தமிழ்ப் புத்தாண்டை மகிழ்ச்சியுடன் கொண்டாட உங்கள் உறவினர்களையும் நண்பர்களையும் விருந்துக்கு அழையுங்கள். உங்கள் விருந்தோம்பல் பண்பாட்டை கௌரவிக்க ஸ்ரீராம் சிட்ஸ் பல்வேறு சீட்டுத் திட்டங்களையும் பரிசுகளையும் விருதுகளாக வழங்குகிறது. புதிய யுகத்தின் தேவைகளுக்கு ஏற்ப பல்வேறு திட்டங்களும் புதிய பரிசுகளும் உங்களுக்காகக் காத்திருக்கின்றன.

விருந்து என்பது உணவு வகைகளைப் பகிர்ந்து கொள்வது மட்டுமல்ல. உணர்வு நிலைகளைப் பகிர்ந்து கொள்வதும் தான். உங்கள் நண்பர்களிடம் ஸ்ரீராம் சிட்ஸ் நிறுவனத்துடன் உங்கள் உறவு பற்றியும் அதனால் நீங்கள் பெற்ற உயர்வு பற்றியும் எடுத்துச் சொல்லுங்கள். அவர்களையும் ஸ்ரீராம் சிட்ஸ் சந்தாதாரர்களாக மாற்றுங்கள். சீட்டுத் திட்டங்களில் சேருபவர்களுக்கு S.S.C.B மினி கடாய் முதல் செயில் (SAIL) பிக்னிக்மேட் வரை கண்கவர் பரிசுகள் உள்ளன. இன்றே உங்கள் அருகிலுள்ள ஸ்ரீராம் சிட்ஸ் கிளைக்கு வாருங்கள். இனிய தமிழ்ப் புத்தாண்டை இணையற்றதாக்க இணைந்து செயல்படுவோம்.









ஸ்ரீராம் சீட்டு சேமிப்பு

மார்ச்12-ஏப்ரல்13, 2000











புது யுகத்தை வரவேற்க முரசு கொட்டும் பரிசுத்திட்டங்கள்


திட்டம்			சீட்டு மதிப்பு	சந்தாதாரர் பரிசுகள்
ரூ.250	X	40 மாதங்கள்	ரூ. 10,000	S.S.C.B. மினி கடாய்
ரூ.500	X	30 மாதங்கள்	ரூ. 15,000	S.S. டபுள் டெக்கர் டிபன் பாக்ஸ்
ரூ.625	X	40 மாதங்கள்	ரூ. 25,000	டிராவல் பேக்
ரூ.500	X	60 மாதங்கள்	ரூ. 30,000	S.S. பைனாப்பிள் டிஷ்
ரூ.1,000	X	50 மாதங்கள்	ரூ. 50,000	கனி சாஸ்பேன் (மூடி இல்லாமல்)
ரூ.2,500	X	30 மாதங்கள்	ரூ. 75,000	C.B. நான்ஸ்டிக் ஃப்ரைபேன்(மூடியுடன்)
ரூ.2,500	X	40 மாதங்கள்	ரூ. 1,00,000	செல்லோ விஷர் 2500 மி.லி.
ரூ.5000	X	30 மாதங்கள்	ரூ. 1,50,000	கனி ஃபேன்ஸி சாஸ்பேன் (மூடியுடன்)
ரூ.5000	X	40 மாதங்கள்	ரூ. 2,00,000	மில்டன் பிளாட் தாவா 305 mm
ரூ.10,000	X	30 மாதங்கள்	ரூ. 3,00,000	செல்லோ கிஃப்ட் செட்
ரூ.12,500	X	40 மாதங்கள்	ரூ. 5,00,000	செயில் (SAIL) பிக்னிக் மேட்

நுழைவுக் கட்டணம் தனி. முன் அனுமதி பெறப்பட்டது.

நேரடியாக சீட்டில் சேரும் சந்தாதாரருக்கும் சந்தாதாரர் பரிசு உண்டு.

பலரைச் சீட்டில் சேருங்கள்.
பரிசை வீட்டில் சேருங்கள்!

அறிமுகப் படுத்துவோர்க்கும், சீட்டு மதிப்புக்கு ஏற்ப ஸ்ரீபெட் ஜார் முதல் S.S. ரைஸ் பாட் வரை அறிமுகப் படுத்துவோர் பரிசுகள் உள்ளன.



*அறிமுகப் படுத்துவோர் பரிசுகள் தற்போதைய சந்தாதாரர்களுக்கு மட்டுமே.

ஸ்ரீராம் சிட்ஸ்

கையளவு சேமிப்பு. கடல் அளவு செழிப்பு.

ஸ்ரீராம் சிட்ஸ் தமிழ்நாடு லிமிடெட்

சுப்ரமணியன் பில்டிங்,1 கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை 600002 போன்: 8514833-40

WORDCRAFTS

இன்டர்வெல்...

வெற்றிகரமான முதல் படத்துக்குப் பின்னும் அடுத்த அறிவிப்பு வெளியிட நீண்ட காலம் எடுத்துக் கொண்ட இளம் இயக்குனர்களை அணுகி, இவ்வளவு இன்டர்வெல் ஏன் என்று கேட்டோம்.

எழில் (துள்ளாத மனமும் துள்ளும்) : கொஞ்சம் பெரிய இடைவெளிதான். போன வருடம் பொங்கலுக்கு முதல் படம் ரிலீஸ் ஆச்சு. இப்போ 2000 ஜனவரியோட ஒரு வருஷம் ஆயிடுச்சு. தயாரிப்பாளர்கள் நிறையப் பேர் தேடி வந்தாங்க. ஆனா நான் ரொம்ப நிதானித்தேன். ஏன்னா இது 12 வருஷம் கஷ்டப்பட்டுத் தேடின வாய்ப்பு. முதல் படம் சூப்பர் ஹிட் ஆகணும்கிற வெறியில ஒர்க் பண்ணினேன். அதே போல ஒவ்வொரு படத்துக்கும் ஒர்க் பண்ணி ஜெயிக்கணும். அதுல கிடைக்கிற ஆத்மதிருப்திதான் பெரிய சொத்து. இது நானா எடுத்துக்கிட்ட தேவையான இடைவெளி.

இப்போ சரத்குமார், புதுமுகம் ஜெயாஸ்ரீ காம்பினேஷன்ல 'பெண் மனதைத் தொட்டு' எடுத்துக்கிட்டு இருக்கேன். கிட்டத்தட்ட முடிஞ்சிடுச்சு. மே மாதம் ரிலீஸ். லவ் சப்ஜெக்ட். சரத்துக்கும் எனக்கும் திருப்பு முனையா இருக்கும்னு நம்பறேன்.



• எழில்



• சசி



• துரை

ரவிச்சந்திரன் (கண்ணெதிரே தோன்றினாள்) :

எனக்குத் தயாரிப்பாளரோ கதையோ பஞ்சமில்லை. நடிகர்கள் கால்ஷீட்தான் இங்கே சகலமும். வழக்கமான பிரச்னைகளும் இதோடு சேர்ந்து கொள்கின்றன. சினிமா இருக்கிறவரை ஒவ்வொரு காலத்துலேயும் ஒரு பிரச்னை இருந்துகிட்டேதான் இருக்கு. இப்படியொரு சூழ்நிலையில இடைவெளி ஒரு விஷயமே இல்லை. நாம எவ்வளவு பெரிய இடைவெளி எடுத்துக்கிட்டாலும் அதை நம்ம எடுக்கிற படத்தோட தரம் ஃபில் பண்ணணும். அப்போதான் அதுக்கு ஒரு அர்த்தம் இருக்கும். கார்த்திக்கை வெச்சு பண்ணியிருக்கிற 'சந்தித்த வேளை' தமிழ்ப் புத்தாண்டு ரிலீஸ். இன்னொரு பக்கம் பிரசாந்த் – ஜோதிகா நடிக்க 'மஜ்னு' அடுத்த படம். படப்பிடிப்பு தொடங்கிட்டேன். அறுபது நாள்ல முடிச்சுடுவோம். இனி எங்கிட்டே இருந்து அடிக்கடி படம் எதிர்பார்க்கலாம், அதே தரத்தோடு!

சசி (சொல்லாமலே) : புது இயக்குனர்களுக்கு, இப்போ தெலுங்கு சினிமாவும் ஒரு வரம் கொடுக்கிற சாமியாயிடுச்சு. 'சொல்லாமலே' முடிஞ்சவுடனே புதுசா தமிழ்லதான் அடுத்த படம் கொடுக்கணும்னு முடிவு செஞ்சேன். ஆனா சௌத்ரி சார், இதையே தெலுங்குல செய்யச் சொன்னார். மறுக்க

முடியலை. தெலுங்கு பீல்டுல அப்படி என்னதான் இருக்குன்னு ஹைதராபாத் போனேன். அப்புறம் தான் தெரிஞ்சுது, அது எவ்வளவு பெரிய மார்க்கெட்டுன்னு. ஆந்திரா மாநிலத்துல மாவட்டங்கள் அதிகம். தமிழ்நாட்டுல ஒரு படம் முடிஞ்சதும் சாதாரணமா எழுபது காப்பிதான் பிரிண்ட் போடுவாங்க. ஆனா அங்க குறைஞ்சது நூறு காப்பி போடுறாங்க. அங்க திருட்டு விசிடி, வீடியோ இந்தத் தலைவலி அறவே கிடையாது. அதுக்குக் காரணம் அங்கே ஃபாரின் ரைட்ஸ் கொடுக்கிறதில்ல. தெலுங்கு சினிமாவுக்கு உலக மார்க்கெட் இல்லேங்கறது உண்மை. ஆனா ஃபாரின் ரைட்ஸ்ல கிடைக்கிற வருமானத்தை உள்ளூரிலேயே எடுத்துடுறாங்க.

தெலுங்கு பீல்டுல இன்னொரு பெரிய ப்ளஸ், அங்க ஆர்டிஸ்ட், டெக்னீஷியன் சம்பளம் ரொம்ப நியாயமா இருக்கு... என்னோட அடுத்தப் படம் தமிழ்தான். அஜீத் நடிக்கிறார். சீக்கிரமே அறிவிப்பு வரும்.



• ரவிச்சந்திரன்

• பாலா

பாலா (சேது) :

புதிய இயக்குனர்களுக்கு இடைவெளி விழுவது எதனால் என்பதை விட, இடைவெளி எடுத்துக் கொள்வது எதனால்? என்று சிந்திப்பது நல்லது. பெயர் கிடைத்தவுடன் காற்றுள்ள போதே தூற்றிக் கொள் என அவசரக் கோலத்தில் அள்ளித் தெளிப்பது இங்கே கூடாது. இது பல ஆயிரம் குடும்பங்களோட வாழ்க்கை! எனவே நிதானம் ரொம்ப அவசியம். வருடத்திற்கு ஒரு படமென்றாலும் அது வெற்றிப் படமாக அமைய வேண்டும் என்பது தான் எனது கொள்கை. அந்தக் கொள்கையை மேலும் கொஞ்சம் தாமதப் படுத்துவது போல ஹீரோக்களின் கால்ஷீட் ஒரு பிரச்னையாக இருப்பது உண்மை. இதுபோன்ற பிரச்னைகள் சினிமாவை சுவாசிப்பவனுக்கு ஒரு பொருட்டே அல்ல. எனது அடுத்தப் படம் தயாரிப்பாளர் பூர்ணசந்திரராவுக்கு ஒப்புக் கொண்டிருக்கிறேன். பாரதிராஜாவுக்காக 'மனோஜை' இயக்கப் போகிறேன். அது இந்த வருடக் கடைசியில் தான்.

துரை (முகவரி) :

சினிமாவால ரொம்ப இழப்புகள். குடும்பத்துக்காக நாம எதுவும் செய்ய முடியாம போயிடுமோங்கிற பயத்துல அடிக்கடி நான் என்னையே கேள்வி கேட்டுக்குவேன். அதையே அடிப்படையா வெச்சு உருவாக்கினதுதான் முகவரி. இவ்வளவு கஷ்டமான சினிமால முதல் படம் சக்சஸ் கொடுத்த பிறகு ரொம்ப நிதானமா ஒவ்வொரு அடியையும் வைக்கணும்னு முடிவு செய்துட்டேன். அதனால முகவரி படத்தோட தெலுங்கு ரீமேக்கை முதல்ல முடிச்சுட்டு அதுக்குப் பிறகுதான் தமிழ்... இப்போதைக்கு தெலுங்கு வேலைகள்ல ரொம்ப பிசி.

தொகுப்பு : **விஷுவல்தாசன்**



முப்பத்து ஐந்தாம் அத்தியாயம்

சக்கரவர்த்தியின் கோபம்

அமரர் கல்கி

மந்தாகினியை மற்ற அரண்மனைப் பெண்டிர் சிற்ப மண்டபத்தில் கண்டுபிடித்த சமயத்தில் சக்கரவர்த்திக்கும் முதன் மந்திரிக்கும் கடுமையான வாக்குவாதம் நடந்துகொண்டிருந்தது.

மலையமான் மகள் அங்கிருந்து சென்றவுடனேயே முதன் மந்திரி அநிருத்தர் "மன்னர் பெரும! பெண்மணிகள் இருக்கும்போது சில விஷயங்கள் சொல்லக்கூடாது என்றிருந்தேன். இப்போது அவற்றைச் சொல்லித் தீர வேண்டியதாயிருக்கிறது. வீர பாண்டியனுடைய ஆபத்துதவிகள் இன்னமும் இந்த நாட்டில் மறைந்து திரிந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய கொடுமையான சபதத்தை நிறைவேற்றுவதற்குத் தக்க சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்" என்றார்.

"இது ஒன்றும் புதிதில்லையே? எனக்குத் தெரிந்த செய்திதானே? பழுவேட்டரையர்கள் அந்தக் காரணத்தைக் கொண்டே எனக்கு இத்தனை பலமான பாதுகாப்பு ஏற்படுத்தியிருக்கிறார்கள் அல்லவா?" என்று சக்கரவர்த்தி ஏளனச் சிரிப்புடன் கூறினார்.

"ஆபத்துதவிகளின் விஷயம் தங்களுக்குத் தெரிந்ததுதான். ஆனால் அந்தச் சதிகாரர்களுக்குச் சோழ சாம்ராஜ்யத்தின் பொக்கிஷத்திலிருந்தே பொருள் உதவி கிடைத்து வருகிறது என்பது தங்களுக்குத் தெரிந்திருக்க முடியாது!" என்றார் முதன் மந்திரி.

"ஆகா! இது என்ன கட்டுக்கதை!" என்றார் சுந்தர சோழர்.

"இதைக் காட்டிலும் பிரமிப்பான கட்டுக்கதைகள் சிலவற்றையும் தங்களுக்கு நான் சொல்ல வேண்டியிருக்கிறது. பெரிய பழுவேட்டரையரின் பொக்கிஷ நிலவறையிலிருந்து புதிய பொற்காசுகள் ஆபத்துதவிகள் கூட்டத்தின் மத்தியில் குவியலாகக்

கொட்டப்பட்டிருந்தன. கண்ணால் பார்த்தவனாகிய என் சீடன் திருமலை இதோ இருக்கிறான். தாங்கள் பணித்தால் அதைப் பற்றி விவரமாகச் சொல்லுவான்..."

"வேண்டியதில்லை. தலைமுறை தலைமுறையாகச் சோழ குலத்துக்காக உயிரைக் கொடுத்து இரத்தம் சிந்தி வந்தவர்கள் பழுவேட்டரையர்கள். அவர்கள் என்னைக் கொல்லுவதற்காகச் சதி செய்யும் கூட்டத்திற்கு என் பொக்கிஷத்திலிருந்து பொற்காசு கொடுக்கிறார்கள் என்று அரிச்சந்திரனே வந்து சொன்னாலும் நான் நம்பமாட்டேன்."

"மன்னிக்க வேண்டும். பழுவேட்டரையர்கள் மீது அத்தகைய துரோகக் குற்றத்தை நான் சுமத்தவில்லை. அவர்களுக்குத் தெரியாமலே சதிகாரர்களுக்கு நம் பொக்கிஷத்திலிருந்து பொற்காசுகள் போகலாம் அல்லவா?"

"அது எப்படி முடியும்? யமன் அறியாமல் உயிர் போகக் கூடுமா, என்ன?"

"யமன் ஒருவேளை கிழப் பருவத்தில் இளமங்கை ஒருத்தியை மணம் செய்து கொண்டிருந்தால் அதுவும் சாத்தியமாகலாம், அரசே!"

"பெரிய பழுவேட்டரையர் இந்தப் பிராயத்தில் கலியாணம் செய்துகொண்டது எனக்கும் பிடிக்கவில்லைதான். அதை அவரிடமே சொல்லியிருக்கிறேன். அதற்காக இம்மாதிரியெல்லாம் அவர் மீது துரோகக் குற்றம் சுமத்துவதை என்னால் சகிக்க முடியாது."

"சக்கரவர்த்தி! பழுவேட்டரையர் மீது நான் துரோகக் குற்றம் சுமத்தவில்லை. அவர் மணந்துகொண்ட இளையராணி மீதுதான் சுமத்துகிறேன்."

"ஆண் பிள்ளைகள் மீது குற்றம் சுமத்துவதையாவது பொறுத்துக்கொள்ளலாம். துர்ப்பாக்கியவதியான அபலைப் பெண் ஒருத்தியின் மீது நீர் குற்றம் சுமத்துவது எனக்கு நாராசமாயிருக்கிறது."

"எவ்வளவு நாராசமாக இருந்தாலும் பழுவூர் இளையராணியைப் பற்றிய சில உண்மைகளைத் தங்களுக்கு நான் சொல்லியே தீர வேண்டும். ஒரு தடவை தங்களுக்கு நான் ஓர் உண்மையைச் சரியான சமயத்தில் சொல்லாதது பற்றி எவ்வளவோ வருத்தப்பட நேர்ந்தது. சற்று முன் தாங்களும் கோபித்துக்கொண்டீர்கள். ஆகையால் சிறிது பொறுமையாகக் கேட்க வேண்டும்."

மதன் மந்திரியின் இந்தச் சாமர்த்தியமான வார்த்தைகளைக் கேட்டுச் சக்கரவர்த்தி புன்னகை புரிந்தார். "என் வார்த்தையைக் கொண்டே என்னை மடக்குகிறீர்கள். அது என் சொந்தக் காரியம். அதற்கும் இதற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. ஆயினும் சொல்லுங்கள், கேட்கிறேன்" என்றார்.

"பழுவூர் பெரிய அரண்மனைக்கு மூன்று வருஷங்களுக்கு முன்னால் இளையராணி நந்தினி தேவி வந்து சேர்ந்தாள். அது முதல் பழுவூர் அரண்மனைக்குச் சில மந்திரவாதிகள் அடிக்கடி வந்து போகிறார்கள். இது சின்னப் பழுவேட்டரையருக்கும் தெரியும். அவருக்கும் மந்திரவாதிகள் வருவது பிடிக்கவில்லை. ஆனாலும் தமையனை எதிர்த்துப் பேசத் தைரியமில்லாமல் சும்மா இருந்து வருகிறார்."

"சகோதரர்கள் என்றால், இப்படியல்லவா இருக்க வேண்டும்?"

"சகோதர விசுவாசத்தினால் இராஜ்யத்துக்குக் கேடு வரக் கூடாதல்லவா?"

"இப்போது இராஜ்யத்துக்கு என்ன கேடு வந்துவிட்டது? ஒரு பேதைப் பெண் யாரோ மந்திரவாதிகளைக் கூப்பிட்டு மந்திரம் போடச் சொல்வதினால் இராஜ்யம் கெட்டுப் போய் விடுமா? பழுவூர் இளையராணி மந்திரம் போட்டுத்தான் எனக்கு நோய் வந்துவிட்டதென்று சொல்லுகிறீர்களா?"

"சக்கரவர்த்தி! பழுவூர் இளையராணியைப் பார்க்க வருகிறவர்கள் உண்மையில் மந்திரவாதிகள் அல்ல. மந்திரவாதிகள் என்று சொல்லிக்கொண்டு வரும் சதிகாரர்கள் என்று சந்தேகிக்கிறேன். அவர்கள் மூலமாக நம் பொக்கிஷத்திலிருந்து பொருள் போய்க் கொண்டிருக்கிறதென்றும் சந்தேகிக்கிறேன்..."

"எதைப் பற்றி வேணுமானாலும் யாரைப் பற்றி வேணுமானாலும் சந்தேகிக்கலாம். ருசு ஏதேனும் உண்டா?"

"மன்னர் மன்ன! இன்றைய தினம் பெரிய பழுவேட்டரையரின் அரண்மனையையும் பொக்கிஷ நிலவறையையும் சோதனை போட்டால் ஒருவேளை ருசுக் கிடைக்கலாம்."

"இதைக் காட்டிலும் எனக்குப் பிரியமில்லாத காரியத்தை இதுவரை யாரும் சொன்னது கிடையாது. அநிருத்தரே! நீர் எனக்கு மட்டும் நண்பர். பழுவேட்டரையர் எனக்கு முன் மூன்று தலைமுறையைச் சேர்ந்த சோழ சக்கரவர்த்திகளுக்கு உயிருக்குயிரான

நண்பர். சோழ குலத்துக்கு இரும்புக் கவசம் போன்றவர். சோழர்களின் பகைவர்களுக்கு இந்திரனுடைய வஜ்ராயுதம் போன்றவர். அப்படிப்பட்டவருடைய மாளிகையை அவர் இல்லாதபோது சோதனை போடுவதா? பழுவேட்டரையர் தம் அரண்மனையில் சதிகாரர்களுக்கு இடங் கொடுக்கிறார் என்று நம்புவதைக் காட்டிலும், மலையமான் மகள் மருந்து என்று சொல்லி எனக்கு நஞ்சைக் கொடுக்கிறாள் என்று நம்புவேன்..."

"சக்கரவர்த்தி! பழுவேட்டரையருக்குத் தெரிந்து இது நடைபெறவில்லை. மோகத்தினால் கண்ணிழந்திருக்கும் பழுவேட்டரையருக்குத் தம் எதிரில் நடப்பதும் தெரியவில்லை. அவர் அறியாமலே அவருடைய மாளிகை சதிகாரர்களின் தலைமை ஸ்தலமாக இருந்து வருகிறது. பழுவூர் இளைய ராணியே சதிகாரர்களோடு சேர்ந்தவள் என்று நம்புவதற்கு இடமிருக்கிறது."

"அந்தப் பேதைப் பெண்ணைக் குறித்து இன்னும் என்ன அவதூறு சொல்லப் போகிறீர்கள்?"

"சில நாளைக்கு முன்பு திருப்புறம்பயம் காட்டில் பிருதிவீபதியின் பள்ளிப்படைக்கு அருகில் நள்ளிரவு வேளையில் மகுடாபிஷேக வைபவம் ஒன்று நடந்தது. ஒரு ஐந்து வயதுப் பிள்ளையைச் சிங்காதனத்தில் உட்கார வைத்துப் பாண்டிய மன்னன் என்றும் சோழ சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தி என்றும் பட்டம் சூட்டினார்கள். இந்த மகுடாபிஷேக வைபவத்தில் கலந்து கொண்டவர்கள் சோழ குலத்தை அடியோடு நிர்மூலம் செய்வதாகவும் சபதம் எடுத்துக் கொண்டார்கள்..."

"முதன் மந்திரி! இந்தச் செய்தியைச் சொல்லி என்னைப் பயப்படுத்தலாம் என்று உத்தேசமா? என் கை கால்கள் நடுங்குமென்று எதிர்பார்த்தீரா?"

"இல்லை, சக்கரவர்த்தி, இல்லை! அந்தக் கேலிக் கூத்தை நான் ஒரு பொருட்டாக எண்ணவில்லை. அப்படிச் சபதம் எடுத்துக் கொண்ட சதிகாரர் கூட்டத்தில் பழுவூர் இளைய ராணியும் இருந்தாள் என்பதைத் தங்களிடம் சொல்ல விரும்பினேன்."

"அதையெல்லாம் அருகில் இருந்து பார்த்துவிட்டு வந்து தங்களுக்குத் தெரிவித்த புத்திசாலி ஒற்றன் யார்? அதோ நிற்கிறானே, தங்களுடைய அருமைச் சீடன், அவன்தானே?"

"எல்லாம் நடந்து முடிந்த பிறகு இவன் அங்கே போய்ச் சேர்ந்தான். நேரில் பார்த்தவன் வாணர்குலத்து வந்தியத்தேவன்..."

"இங்கே ஒருதடவை வந்து விட்டுத் தப்பி ஓடிப் போனானே, அந்த ஒற்றனையா சொல்லுகிறீர்?"

"அவன் ஒற்றன் அல்ல, பிரபு! தங்கள் திருக்குமாரர் ஆதித்த கரிகாலரின் அந்தரங்



சத்துக்குரிய நண்பன்."

"கரிகாலனுக்கு இப்படிப்பட்ட அந்தரங்க நண்பர்கள் எத்தனையோ பேர். ஒருவர் சொன்னது போல் இன்னொருவர் சொல்ல மாட்டார்கள். அவன் கூறியது உண்மையாகவே இருக்கட்டும். அதற்காக இப்போது செய்யக்கூடியது ஒன்றுமில்லை. பெரிய பழுவேட்டரையரும் இங்கே இல்லை; அவருடைய இளையராணியும் இல்லை. அவர்கள் திரும்பி வந்த பிறகு விசாரித்துக் கொள்ளலாம். முதன் மந்திரி! பழுவூர் இளைய ராணியைப் பற்றி நீங்கள் சொல்லச் சொல்ல, அத்தகைய அதிசயமான பெண்ணைப் பார்க்க வேண்டும் என்று எனக்கே ஆர்வமுண்டாகி விட்டது. பழுவேட்டரையர் கலியாணம் செய்து கொண்டு வந்தபோது எனக்கு ஏற்பட்ட அருவருப்பினால் அந்தப் பெண்ணை என் முன்னால் அழைத்து வர வேண்டாம் என்று சொல்லியிருந்தேன். அதனாலேயே அவளுக்கு ஒருவேளை என் பேரில் கோபம் உண்டாகி விட்டதோ என்னமோ தெரியவில்லை. பெரிய பழுவேட்டரையர் இம்முறை திரும்பி வந்ததும் அவருடைய இளைய ராணியை அழைத்து வரச் செய்து அவளுடைய கோபத்தைத் தீர்க்கப் போகிறேன்..."

"சக்கரவர்த்தி! நான் விரும்புவதும் அதுதான். நந்தினி தேவியின் கோபத்தைத் தணிப்பதற்கு இன்னும் முக்கியமான காரணங்களும் இருக்கின்றன. நந்தினி வந்து சேரும் வரையில் ஈழத்து அரசி நமது அரண்மனையிலே இருப்பதற்கு அனுமதி தர வேண்டும்..."

"ஆகா! அவளை ஈழத்து அரசியாக முடி சூட்டி விட்டீர்கள் அல்லவா? போகட்டும்; அவளுக்கும் பழுவூர் ராணிக்கும் என்ன சம்பந்தம்?"


"அதைத்தான் கண்டுபிடிக்க வேண்டும், பிரபு! இருவரும் நேருக்கு நேர் சந்தித்தால் ஒருவேளை அந்தச் சம்பந்தம் தெரிய வரலாம். நந்தினி தேவி சோழ குலத்தின் மீது கொண்டிருக்கும் பகையும் ஒருவேளை மாறலாம்..."

"மந்திரி! ஒரு பெண்ணின் பகையைக் குறித்து நீங்கள் இவ்வளவு கவலைப்படுவது ஆச்சரியமாயிருக்கிறது..."

"நந்தினி தேவியின் பகையைக் குறித்துக் கவலைப்படக் காரணம் இருக்கிறது. அதை நான் சொல்வது உசிதமாயிருக்குமா என்று அஞ்சுகிறேன்..."

"தாங்கள் சொல்லத் தயங்குவதை வேறு யார் என்னிடம் சொல்ல முடியும்? மிச்சம் வைக்காமல் சொல்லி விடுங்கள்" என்றார் சக்கரவர்த்தி.





முதன்மந்திரி சிறிது யோசனை செய்து விட்டுக் கூறினார்:-

"மன்னர் பெருமானே! இப்போது நான் கூறப்போவது மிகச் சிக்கலான விஷயம். தங்களுக்கு அது உகந்ததாயிருக்க முடியாது. ஆயினும் பொறுமையுடன் கேட்க வேண்டும். நந்தினி தேவியையும் மந்தாகினி தேவியையும் பார்த்தவர்கள் அனைவரும் அவர்களுடைய தோற்றத்தின் ஒற்றுமையைக் குறித்து அதிசயிக்கிறார்கள்..."

"உலகத்தில் இப்படி எத்தனையோ அதிசயங்கள் இருக்கின்றன. ஒரு மரத்தைப் போலவே இன்னொரு மரம் இருக்கிறது. ஒரு பைத்தியத்தைப் போல் இன்னொரு பைத்தியம் இருக்கிறது..."

"ஆனால் ஒரு மரம் இன்னொரு மரத்தைப் போல வேஷம் போட்டு நடிப்பதில்லை. ஒரு பைத்தியம் இன்னொரு பைத்தியத்தின் ஆவியைப் போல வந்து சக்கரவர்த்தியை இம்சிப்பதில்லை..."

"என்ன சொல்கிறீர், முதன் மந்திரி?"

"மந்தாகினி தேவியின் ஆவி தங்களை இரவு நேரங்களில் வந்து இம்சிப்பதாக எண்ணித் தாங்கள் வேதனைப்பட்டு வந்தீர்கள்..."

"அவளுடைய ஆவி வரவில்லை, அவளே வந்தாள் என்று சொல்லுகிறீரா?"

"இல்லை, இல்லை. பழுவூர் இளையராணி, மந்தாகினியின் ஆவியாக நடித்துத் தங்களை இம்சித்திருக்க வேண்டும் என்று சொல்கிறேன்."

சுந்தர சோழர் சிறிது நிமிர்ந்து உட்கார்ந்து, கோபவெறி பொங்க, "நீங்கள் இப்போது சொல்வது மட்டும் உண்மை என்று ஏற்பட்டால், அந்த ராட்சஸியை என் கையினாலேயே கழுத்தை நெரித்து..." என்று கூறுவதற்குள், முதன் மந்திரி குறுக்கிட்டு, "வேண்டாம். சக்கரவர்த்தி! தங்கள் வாயால் அப்படியொன்றும் சபதம் கூற வேண்டாம்!" என்று பரபரப்புடன் சொன்னார்.

"ஏன்? அவள் பேரில் என்ன தங்களுக்கு அவ்வளவு இரக்கம்? என்னை அவ்வளவு தூரம் வேதனைப்படுத்தியவளை என்ன செய்தால்தான் என்ன?" என்று சுந்தர சோழர் பொங்கினார்.

"எவ்வளவுதான் கஷ்டப்படுத்தியிருந்தாலும், கஷ்டப்படுத்தியவர் நெருங்கிய பந்துவாயிருக்கும் பட்சத்தில்... ஒருவேளை சொந்தப் புதல்வியாயிருக்கும் பட்சத்தில்..." என்று முதன் மந்திரி கூறித் தயங்கி நின்றார்.

"முதன் மந்திரி! இது என்ன பிதற்றல்?" என்றார் சுந்தர சோழர்.

"சக்கரவர்த்தி! தங்களுடைய பொறுமையை உண்மையில் சோதித்து விட்டேன். அதற்காக எனக்கு உசிதமான தண்டனையைக் கொடுங்கள். ஆனால் நந்தினி தேவியைத் தண்டிப்பது பற்றிப் பேச வேண்டாம். நந்தினி தேவி தனாதிகாரி பழுவேட்டரையரின் இளையராணி மட்டும் அல்ல; மூன்று உலகமும் உடைய சுந்தர சோழ சக்கரவர்த்தியின் புதல்வி. அவரை எந்தக் குற்றத்துக்காக யார்தான் தண்டிக்க முடியும்?" என்றார் அநிருத்தப் பிரம்மராயர்.

இதைக் கேட்ட சக்கரவர்த்தி சிறிது நேரம் முதன் மந்திரியை அளவிலாத வியப்போடு உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார். பிறகு கலீர் என்று சிரித்தார்.

"சக்கரவர்த்தி! இன்றைக்கு மிகவும் ஸுதினம். இரண்டு தடவை தாங்கள் சிரிக்கக் கேட்டேன்" என்றார் அநிருத்தர்.

"பிரம்மராயரே! இந்த அரண்மனையில் இப்போது ஒரு பெண் பைத்தியந்தான் இருக்கிறது என்று நினைத்தேன். நீர் அவளை விடப் பெரிய பைத்தியம் என்று இப்போது அறிந்தேன். அவள் பேசாத ஊமைப் பைத்தியம்; நீர் பேசிப் பிதற்றும் பைத்தியம்!" என்று கூறி விட்டுச் சுந்தர சோழர் மறுபடியும் நினைத்து நினைத்துச் சிரித்தார்.

முப்பத்து ஆறாம் அத்தியாயம்

பின்னிரவில்

சுந்தர சோழரின் சிரிப்பு ஒலி கேட்டுக்கொண்டிருக்கும்போதே பெண்மணிகள் அங்கு வந்தார்கள். முன்னால் மகாராணியும், அவளுக்குப் பின்னால் குந்தவை ஒரு பக்கமும் வானதி ஒரு பக்கமும் பிடித்து இழுத்துக் கொண்டு வர மந்தாகினியும், அவர்களுக்கும் பின்னால் பூங்குழலியும் ஒரு தாதிப் பெண்ணுமாக ஊர்வலம் போல வந்தார்கள். சுந்தர சோழரின் சிரிப்பு அவர்களுக்கும் சிறிது குதூகலத்தை உண்டு பண்ணியிருந்தது. மந்தாகினி அவரை ஒருகணம் நிமிர்ந்து பார்ப்பதும் மறுகணம் குனிந்து தரையைப் பார்ப்பதுமாயிருந்தாள். அவளுடைய அலங்காரம் இப்போது பூரணம் அடைந்திருந்தது. குந்தவைப் பிராட்டி அலங்காரக் கலையில் இணையில்

லாத தேர்ச்சி பெற்றவள் என்று அந்தக் காலத்தில் புகழ் பெற்றிருந்தாள். அதற்காகவே சிற்றரசர்கள் தங்கள் மகளிரை இளையபிராட்டியின் தோழியாயிருப்பதற்குப் பழையாறைக்கு அனுப்புவது வழக்கம். குந்தவை தன் முழுத் திறமையையும் ஊமை ராணியை அலங்கரிப்பதில் பயன்படுத்தியிருந்தாள். அடி உள்ளத்தில் தோன்றிய ஏதோ ஓர் உருத் தெரியாத உணர்ச்சியினால் மந்தாகினியின் தலைக் கூந்தலை நந்தினியைப் போல் ஆண்டாள் கட்டுடன் அலங்கரித்திருந்தாள். இந்த அலங்காரம் முடிந்ததும் பெண்கள் எல்லாருக்குமே அவள் தத்ரூபமாக நந்தினியைப் போலிருந்தது தெரிந்துவிட்டது. காட்டிலே அலைந்து திரிந்த தேக ஆரோக்கியமுள்ள மாதரசியாதலால் பிராயத்திலே இருந்த இருபத்தைந்து வருஷ வித்தியாசம் கூடத் தெரியவில்லை.

மற்றப் பெண்மணிகள் மந்தாகினி தேவியைச் சிறிது பெருமையுடனேயே அழைத்துக் கொண்டு வந்தார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணத்தினால் பெருமை கொண்டிருந்தார்கள்.

இந்தச் சரித்திரம் நிகழ்ந்த நாட்களில் தமிழகத்துப் பேரரசர்களும் குறு நில மன்னர்களும் பல மனைவியரை மணப்பது சகஜமாயிருந்தது. ஓயாமல் போர்கள் நடந்தவண்ணமாயிருந்தன. அரசிளங் குமரர்களோ போர்முனையில் எப்போதும் முன்னணியில் இருந்தார்கள். ஆகையால் குலம் நசிக்காமல் பாதுகாப்பதற்காக அரச குலத்தவர் பெண்கள் பலரை மணப்பது வழக்கமாயிருந்தது. பட்ட மகிஷியாயிருப்பவள் மற்ற ராணிகளிடம் அசூயை கொள்ளாமல் அணைத்து ஆதரிப்பது ஒரு சிறந்த நறுங்குணமாகக் கருதப்பட்டது. இந்த முறையிலேயே மலையமான் மகள் உற்சாகமாயிருந்தாள். குந்தவை தன்னுடைய அலங்காரத் திறமையை இவ்வளவு நன்றாகக் காட்ட முடிந்தது பற்றிப் பெருமை கொண்டிருந்தாள். பைத்தியக்காரப் பிச்சியாகத் தோன்றியவளை இணையில்லா அழகு வாய்ந்த இளம் பெண்ணாகத் தோன்றும்படியல்லவா அவள் செய்துவிட்டாள்? பூங்குழலிக்கோ தன் அத்தைக்கு அரண்மனையில் இவ்வளவு இராஜோபசாரங்கள் நடப்பது பற்றிக் களிப்பு உண்டாகியிருந்தது. அவள் எதிர்பார்த்ததற்கெல்லாம் மாறாக இங்கேயுள்ள அரண்மனைப் பெண்கள் நடந்துகொண்டிருந்தார்கள் அல்லவா?

இவ்வாறு பெருமிதம் பொங்க அந்த அறையினுள் பிரவேசித்த பெண்களின் ஊர்வலத்தைச் சக்கரவர்த்தி பார்த்தார். அவருடைய சிரிப்பு அந்த க்ஷணமே நின்றுவிட்டது. மந்தாகினியின் புதிய தோற்றம் அவருக்கே அளவில்லாத பிரமிப்பை அளித்தது. தாம் கண் முன்னால் பார்ப்பது உண்மைதானா என்று சந்தேகிப்பவர் போல் கண்களைக் கையினால் சிறிது மூடிக்கொண்டும் பின்னர் திறந்தும் உற்று உற்றுப் பார்த்தார். சற்று முன்னால் முதன் மந்திரி சொல்லிக் கொண்டிருந்த விவரங்கள் எல்லாம் அவர் மனத்தில் பதிந்திருந்தன. சில காலமாக நள்ளிரவில் தன் எதிரே தோன்றித் தன்னை வருத்திய பெண் உருவத்துக்கும் மந்தாகினியின் உருவத்துக்கும் உள்ள ஒற்றுமை அவருக்கு நன்கு புலனாயிற்று. அதேசமயத்தில் சில வேற்றுமைகள் இருப்பதையும் கவனித்துக்கொண்டார். இதைப் பற்றிய மர்மத்தை முழுதும் ஆராய்ந்து உண்மையை அறிய வேண்டும் என்னும் ஆசை அவர் உள்ளத்திலும் உதயமாயிற்று.

மந்தாகினியின் மீது அவருக்கு முதலில் ஏற்பட்டிருந்த அருவருப்பு அப்படியே மாறாமல் இருந்தது. ஆனால் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமலிருக்கத் தீர்மானித்தார்.

அநிருத்தரிடம் அவர், "முதன் மந்திரி! சற்று முன் உங்களை நான் பைத்தியம் என்றேன். பிரமை, பைத்தியம் எல்லாம் எனக்குத்தான் என்று தோன்றுகிறது. இனி' மேல் தினந்தோறும் வைத்தியன் என்னை வந்து பார்ப்பது மட்டும் போதாது. மாந்திரீகனையும் அனுப்பி வைக்க வேண்டியதுதான். பழுவூர் இளையராணியைப் பார்க்க வரும் மந்திரவாதியைப் பிடித்து அனுப்பி வைத்தால்கூடப் பாதகமில்லை!" என்று மெல்லிய குரலில் கூறினார்.

அநிருத்தரின் உள்ளத்தில் ஒரு சிறிய துணுக்கம் உண்டாயிற்று. "அந்த மந்திரவாதிகளில் எவனும் சக்கரவர்த்தியை நெருங்காமலிருக்கட்டும்" என்று மனத்திற்குள் வேண்டிக்கொண்டார். பிறகு, "மன்னர் பெரும! மந்திரவாதி எதற்கு? ஸ்ரீமந் நாராயணனுடைய திருநாமத்தை விடச் சக்தியுள்ள மந்திரம் வேறு ஒன்றுமில்லை!" என்றார்.

குந்தவைப் பிராட்டி "அப்பா! என்னை அழைத்து வரச் சொன்னீர்களாமே! பழையாறைக்குப் போக வேண்டும் என்றும் கூறினீர்களாமே? நாங்கள் எல்லாருமே போகலாமா?" என்றாள்.

சுந்தர சோழர் அதற்கு மறுமொழி சொல்லாமல் முதன் மந்திரியைப் பார்த்து, "அநிருத்தரே! நான் என் கருத்தை மாற்றிக்

கொண்டேன். இந்தப் பெண்கள் எதனாலோ ஒரே உற்சாகமாக இருக்கிறார்கள். வீட்டுக்குப் புதிய மருமகள் வந்தது போலக் களிப் படைந்திருக்கிறார்கள். இச்சமயம் இவர்களைப் பிரிக்க எனக்கு விருப்பமில்லை. தாங்கள் சற்று முன் சொன்னதுபோல் இவர்கள் எல்லாரும் சிலநாள் இங்கேயே தங்கியிருக்கட்டும். செம்பியன் மாதேவி தங்களிடம் மிக்க நம்பிக்கையும் மரியாதையும் உள்ளவர். ஆகையால் தாங்களே நேரில் சென்று அவரை அழைத்துக் கொண்டு வாருங்கள்! தங்கள் சிடனை நாகைப்பட்டினத்துக்கு அனுப்புங்கள். பெரிய பழுவேட்டரையரையும் அவருடைய இளைய ராணியையும் உடனே அழைத்து வர ஏற்பாடு செய்யும்படி நானே சின்ன பழுவேட்டரையருக்குச் சொல்கிறேன்!'' என்றார்.

''அப்படியே செய்யலாம். சக்கரவர்த்தி! ஆனால் எல்லாரும் வந்து சேருவதற்குச் சில தினங்கள் பிடிக்கலாம். நேற்று அடித்த புயல் மழை காரணமாக நதிகளில் எல்லாம் பூரணப் பிரவாகம் ஓடிக்கொண்டிருக்கின்றது!'' என்றார் முதன் மந்திரி.

''அதனால் பாதகம் இல்லை. இத்தனை





நான் பொறுத்த நாம் இன்னும் சில நாள் பொறுத்திருப்பதில் நஷ்டம் ஒன்றுமில்லை. கரிகாலனையும் அழைத்து வருவதற்கு ஏற்பாடு செய்தால் எல்லா விஷயங்களையும் முடிவு செய்து விடலாம். அவன் இன்னமும் வருவதற்கு மறுத்தால் நானே புறப்பட்டுப் போக வேண்டியதுதான். அதைப் பற்றிப் பிறகு பேசிக்கொள்ளலாம். நீங்கள் நாளைக்கே சென்று பெரிய பிராட்டியை எப்படியாவது கையோடு அழைத்து வாருங்கள்! போகும்போது, புயலினால் கஷ்டத்துக்குள்ளான மக்களைப் பற்றியும் கவனியுங்கள். நம்முடைய குடும்ப விவகாரங்களில் கவனம் செலுத்தி அந்த முக்கியமான காரியத்தை மறந்தே விட்டோம்" என்றார் சக்கரவர்த்தி.

"இல்லை, பிரபு! அதை நான் மறக்கவே இல்லை. எல்லாக் காரியங்களும் சரிவர நடைபெறும். தாங்கள் நிம்மதியாயிருக்கலாம்'' என்று சொல்லி விட்டு முதன் மந்திரி விடைபெற்றுச் சென்றார்.

அன்றிரவு சுந்தர சோழர் உண்மையிலேயே இத்தனை காலமும் அனுபவியாத நிம்மதியை அடைந்திருந்தார். கரையர் குலத்து மந்தாகினி இறக்கவில்லை என்னும் செய்தி மெய்யாகவே அவருடைய நெஞ்சத்தில் வெகு காலமாகக் குடிகொண்டிருந்த ஒரு பெரும் பாரத்தை அகற்றி விட்டது. அருள்மொழிவர்மன் நாகைப்பட்டினத்தில் இருக்கிறான் என்ற செய்தியும் அவருக்கு ஆறுதல் அளித்திருந்தது. சூடாமணி விஹாரம் மிகப் பலமான கட்டிடமாதலால் அதில் உள்ளவர்களுக்கு அபாயம் ஒன்றும் நேருவதற்கில்லை என்ற தைரியமும் அவருக்கு இருந்தது. பழுவூர் இளையராணி அவருடைய புதல்வியாயிருக்கலாம் என்று அநிருத்தர் குறிப்பிட்டதை நினைக்க நினைக்க அவருக்கு வேடிக்கையாயிருந்தது. இது சக்கரவர்த்தியின் முகத்திலும் அடிக்கடி குறுநகையை உண்டாக்கியது.

மலையமான் மகள் முதலிய பெண்களுடன் அவர் சிறிது நேரம் உல்லாசமாகப் பேசிக்கொண்டிருந்தார். குந்தவையின் அலங்காரத் திறமையைப் பற்றிப் பாராட்டினார். "காட்டுமிராண்டி ஜன்மமாகக் காணப்பட்டவளைத் தேவலோகத்து இந்திராணியாக மாற்றி விட்டாயே? ஆனால் அதற்கெல்லாம் இந்தக் கிழவிதானா அகப்பட்டாள்? வானதியைப் போன்ற சிறு பெண்களிடமல்லவா உன் திறமையைக் காட்ட வேண்டும்?'' என்று பரிகாசமும் செய்தார். பிறகு பூங்குழலியிடம் அருள்மொழிவர்மனைப் பற்றி மேலும் விவரங்கள் கேட்டுத் தெரிந்து கொண்டார்.

அதன் முடிவில் பூங்குழலி "சுவாமி, நான் கோடிக்கரைக்குத் திரும்பிப் போக அனுமதி கொடுங்கள். நாளைக்கே நான் புறப்படலாம் அல்லவா? என் அத்தையைப் பற்றிய கவலை இனிமேல் எனக்கு இல்லை!" என்றாள்.

"உன் அத்தை மகன் ஒருவன் காய்ச்சல் வந்து கிடக்கிறான் என்றாயே? அவனைப் பற்றிக் கூடக் கவலை இல்லையா? போவதற்கு நீ இவ்வளவு அவசரப்பட வேண்டாம். சில நாள் இருந்துவிட்டுப் போ!" என்றார் சக்கரவர்த்தி. பூங்குழலி மௌனமாயிருந்தாள்.

அன்றிரவு சுந்தர சோழ சக்கரவர்த்தி நிம்மதியாக உறங்கினார். கனவுகள்கூட அதிகம் காணவில்லை. கண்ட கனவுகளும் துர்ச் சொப்பனங்களாக இல்லை; இன்பமான கனவுகள்.

அவருக்குப் பக்கத்து அறையில் படுத்துறங்கிய அரண்மனைப் பெண்டிர்களும் நிம்மதியாகவே தூங்கினார்கள். அவர்களிலே நிம்மதியில்லாமலும் நன்றாகத் தூங்காமலும் இருந்தவள் மந்தாகினி ஒருத்திதான். இன்று நடந்த நிகழ்ச்சிகள் எல்லாம் அவளுடைய மனத்தில் பெருங்கிளர்ச்சியை உண்டு பண்ணியிருந்தன. முக்கியமாக அவளுடைய நினைவு பொக்கிஷ நிலவறைக்கும் சுரங்கப் பாதைக்குமாக ஊசலாடிக்கொண்டிருந்தது. இராவணனுடைய கரங்களை உடைத்து அந்தச் சுரங்கப்பாதையை மூடி விடுவதற்குத் தான் செய்த முயற்சி பலிக்காமற் போனது பற்றி எண்ணி எண்ணி அவள் மனம் நிம்மதி கொள்ளாமல் தவித்தது. தூங்கா விளக்கின் மங்கலான வெளிச்சத்தில் சுற்று முற்றும் பார்த்துக்கொண்டேயிருந்தாள். முக்கியமாக, மேல் மாடங்களின் சாளரங்களை அடிக்கடி உற்று நோக்கிக்கொண்டிருந்தாள்.

நள்ளிரவு கழிந்தது; பின்னிரவு தொடங்கியது. மூன்றாவது ஜாமம் ஏறக்குறைய முடியும் நேரம் ஆகிவிட்டது. அப்போது மேல் மாடத்தின் சாளரம் ஒன்றில் ஒரு தோற்றம் அவளுக்குத் தென்பட்டது. அகோர பயங்கர முகம் ஒன்று அந்தச் சாளரத்தை ஒட்டினாற் போலிருந்து, அந்த அறைக்குள்ளே எட்டிப் பார்த்துக்கொண்டிருந்ததைக் கண்டாள். அந்த முகம் இன்னாருடைய முகம் என்பது ஒருவாறு அவளுக்குத் தெரிந்துவிட்டது. தூக்கிவாரிப் போட்டுக் கொண்டு எழுந்து நின்றாள். மறுபடியும் அந்த சாளரத்தை உற்றுப் பார்த்

தாள். அங்கே அந்த முகத்தைக் காணவில்லை. பக்கத்து அறை வாசற்படி வரையில் மெள்ள நடந்து சென்று எட்டிப் பார்த்தாள். அங்கே சக்கரவர்த்தி நிம்மதியாக உறங்குவதைக் கண்டாள். அந்த அறையில் மேல் மாடச் சாளரங்களையும் உற்றுப் பார்த்தாள். ஒன்றும் தெரியவில்லை.

திரும்பி வந்து சிறிதும் சத்தம் செய்யாமல் பூங்குழலியைக் கையினால் தொட்டு அசைத்து எழுப்பினாள். அசந்து தூங்கிய பூங்குழலி கண் விழித்தாள். ஊமை ராணியின் முகத் தோற்றத்தைக் கண்டு திடுக்கிட்டாள். ஊமை ராணி சமிக்ஞையினால் தன்னைத் தொடர்ந்து வரும்படி அவளிடம் சொன்னாள். அத்தையிடம் அளவிலாத பக்தி விசுவாசம் வைத்திருந்த பூங்குழலியும் சத்தம் செய்யாமல் எழுந்து அவளைப் பின்பற்றிச் சென்றாள்.

ஊமை ராணி சிற்ப மண்டபத்தை நோக்கிச் சென்றாள். போகும் போது நடைபாதையில் எரிந்து கொண்டிருந்த தூங்காவிளக்கு ஒன்றைக் கையில் எடுத்துக்கொண்டு நடந்தாள்.

சிற்ப மண்டபத்தை அடைந்ததும் பூங்குழலிக்குச் சிறிது கவலை உண்டாயிற்று. மறுபடியும் இவள் இராவணச் சிற்பத்தை உடைக்கப் போகிறாளா, என்ன? அப்படியானால், அதனால் ஏற்படும் சத்தத்தில் அரண்மனையில் உள்ளவர்கள் அத்தனை பேரும் விழித்துக்கொள்வார்களே? தன் அத்தை பைத்தியக்காரிதான் என்று ஊர்ஜிதமல்லவா ஆகிவிடும்?

. அத்தை அந்த முயற்சியில் இறங்கினால்தான் அதைத் தடுத்தேயாக வேண்டும். கத்தியைப் பலவந்தமாகப் பிடுங்கியாவது தடுத்தாக வேண்டும்... இப்படி எண்ணிக்கொண்டே அத்தையைத் தொடர்ந்து சிற்ப மண்டபத்துக்குள் பூங்குழலி பிரவேசித்தாள்.

ஆ! இது என்ன! அந்த இராவணச் சிற்பத்தின் தலை ஒன்று அசைகிறதே? இல்லை, இல்லை! இராவணன் தலை அசையவில்லை. இராவணனுடைய தலைகளுக்கும், மேலேயுள்ள கைலாச மலைக்கும் மத்தியில் வேறொரு மனிதனின் தலை மாதிரி தெரிந்தது! உடனே அது மறைந்து விட்டது. வீண் பிரமை! தூக்கக் கலக்கம்! விளக்கின் ஒளியில் உண்டாகும் சிற்பங்களின் நிழல் தோற்றமாயிருக்க வேண்டும்...!

மந்தாகினிக்கும் அந்தத் தோற்றம் புலப்பட்டதோ என்னமோ, தெரியவில்லை. ஆனால் அவள் இராவணன் சிலையை நெருங்கித்தான் சென்றாள். நல்லவேளையாகப் பக்கத்தில் கிடந்த கத்தியின் மீது அவள் கவனம் செல்லவில்லை. இராவணன் தலைகள் – கைகளுக்கும் அவை தாங்கிக் கொண்டிருந்த கைலாசகிரிக்கும் நடுவிலிருந்த இருளடர்ந்த பகுதியில் தீபத்தைத் தூக்கிப் பிடித்துக் காட்டினாள். அங்கே ஒரு துவாரம் இருந்தது தெரிந்தது.

பூங்குழலி முன்னமேயே ஊகித்தது சரிதான். அங்கே ஒரு சுரங்கப்பாதையின் வெளித் துவாரம் இருக்கிறது. யாரும் சந்தேகிக்க முடியாதபடி அவ்வளவு சாமர்த்தியமாக அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சுரங்கப்பாதையின் துவாரத்தை மூடி விடுவதற்கே முன்னிரவில் தன் அத்தை பிரயத்தனப்பட்டாள். அதை அறிந்து கொள்ளாமல் மற்றவர்கள் தடுத்து விட்டார்கள்...

இவ்விதம் பூங்குழலி எண்ணிக்கொண்டிருக்கும்போதே ஊமை ராணி தன் மருமகளுக்குத் தன்னைப் பின்பற்றி வரும்படி சமிக்ஞை செய்துவிட்டுக் கையில் விளக்குடனே அந்தத் துவாரத்தில் சிரமப்பட்டுப் புகுந்து அதில் இறங்கிச் செல்லத் தொடங்கினாள். சிறிது சிறிதாக அவள் உடம்பு மறைந்து வந்து, தலையும் மறைந்து, கையில் பிடித்திருந்த விளக்கும் மறைந்தது. கொஞ்சம் வெளிச்சம் மட்டும் தெரிந்தது. பிறகு பூங்குழலியும் உடம்பை நெளித்து வளைத்துத் தலையில் மோதிக் கொள்ளாமல் ஜாக்கிரதையாக அந்தச் சுரங்கத் துவாரத்துக்குள் இறங்கினாள். சில கணங்களுக்கெல்லாம் அவளும் மறைந்தாள். பின்னர், விளக்கின் ஒளியும் மறைந்தது. சிற்ப மண்டபத்தில் அந்தகாரம் குடிகொண்டது.

காலையில் மலையமான் மகளும் குந்தவையும் வானதியும் எழுந்து பார்த்தபோது ஊமை ராணியையும் பூங்குழலியையும் அவர்கள் படுத்திருந்த இடத்தில் காணாமல் திடுக்கிட்டார்கள். அரண்மனை முழுதும், தோட்டத்திலும், சிற்ப மண்டபத்திலும் தேடிப் பார்த்தும் அவர்கள் அகப்படவில்லை. அவர்கள் எப்படி மாயமாய் மறைந்தார்கள் என்பதை யாராலும் ஊகிக்க முடியவில்லை. சக்கரவர்த்தியிடம் கூறியபோது முதலில் அவர் சிறிது கவலைப்பட்டார். பின்னர், "அந்தப் பைத்தியங்கள் போய்த் தொலைந்ததே நல்லது! எப்படித் தொலைந்தால் என்ன?" என்றார். எனினும், அவர் உள்ளத்தினுள்ளே இனந்தெரியாத கவலையும் பயமும் குடிகொண்டன. (தொடரும்)

பஜரங்தள்ளின் கரசேவையில்லை; சிவ சேனையின் கெடுபிடி இல்லை; காங் கிரஸிடமிருந்து ஒரு முணுமுணுப்பு கூட இல்லை; சமாஜ்வாதிக்காரர்கள் கொதித் தெழவில்லை; தேசியவாத காங்கிரஸ் நெற்றிக்கண்ணைத் திறக்கவில்லை; ஆனாலும், மும்பையில் ராம ராஜ்ஜியம் நிறுவப்பட்டிருக்கிறது. நம்பமுடியவில்லையா?

மஹா லக்ஷ்மி கோலோச்சும் மும்பையில், அவளே பொறாமைப்படுமளவுக்கு (அங்கே வெள்ளி மண்டபம்தானே?), ராமனுக்கு ஸ்வர்ண மண்டபமமைத்து, சாம்ராஜ்ஜியப் பட்டாபிஷேகமே நடத்தியிருப்பது பெரும் சிறப்பல்லவா? இந்தியாவிலேயே முதன்முறையாக இப்படி ஒரு வைபவம் நடந்திருப்பது, மும்பைக்கே மகுடம் சூட்டிய சிலிர்ப்பை ஏற்படுத்தி விட்டது.



• பட்டாபிஷேகம்



மாதுங்கா பஜனை சமாஜத்துக்காரர்கள், தெருவடைத்துப் பந்தல் போட்டு, ஊரை அழைத்து, விருந்து வைத்து, மேளதாளத்துடன் வேத வித்துக்களின் முன்னிலையில், பட்டாபிஷேக விழாவை கோலாகலமாகக் கொண்டாடினார்கள்.

அயோத்யா ராமனாவது 14 வருட வனவாசத்தை முடித்து, முடி சூட்டிக் கொண்டான், மாதுங்கா ராமனுக்கு ஆண்டாண்டு காலமாக பக்தர்களின் மனவாசம்தான்; அதனால் த்ரேதாயுகத்து மக்களுக்கிருந்த தாபம், ஏக்கம், வேதனை, குழப்பம் முதலிய 'நெகடிவ்' உணர்வுகள் எதுவுமின்றி, கலப்படமற்ற ஆனந்தம், பக்தி, பரவசம் போன்ற "பாஸிடிவ்" மனநிலைகளே இந்த மக்களை ஆக்ரமித்தன. அதனால் விழா ஆவேசமற்ற அமைதியுடன் இனிதே நடந்தது.

அன்று தேவர்களும், மனிதர்களும், வானரங்களுடன் இக் காட்சியைக் கண்டு களித்தனர். இன்று மனிதர்களுக்குள்ளேயே இந்த மூன்று இனங்களும் அடங்கியிருக்கின்றனவே? அதனால் மனித உருவிலேயே

அனைவரும் கண்டு களித்தனர். அவ்வளவுதான் வித்தியாசம்; மற்றபடி வால்மீகி ராமாயணத்தில் வர்ணிக்கப்பட்டபடியே, இம்மி பிசகாமல் இந்தத் திருமுடி சூட்டுப் படலம் நிறைவேற்றப்



• ஸ்வர்ண மண்டபம்

கணேச வாத்தியாரின் கனவு!

பட்டிருக்கிறது.

குறித்த தினத்தன்று இராமனுக்கு முடி சூட்டப் படவில்லை என்றால் தன் உயிரை மாய்த்துக் கொள்ளப் போவதாகப் பரதன் பிரதிக்ஞை செய்தானே, அதே தீவிரத்துடன் தான் இந்த மாபெரும் நிகழ்ச்சியை நடத்திக் காட்டியிருக்கிறார், பஜன சமாஜத்தின் ஆணிவேரான கணேச வாத்தியார்!

முன்னின்று நடத்த வேண்டிய ஜயேந்திரருக்கு, திடீரென்று டில்லி போக வேண்டியிருந்ததால், இந் நிகழ்ச்சியைத் தள்ளிப் போட முடியுமா என்று கேட்டவுடன், 'ஒரு நிமிஷம் லேட்டானாலும் என் உயிரே போயிடும்' என மன்றாடி, ஆச்சார்யாரை டில்லியிலிருந்து பறந்து வர வைத்து விட்டாரே?

"எங்களால வேஷம் கட்டிண்டு நாடகம் போல நடத்த முடியாதே தவிர, 'பாவத்தாலே' அதே சூழலை உருவாக்க முயன்றிருக்கோம்" என கணேச வாத்யார் சொன்னது உண்மைதான்! நாள் குறித்தவுடன், அனுமன் நிமிட நேரத்தில் 500 நதிகளின் தீர்த்தங்களைக் கொண்டு வந்தானாமே? அது சாத்தியப்படாவிடினும், 'ரமேஷ் பாகவதர்' என்ற அன்பர் முயற்சியால் 20 நதிகளின் புண்ணிய தீர்த்தம் வரவழைக்கப் பட்டிருந்தது.

அன்று மயன் அமைத்த மண்டபத்திற்கு சற்றும் குறைவில்லாமல் கம்பீர ஒளி வீசியது, 10 அடி உயர ஸ்வர்ண மண்டபமும், ஓம் ஸ்ரீம் ராம் ராமாய நமஹ என்ற எழுத்துக்கள் பதித்த நவரத்தின பீடமும். மூன்று டன் தேக்கு மரம், 250 கிலோ செம்பு, 8 கிலோ தங்கத்தாலான மண்டபத்தில், மர வேலைகளைச் செய்தது முருகன் ஸ்தபதி. 60 லட்சம் செலவில் உருவான மண்டபத்தில் கூலியே 10 லட்சங்களை விழுங்கியிருக்கிறது.

பட்டாபிஷேக தினத்தன்று, வழக்கமான கஜபூஜை கோபூஜையுடன், ஸ்ரீராம பட்டாபிஷேக ஹோமம், ஸ்ரீராம மூலமந்திர ஹோமம், ஸ்ரீராம காயத்ரி ஹோமம் முதலியவற்றை, இந்தியா முழுவதிலிருந்தும் வந்திருந்த ரிஷி சமான வேதியர்கள் நிறைவேற்றினர்.

புனித நீரை எடுத்து, குடம் குடமாக ஸ்ரீ ஜயேந்திர சுவாமிகளும் ஏனையோரும் அபி



"அந்த பல் டாக்டர் போலின்னு எப்படி சொல்றே?"

"பற்கள் பளிச்சிட சொட்டுநீலம் போடச் சொல்றாரே!"

— தஞ்சை தாமு

ஷேகித்தனர்; கண்டவர் மெய்மறந்தனர்; அரியணை அனுமன் ஏந்த, அங்கதன் வாளேந்த, தம்பியரெல்லாம் சாமரம் விசிக் குடை பிடிக்க, மணிமகுடத்தை வசிட்டன் ராமனுக்குச் சூட்டியக் காட்சி அனைவரது மனத்திரையிலும் ஓடியது. இங்கே உபசரணைகளையெல்லாம் கணேச வாத்யார் உள்ளிட்ட வேதியர்கள் செய்ய, மஹாத்மா கிருஷ்ணப் பிரேமி மகுடம் எடுத்துக் கொடுக்க, சங்கராச்சார்ய சுவாமிகள் சீதா ராமனுக்கு திருமுடி சூட்டிய அற்புதக் காட்சியை கூடியிருந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் கண்ணாரக் கண்டு மனதார மகிழ்ந்தனர்.

காஞ்சிப் பெரியவருக்கு பக்தர்கள் சார்பில் தங்க சிம்ஹாசனம் ஒன்று காணிக்கையாக்கப்பட்டது. எளிமையே உருவான காஞ்சி மடாதிபதிக்கு 5 லட்சம் செலவில் ஆசனமா எனப் புருவம் உயர்த்தக் கூடியவர்களுக்குப் பதிலடி போல், "குருமார்களுக்குச் சிம்மாசனம், வாகனம், ஆபரணம், மகுடம் போன்ற அனைத்து ராஜோபசாரங்களும் உண்டு; காலப் போக்கில் மடாதிபதிகளே அவற்றைத் தாமாக துறந்தனர். நாமாக மனமுவந்து அன்புக்காணிக்கையாக்குவதில் எந்தத் தவறுமில்லை" என்ற கிருஷ்ணப் பிரேமியாரின் விளக்கம் அமைந்தது. ராஜாராமனின் பட்டாபிஷேகத்திற்கு வந்திருந்தவர்களுக்கெல்லாம் ராஜசேகர், 'ராம் பாக்'கிலேயே விருந்து பரிமாறினார்.

இத்தனைக் கோலாகலங்களுக்கும் வித்திட்டவர், ஒரு சாமானியர் - கணேச வாத்யார்' என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்படும், பஜனை சமாஜத்தின் தலைமைப் புரோகிதர்! 1961ல் இங்கே அர்ச்சகராகச் சேர்ந்தவர். இன்று சமாஜத்தை ஆள்கிறார்.

சமாஜத்தால் இவர் வளர்ந்த காலம் போய், இவரால் சமாஜம் வளரும் காலம் வந்திருக்கிறது. இவர் சொல்லுக்குக் கட்டுப்படாதவர்களில்லை; இன்று சாம்ராஜ்ய பட்டாபிஷேகமே செய்யுமளவுக்கு பஜன சமாஜம் உருவானதற்கு இந்த சாமானியர் கண்ட கனவே காரணம்.

பல வருடங்கள் முன்பு, ஒரு ராமாயண உபன்யாசத்திற்குப் பிறகு, தட்டில் 23 பவுன் காசுமாலையை கர்சீஃபில் சுற்றி ஒரு பெண்மணி போட்டபோது ஆரம்பித்த கனவு! நடுவில் கோல்ட் கண்ட்ரோல் வந்ததால் தடைப்பட்டது. ஆனால் ராஜராஜேஸ்வரியைப் பிரதிஷ்டை செய்தபின் அன்னையின் அருளால் அருட்செல்வத்துடன் பொருட் செல்வமும் பெருக ஆரம்பித்து, தங்கத் தடையும் நீங்கி, இவரது கனவுகள் மீண்டும் உசுப்பி விடப் பட்டிருக்கின்றன. அந்தச் சமயத்தில்தான், சமாஜத்துக்கு வந்து சென்று கொண்டிருந்த ராமமூர்த்தி என்பவரிடம் இவர் தன் அவாவை வெளியிட, 'அடுத்த ராம நவமிக்குள் முடித்து விடுவோம்' என்று வாக்கே கொடுத்து விட்டாராம் அவர்.

'ராமமூர்த்தி கொடுத்த தைரியத்துலதான் மடமடன்னு காரியங்களை ஆரம்பிச்சேன். வெங்கடேஸ்வரன், நாகேஸ்வரன், ஸ்ரீநிவாசன், மோகன்... இப்படி இன்னும் எத்தனையோ பேர் நான் மனம் தளரச்சேயெல்லாம் தைரியம் குடுத்திருக்கா' என்று சொல்பவர், ராமமூர்த்தி இதுவரை 3.5 லட்சங்கள் வழங்கியிருப்பதை நன்றியுடன் நினைவு கூர்கிறார்.

அது சரி... இன்னும் அண்டர்வர்ல்டிடமிருந்து 'கால்' வரவில்லையா? என்றால், 'அவனைப் பாத்துக்க அவனுக்கே தெரியாதா?' என்று கொக்கி போடுகிறார். ராமாயணத்தை எழுதிய கதாசிரியரே அண்டர்வர்ல்ட்காரர்தானே என்று அசால்ட்டாய் இருக்கிறாரோ?

'இருந்தாலும்...! இத்தனை செலவு செய்து ஸ்வர்ண மண்டபமா?' என யாரும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லையா என்றால்,

"கேட்பவர்கள் கொடுப்பதில்லை (ஒரு பைசாகூட?) கொடுப்பவர்கள் கேட்பதில்லை" எல்லாம் இறைவன் செயல் என்று முழக்கினார்.

— ஜெயஸ்ரீ ராஜ்

"இத்தனை நாள் சும்மா இருந்துவிட்டு, இப்போது திடீரென்று அதிரடியாக ராமர் பிள்ளையைக் கைது செய்திருக்கிறீர்களே! இதன் பின்னணி என்ன?" — சென்னை சி.பி.ஐ. அலுவலக, இணை இயக்குனரான டி. முகர்ஜியிடம் கேட்டோம் :



• ராமர்பிள்ளை

• முகர்ஜி

ராமருக்குப் பின்னால் பெரும்புள்ளிகள்!

"மூலிகைப் பெட்ரோல் என்ற பெயரில், ரசாயனக் கலவையை விற்று, மக்களை ஏமாற்றிக் கொண்டிருப்பதாக, ராமர் பிள்ளை மீது புகார் வந்தது. நேரிடையாக சி.பி.ஐ.க்கே வந்த புகார்களின் பேரில்தான் நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். ராமர் பிள்ளை மீது, பெட்ரோலியம் கம்பெனிகளே நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். அவர்கள் அப்படிச் செய்யாததால் நாங்கள் அதிரடியாய் இயங்க வேண்டியதாகி விட்டது" என்றார்.

"அவர் விற்றது பெட்ரோல் இல்லையென்றே வைத்துக் கொள்ளலாம். ஆனால், அவரது எரிபொருள், வாகனத்தை இயக்குகிறது. விலை குறைவாய்க் கிடைக்கிறது. மக்களுக்குக் குறைந்த விலைக்குக் கிடைக்கிற ஒன்றை ஏன் தடுக்க வேண்டும்?"

"இதற்கு இரண்டு கோணத்தில் பதில் கூறலாம். முதலாவது, 'வாகன எரிபொருள்' என்று சொன்னால், ரசாயன ரீதியில் அது இப்படித்தான் இருக்க வேண்டும் என்று சட்டம் இருக்கிறது. இவர் தயாரிக்கிற எரிபொருள், அந்த வரைமுறையின் கீழ் வரவில்லை. அடுத்ததாக, இவர் குறைந்த விலையில் விற்கும் ரசாயனக் கலவை, வாகனங்களின் எஞ்சினை பாழாக்கிவிடும். குறைந்த செலவில் அதிக லாபம். பெரும்பாலான ஆட்டோ டிரைவர்கள், சொந்த ஆட்டோ ஓட்டுவதில்லை என்பதால், எஞ்சின் பாழாவது பற்றிக் கவலைப்படாது, இதனைப் பயன்படுத்துகிறார்கள். இப்படிப் பயன்படுத்தி பாதிக்கப்பட்டவர்கள் பின்னர் புகார் கொடுக்கிறார்கள்.

"ராமர் பிள்ளை கைதுக்குப் பின் அவரது பெட்ரோல் குறித்த பரிசோதனைகள் என்ன சொல்கின்றன?"

"பரிசோதனை, முடிவுகள் தெரிவிக்கும் முக்கிய அம்சங்கள் : மூலிகைப் பெட்ரோல் என்ற பெயரில் விற்கப்பட்டது டொலுயின், பென்சீன் ஆகியவை கலந்த கலவைதான். அவர் சேர்க்கிற மூலிகையால், எந்தவித உபயோகமோ, பலனோ கிடையாது.

"ராமர் பிள்ளைக்குப் பின்னால், அவரது 'மூலிகை' விஷயத்தை முன்னிலைப்படுத்தி, மக்களை ஏமாற்றும் பெரும் சதி நடப்பதாய் நாங்கள் கருதுகிறோம். புலனாய்வு நடந்து கொண்டிருக்கிறது. பின்னால் இருந்து கொண்டு இயங்குகிறவர்கள் பிடிபடுவார்கள். இதில் பெரும் புள்ளிகள் பலருக்குச் சம்பந்தம் இருக்கக்கூடும் என்று சந்தேகிக்க இடமிருக்கிறது" என்றார்.

— மௌலி

படம் : வெங்கடேஷ்

— சி.பி.ஐ. இணை இயக்குனர் பேட்டி

அந்த மிக உயரமான ஸ்டூலின் மீது ஏறத் தொடங்கினான் பிரசாத்.

கீழே இருந்தபடியே கோமளா குரல்கொடுத்துக் கொண்டிருந்தாள். "பார்த்து ஏறு. ஸ்டூல் கொஞ்சம் ஆடும். ஏறிட்டியா? அங்கே ஒரு பிரவுன் கலர் சூட்கேஸ் இருக்கிறதா? அதை எடுத்துக் கீழே கொடு."

முன்னா இதை வெகு ஆர்வமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். சற்று நேரம் முன்பு, "சுவாதி, உங்கம்மா பரண் மேலே உள்ள பெட்டியில் சில விளையாட்டு சாமான்களை வெச்சிருக்கா. அதை முன்னாவுக்கு எடுத்துக் கொடுக்கலாமா? பாவம், அவனும் நாள் முழுதும் போரடித்துப் போய் இருக்கிறான்" என்று கோமளா கூறியதில் சுவாதிக்கு மறுப்பேதும் இருக்கவில்லை. கோமளாவே பிரசாத்துக்குக் குரல் கொடுத்தாள், உதவி தேவையென்று.

மேலேயிருந்து பெட்டியை எடுத்துவிட்டாலும், அதைத் தூக்கிக் கொண்டே இறங்குவது சுலபமாக இல்லை.

அந்த மாத மளிகைச் சாமான்களை உரிய இடங்களில் வைத்துக் கொண்டிருந்த கோமளா, தனக்கு உதவி செய்து கொண்டிருந்த சுவாதியைப் பார்த்து, "நீ போய் அந்தப் பெட்டியை வாங்கி வை" என்றாள்.

சுறுசுறுப்பாக நகர்ந்தாள் சுவாதி. வருங்கால நம்பிக்கை அந்த வேகத்தில் தெரிந்தது.

இன்னும் கொஞ்ச நாட்களில் அம்மா வந்து விடுவாள் என்ற உணர்வு தந்த உற்சாகத்தில் பகல்கள் எளிதாக நகர்ந்தன. இரவுகளைத்தான் முழுபலம் கொடுத்துத் தள்ள வேண்டி வந்தது. மனபலம்.

தன் உடல் மலர்ந்த நாள் நினைவுக்கு வந்தது. துணைக்கென்று அப்பா அழைத்து வந்திருந்த ஒரு முதியவள் ஏதோ ஒப்புக்குத்தான் அந்த மூன்று நாட்களும் அவர்கள் வீட்டில் இருந்தாள். மனத்தின் வெற்றிடத்தைச் சற்று அதிகமாகவே சுவாதி உணர்ந்த நாட்கள் அவை.

இப்போது இந்தத் தமிழகத் தலைநகரில் நள்ளிரவு நெருங்கிய போதும் சாலைப் போக்குவரத்து முற்றிலும் அடங்காத ஓசைச் சூழலில் அவளுக்கு சுலபத்தில் தூக்கம் வருவதாக இல்லை. தவிர முன்னா தூங்கியபிறகே தான் தூங்குவது என்பது அவள் பல ஆண்டுகளாகக் கடைப்பிடித்து வரும் வழக்கம்.

பிமலா தீதியை மட்டும் விட்டு விட்டால் காசியிலும் டேராடூனிலும் அண்டை வீட்டு நபர்களிடம் சுவாதி அதிகம் பழகியதில்லை. அப்பா பழக விட்டதில்லை. பள்ளியில் ராபர்ட் ஃப்ராஸ்ட் எழுதிய "மெண்டிங் வால்" என்ற கவிதைக்கு ஆசிரியை விளக்கம் அளித்தபோது அவளுக்குள் ஆதங்கம் ஏற்பட்டது. 'மனிதர்களுக்கிடையேதான் எத்தனை வேலிகள், எத்தனை சுவர்கள்!' என்ற கவியின் பெருமூச்சை அவளால் உணர முடிந்தது. அப்பா ஓர் அற்புத மேஸ்திரி. துளியும் இடைவெளி இன்றிச் சுவர்களை எழுப்புவதில் தன்னிகரற்றவர். அம்மாவின் காற்று கூட தன் மீது படாது - ஏன், அம்மா சுவாசித்துக் கொண்டிருக்கிறாள் என்ற உண்மையையே அவளிடமிருந்து மறைத்து - கோட்டை கட்டிய கொத்தனார்.

சுயபச்சாதாபம் மேலும் பொங்கி விடாமல் தன்னைத் தடுத்துக் கொண்டாள். அவளுக்குக் கண்ணீர் எளிதில் வந்ததில்லை - அதற்கான வாய்ப்புகள் பல முறை உண்டாகியிருந்தபோதிலும். அம்மா கூட அற்ப சோகங்களுக்கு அழும் பிரிவைச் சேர்ந்தவளாக இருக்கமாட்டாள்



அருண் சரண்யா


11

என்று தோன்றியது.

ஒரு புதிர் என்ற நிலையிலிருந்து ஒரு தோழமை பிம்பம் என்கிற நிலைக்கு அம்மா வந்து விட்டதை உணர்ந்தான். முக்கியமாக அம்மாவின் ஓவிய நோட்டுப் புத்தகத்தை கோமளா ஆன்ட்டி சென்ற தினம் காட்டிய பிறகு.

வெவ்வேறு காலகட்டங்களில் வரையப்பட்டிருந்தன அந்த ஓவியங்கள். இறைவனையோ இயற்கை வளங்களையோ அம்மா அவற்றிற்குக் கருப்பொருளாக எடுத்துக் கொள்ளவில்லை. ஒவ்வொரு ஓவியத்திலும் ஒரு பெண் குழந்தை. அதன் வளர்ச்சியின் பல்வேறு கட்டங்கள் அந்த ஓவியங்களில் தெரிந்தன. உருவத்தில் சுவாதியை அவை ஓரளவே ஒத்திருந்தன என்றாலும், உயிரோடு தொலைத்து விட்ட மகளைப் பற்றிய ஏக்கம்தான், எண்ண வெளிப்பாடுகள்தான் இப்படி ஓவியங்களாக மலர்ந்துள்ளன என்பது சுவாதிக்குத் தெளிவாகவே புரிந்தது.



''மெகா சீரியலுக்கான ஸ்கிரிப்டுன்னு சொல்றீங்க... ரொம்ப சுருக்கமா இருக்கே...''

''வேணும்னா அயர்ன் பண்ணித் தர்றேன்...''

— தஞ்சை தாமு

பெட்டியை பிரசாத் ஒழுங்காகத்தான் கொடுத்தான். சுவாதியும் அதைப் பொறுப்போடு வாங்கி சுவர் ஓரமாக வைத்தாள். ஆனால் அந்த உயர ஸ்டூலில் ஒருபுறம் இருந்த ஏணி போன்ற படிகளில் காலை வைத்து இறங்கும்போது அது ஆடிய ஆட்டத்தில் நிலை தவறி விட, கீழே விழுவதைத் தவிர்க்க பிரசாத் சுவாதியைப் பிடித்துக் கொண்டு விட்டான்.

இருவரின் இதயமும் பலமாக அடித்துக் கொள்ள, ரத்தம் சீர்குலைந்து ஓடத் தொடங்கியது.

"பார்த்து... பார்த்து" என்று சற்று பதற்றத்துடன் கூறிய கோமளா, "உங்க ரெண்டு பேருக்கும் ஒண்ணும் ஆயிடலியே" என்றாள் யதார்த்தமாக.

ஏதேதோ ஆகிவிட்டது என்று சொல்ல நினைத்து, வார்த்தைகளை விழுங்கிக் கொண்டார்கள்.

பெட்டிக்குள் இருந்த வண்ணப் பந்துகளை எடுத்துக் கொண்டு முன்னா விளையாடப் போய் விட்டான். சமையலில் தீவிரம் காட்டிக் கொண்டிருந்தாள் கோமளா.

படபடப்பை மறைத்துக் கொள்ள தோட்டத்துப் பக்கம் சென்றாள் சுவாதி. 'நடந்தது பெரும் தவறு. பிரசாத் தன்னைப் பிடித்துக் கொள்ள வந்தபோதே தான் சற்று விலகியிருக்க வேண்டும்' என்று அவள் மனம் ஒருபுறம் கூறினாலும் 'இதை நீ வெறுக்கிறாயா?' என்றும் ஒரு கேள்வி எழுந்தது.

ஒரு முழு நிமிடம் பரவசம் குறையாமல் நின்று கொண்டிருந்த பிரசாத் வெளியே வந்தான். தன்னைப் பார்ப்பதைத் தவிர்க்க முயற்சிக்கும் சுவாதியிடம் சென்றான். "கீதா சாரம் படித்திருக்கிறாயா?" என்றான்.

படித்ததுண்டு. ஆனால் பதில் கூறும் மனநிலையில் அவள் இல்லை.

"அதில் முதல் வரி என்ன தெரியுமா? 'எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது'."

துள்ளலுடன் அவன் செல்ல, சுவாதி பிரமித்து நின்றாள்.

அதன் பிறகு பிரசாத்தைப் பார்க்கும் சந்தர்ப்பங்களை அவள் தவிர்க்கத் தொடங்கினாள்.

என்றாலும் பிரசாத்துடன் அவள் பேசியே ஆக வேண்டிய ஒரு கட்டாயமும் ஏற்பட்டது. இத்தனைக்கும் அது அவள் வங்கி சம்பந்தப்பட்ட விஷயமுமல்ல.

''அப்போ ஜானகி சாயந்திரம்தான் சிங்கப்பூரிலிருந்து வராளா? நான் மார்னிங் ஃப்ளைட்டிலே வந்திருப்பான்னு நினைச்சுக்கிட்டேன். சாயந்திரம் நான் க்ளினிக்கில் பிஸியாக இருப்பேன். அதனாலே நாளைக்கு வந்து பார்க்கிறேன். எப்படியும் இன்னும் ஒரு வாரமாவது இருப்பாளில்லையா?'' என்று பிரசாத்தின் வீட்டுக்குள்ளிருந்து ஒரு புதிய பெண் குரலைக் கேட்டபோதே. அது அவ்வளவு புதிய குரல் அல்லவென்று சுவாதிக்குத் தோன்றியது.

அந்தக் குரலுக்குரியவள் வீட்டிலிருந்து வெளியே வந்தவுடன் அந்த மர்மம் உடைந்தது. ரயிலில் முன்னாவுக்கு மாத்திரை கொடுத்த டாக்டர்.

டாக்டர் மனோன்மணியும் சுவாதியை அடையாளம் கண்டுகொண்டார். "வாரணாசி எக்ஸ்பிரஸில் கையைப் பிசைந்து கொண்டு







ஸ்ரீ சாரதா சக்தி பீடம்

72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர், (வழி) தாம்பரம், சென்னை-63.

Tel & FAX: 2376129

E.mail: sspeetam@md3.vsnl.net.in, sspeetam@hotmail.com

Please visit our website at: www.intamm.com/sspeetam

தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

பேரன்புடையீர் ! வணக்கம், வரும் தமிழ் புத்தாண்டில் தங்களுக்கு அனைத்து நலன்களும் உண்டாக பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் பிரார்த்திக்கின்றோம்.

தங்களின் அன்பினாலும், ஆதரவினாலும், குருகுலத்தில் **150** மாணவ, மாணவியர்கள் நல்ல முறையில் படித்து வருகின்றார்கள். குருகுல மாணவர்களின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு ஒரு உயர்நிலைப்பள்ளியும் மற்றும் கம்ப்யூட்டர் பயிற்சி மையமும் துவக்கப்பட்டுள்ளது.

* குருகுல மாணவர்களோடு உங்களுடைய மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ளுங்கள்.

* குருகுல மாணவர்களின், உணவு மற்றும் இதர செலவுகளுக்கு, கல்வி கற்பதற்கு கம்ப்யூட்டர் பயிற்சி பெறுவதற்கு, கட்டிடம் கட்டுவதற்கு, மற்றும் நிரந்திர வைப்பு திட்டத்திற்கு தங்களின் மேலான நன்கொடைகளை அளிக்கும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (150 பேருக்கு)	ரூ	1000/-
• மதிய உணவு	ரூ	2,000/-
• இரவு சிற்றுண்டி	ரூ	1,000/-
• பிஸ்கட், மற்றும் பால் வழங்குதல்	ரூ	750/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித் தொகை	ரூ	1,000/-
• ஒரு மாணவனுக்கு கம்ப்யூட்டர் பயிற்சி (ஓராண்டிற்கு)	ரூ	3,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ	9,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ	2,00,000/-

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம்.

தங்கள் நன்கொடைகளை "ஸ்ரீ சாரதா சக்தி பீடம்" என்ற பெயருக்கு **Cheque/ DD / MO** மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்கொடைகளுக்கு **80 G** பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு.

இறைவன் தொண்டில்

சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர்

ன்ற பெண்தானே நீ? வீட்டுக்குள் நுழையும் போதே உன் தம்பியைப் பார்த்து விட்டேன். வாட்ச்மேனோடு விளையாடிக் கொண்டிருந் தான். நான் எப்படி இங்கே வந்தேன்னு நினைக்கிறியா? பிரசாத்தின் ஸிஸ்டர் கல்லூரி யில் என் பிரதம சிஷ்யை. அவ இன்னிக்கு வருவதாகக் கேள்விப்பட்டு வந்தேன். அது இருக்கட்டும். முன்னா எந்த க்ளாஸ் படிக் கிறான்? இங்கே பள்ளி விடுமுறையில் வந்திருக்கிறானா?"

சங்கடத்துடன் டாக்டரின் பார்வையைத் தவிர்த்தாள் சுவாதி. "ரெண்டு வருஷம் ஸ்கூலிலே படித்தான். அங்கே அவனாலே கவனம் செலுத்த முடியல்லே. அதனாலே அப்பா அவனை ஸ்கூலிலேயிருந்து நிறுத்திட் டார். ஆனால் ஒண்ணு. இப்போ முன் னாவின் மனநிலை பாவமாயிருக்கு. ஆவேசப் படுவதில்லை. கொஞ்சம் ஒடுங்கியிருக்கிறான். ஆனால் தன்னைப் பற்றி யார் யாரோ தப்பாகப் பேசுவதாகவும் தன்னைத் தீர்த்துக் கட்ட திட்டமிடுவதாகவும் அப்பப்போ சொல்றான். வரும் வருஷத்தில் அவனை இங்கேயே ஏதாவது ஸ்கூலில் சேர்க்கணும்."

டாக்டரின் முகம் மாறியது. "உன்னைச் சொல்லித் தப்பில்லே. பலரும் இப்படித்தான் அவரவராக முடிவு செய்து விடுகிறார்கள். துணியைக் கிழித்துக் கொள்வதுதான் உச்ச கட்ட மனநோய் என்று. உன் தம்பிக்கு உடன டியாகச் சிகிச்சை அளிக்கணும். சாயந்திரம் என் க்ளினிக்குக்கு அழைச்சுக்கிட்டு வா" என்று அங்கு வர வழி கூறினாள்.

சுவாதியின் கலவரம் அதிகமாகிக் கொண்டே போனது. பல்வேறு கேள்விகள் மூலம் முன்னாவை சோதனை செய்த டாக்டர் மனோன்மணி, அடுத்த அறைக்கு அவனை அனுப்பி விட்டு, சுவாதியிடம் விளக்கத் தொடங்கினாள்.

"முன்னாவுக்கு வந்திருக்கும் மனநோய் தீவிரமானது. ஸ்கிட்ஸோஃப்ரினியான்னு இதுக்குப் பேர். இதை இப்படியே விட்டா ரொம்பவும் ஆபத்து. தினமும் காலையிலே இங்கே அவனை அழைச்சுக்கிட்டு வந்துடு. சாயந்தரம் கூடவே அழைச்சுக்கிட்டுப் போயி டலாம். வீட்டிலே இருப்பவங்க முன்னாவைப் புரிஞ்சுக்கிட்டு அன்பாக நடந்துக்கணும்."

ஏனோ அந்தக் கேள்வியைக் கேட்கத் தோன்றியது சுவாதிக்கு. "முன்னா மாதிரி பையன்களுக்குத் தனி ஸ்கூல் இருக்குதா? அப்படியிருந்தா அதற்கும், உங்க சிகிச்சைக்கும் சுமார் எவ்வளவு செலவாகும்?"

"எனக்குத் தெரிஞ்ச ஒருத்தர் இதுமாதிரி சிறுவர்களுக்காக ஒரு ஸ்கூல் நடத்தறார். விடுதியோடு இணைந்த பள்ளி அது. வாரத் துக்கு மூணு நாள் என் சக டாக்டர்களும் அங்கே போய் சிகிச்சை கொடுப்போம். வருடத்துக்கு கிட்டத்தட்ட பத்தாயிரம் ரூபாய் வாங்கிக்கிறாங்கன்னு நினைக்கிறேன்."

பத்தாயிரம் ரூபாய்! விமானப் பணிப் பெண் ஆவதற்குப் பயிற்சி எடுத்துக் கொள் வதற்காக அவள் வைத்துக் கொண்ட தொகை! அப்பாவின் பணம்தான். அவருக்குப் பிடிக்காத ஒரு காரியத்துக்குச் செலவிட முடிவு செய்து ஒதுக்கிய தொகை! மகிழ்ச்சியுடன் வீம்பும் கலந்த முடிவு. அதை மாற்றியாக வேண்டுமா?

(தொடர்ந்து பறக்கும்)

'பாட்டாளி' சுஹா...!



• சுஹாசினி

முழுக்க முழுக்கப் பெண்களால் பெண்களுக்காகவே(?) தயாரிக்கப்படுகிறது ஒரு சீரியல்! "என்றென்றும்..." என்ற அந்த சீரியல் மூலம் முதன்முறையாகத் தயாரிப்பாளராகிறார் மாலா மணியன். இதன் டைரக்டர் ப்ரியா, மணிரத்தினத்திடம் அஸிஸ்டெண்டாக இருந்தவர். இதில் குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால், இதுவரை நடிப்பு, தயாரிப்பு, டைரக்ஷன் என்று மட்டுமே இருந்த சுஹாசினி முதல் முதலாக 'பாட்டாளி'யாகி இருக்கிறார். பாட்டாளி? அதாங்க, பாடலாசிரியராகி இருக்கிறார்.

– ஏக்

• தொடரில் ஒரு காட்சி





• நித்யஸ்ரீ

இது பரீட்சை நேரம்! சில பேர், 'நான் ராத்திரி பூரா விழுந்து விழுந்து படிச்சேன்' என்பார்கள். சிலர் 'படிப்பா! நமக்கெல்லாம் அது விஷயமே இல்லைப்பா. பரீட்சைக்கு முந்தின நாள் தியேட்டர்ல இருந்தேன்' என்பார்கள்! நீங்க எப்படி? என்று சில பிரபலங்களிடம் கேட்டோம் :

நித்யஸ்ரீ :

"பரீட்சையையே குறிக்கோளாக வச்சுக்கிட்டதில்லை. பாடப் புத்தகங்களை முழுசா ஒருமுறை முதலிலேயே ஒரு ஜெனரல் ரீடிங் கொடுத்து விடுவது என் வழக்கம். ஒரு கதைப் புத்தகம் படிப்பது போல என்று வைத்துக் கொள்ளுங்களேன். பிடித்த சப்ஜெக்ட் கணிதம். மற்றபடி பாடங்களில் முக்கியமான பாயிண்ட்டுகளைப் புத்தகத்திலேயே அடிக்கோடிட்டுக் கொள்வேன். பள்ளியில் படிக்கும் போதே கச்சேரி செய்யத் தொடங்கி விட்டேன். என்றாலும் இதனால் படிப்பையோ, தேர்வுகளையோ இரண்டாம்பட்சமாக நினைத்ததில்லை. எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரியில் நான் எம்.காம். படித்துக் கொண்டிருந்தபோதுதான் படிப்பு, பாட்டு இரண்டிலுமே தீவிர கவனம் செலுத்துவது முடியாதென்று தோன்றியது. பாட்டுக்கு வோட்டு விழுந்தது.

ப்ளஸ் டூ படித்துக் கொண்டிருந்த போது கணக்கு மற்றும் ஆங்கிலத் தேர்வுகளுக்கு நடுவே சுமார் இரண்டு வார விடுமுறை. இந்த இடைவெளியில் ஹைதராபாத்தில் ஒரு முக்கியமான கச்சேரி வாய்ப்பு வர, அதற்கு ஒத்துக் கொண்டேன். திங்கள் கிழமை தேர்வு என்றால்



• அனந்தகிருஷ்ணன்



• மாலா மணியன்

ஆத்தா நான் பாஸாயிட்டேன்!

அதற்கு முன் தினம் மதியமே சென்னை வந்து சேர்ந்து விடுவதாகத் திட்டம். அதே போல் ஹைதராபாதிலிருந்து நரசாபூர் எக்ஸ்பிரஸில் விஜயவாடாவுக்கு வந்து சேர்ந்தேன். ஆனால் அந்த ரயில் மூன்று மணி நேரம் தாமதமாக வந்து தொலைத்ததால் அங்கிருந்து ஏறி வருவதாக இருந்த பினாகினி எக்ஸ்பிரஸைப் பிடிக்க முடியவில்லை. ஸ்டேஷன் மாஸ்டரிடம் கெஞ்சிக் கூத்தாடி ஒருவழியாக நவஜீவன் எக்ஸ்பிரஸில் சென்னை வந்து தேர்வு நேரத்துக்கு முன் ஹாலில் நுழையும்வரை தாங்க முடியாத சஸ்பென்ஸ்தான்."

டாக்டர் அனந்தகிருஷ்ணன் :

"எட்டாம் வகுப்பிலிருந்தே படிப்பில் சில ஒழுங்குமுறைகளைக் கடைபிடிக்கத் தொடங்கினேன். விடியற்காலை நான்கு மணிக்கே எழுந்து படிப்பேன். ஞாயிற்றுக் கிழமை உட்பட இந்த வழக்கம் தொடரும். அதே போல் தேர்வு தினத்தன்று எதையும் புதிதாகப் படிக்க மாட்டேன். ஏற்கெனவே படித்ததை மனத்தில் ஓட விட்டுப் பார்ப்பது வழக்கம். இதனாலோ என்னவோ வாணியம்பாடியில் நான் படித்த பள்ளியிலும் கல்லூரியிலும் முதல் ராங்க் பெற முடிந்தது. ஆனால் பொறியியல் கல்லூரியில் சேர்ந்த பிறகு படிக்கும் முறை தலைகீழாக மாறிப் போனது. காலை ஆறரை மணிக்கே பிராக்டிகல் வகுப்புகள் என்பதால் அவற்றிற்குத் தயார் செய்து கொள்ளத்தான் நேரமிருக்கும். தவிர விடுதியில் தங்கிப் படித்ததால் சக நண்பர்கள் பீச்சுக்குப் போகலாம் வாயேன் என்றெல்லாம் அழைத்தால் போக வேண்டிய சூழல். எனவே மற்றவர்கள் தூங்கிய பிறகு இரவில் படித்தேன். நான் பின்னாளில் பிஸியாகி விட்டதால் என் குழந்தைகளின் படிப்பில் கவனம் செலுத்த முடியவில்லை. ஆனால் என் மனைவி, "உங்கப்பா அப்படிப் பண்ணினாங்களாம், இப்படிப் படிச்சாங்களாம்'' என்று சொல்லிச் சொல்லி அவர்களின் படிப்பு முறையில் ஒரு ஒழுங்கைக் கொண்டு வந்தாள்."

தனி விமானத்தில் கிளின்டனின் கோட்டு!



பில்கிளின்டன் பங்களாதேஷ் சென்றபோது, கேஷுவல் டிரஸ் அணிந்து கொண்டு சென்றுவிட்டார். ஆனால் அங்கு கலந்து கொள்ள வேண்டிய அரசு விழாவிற்குச் செல்லும்போது அணியத் தேவையான கோட்டும், சூட்டும் எடுத்துப் போக விட்டுப் போனது. அப்புறம்? தனி விமானத்தில் டெல்லியிலிருந்து கோட்டு சூட்டை எடுத்துக் கொண்டு டாக்காவுக்குப் பறந்திருக்கிறார் ஒரு வெள்ளை மாளிகை அதிகாரி!

– சி.எம்.

மாலா மணியன் :

"பத்தாம் வகுப்பு வரை நான் படிப்பை சீரியஸாக எடுத்துக் கொண்டதில்லை. சராசரி மாணவிதான். ஆனால் பாட்டு, வீணை என்று எக்ஸ்ட்ரா திறமைகள் இருந்ததால் டீச்சர்களுக்கு என்னை ரொம்பப் பிடிக்கும். பெற்றோர் என் படிப்பு தொடர்பாகக் கண்டித்ததில்லை. 'உன் பொறுப்பை நீயே உணர வேண்டும். மற்றபடி வழிகாட்டலுக்கு நாங்கள் இருக்கிறோம்' என்கிற சீரிய நோக்கம் அவர்களுக்கு. பதினொன்றாம் வகுப்பு வந்ததும் ஒருவித பயம் தோன்றியது. தோழிகளுடன் சேர்ந்து க்ரூப் ஸ்டடீஸ் செய்தேன். ஒருவருக்கொருவர் தாங்கள் படித்ததின் சாராம்சத்தைக் கூறிக் கொள்வோம். பாடத்திலிருந்து கவனம் மாறக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தோம். பள்ளியிறுதித் தேர்விலும் சரி, பிறகு நான் எழுதிய இன்டர், பி.ஏ. (ஆங்கில இலக்கியம்) ஆகியவற்றிலும் சரி, எண்பது மதிப்பெண்ணுக்குக் குறையாமல் பெற்றேன்.

பி.ஏ. இறுதியாண்டு இறுதித் தேர்வுக்கு முன் ஸ்டடி ஹாலிடேஸ். அன்று வீட்டுக்கு வந்தபோது அம்மா இறந்திருந்தார். நிறைய துக்கம். என்றாலும் அந்தத் தேர்வை அம்மாவுக்குக் காணிக்கை ஆக்கினேன். "நம்ம குடும்பத்திலே மாலாதான் முதல் பெண் பட்டதாரி ஆகப் போறா" என்று அம்மா பெருமைப்பட்டதுண்டு. இதை அவரது கடைசி ஆசையாகவே எண்ணி அதை வெற்றிகரமாக நிறைவேற்றினேன்."

— ஜி.எஸ்.எஸ்.

வட்டமேஜை

வலி நிவாரணி?

✉ அமெரிக்க அதிபரின் இந்திய வருகை வெறும் விருந்தோம்பலாக முடிந்து விடாமல் அண்டை நாட்டுப் பகைமையை யொழிக்கவும் நாட்டின் பொருளாதார மறு மலர்ச்சிக்கு வித்திடவும் பயன்பட வேண்டுமென்ற தங்கள் தலையங்கக் கருத்துக்கள் நவபாரதம் உருவாக வழி வகுப்பனவாகும்!

இனாம்மணியாச்சி, ச. ஆ. கேசவன்.

✉ படத்தின் கேரக்டருக்காக தன் அழகான கூந்தலையே தியாகம் செய்த 'ஷபானா ஆஸ்மியின்' அட்டைப்படமும், பேட்டியும் அருமை. வாட்டர் பட விவகாரத்தால் நொந்து போயிருக்கும் அவரது அகத்தின் வேதனை முகத்தில் நன்றாகவே பிரதிபலித்தது!

ஈரோடு, எஸ். ரஜினிப்ரியன்.

✉ ஆண்களை விடப் பெண்கள் வித்தியாசமான 'முடி'வை எடுப்பார்கள் என்று ஷபானா பேட்டியளித்ததை (அட்டைப் படத்தை பார்த்த பின்னும்) மறுத்துப் பேசத் தோணுமா?

திருநெல்வேலி - 7, எஸ். சுந்தர்.

✉ சுற்றுச் சூழலுக்கும், சுகாதாரத்துக்கும் கேடுவிளைவிக்கும் பாலிதீன், பிளாஸ்டிக்கை எதிர்க்கும் வகையில் 'காகித அட்டைப் பெட்டியில் காஸெட்' ஒரு நல்ல முதல் முயற்சி + புரட்சி!

நெய்வேலி - 3, ப. உத்தண்டராமன்.

✉ சப்னம் மௌசியின் வாழ்க்கைப் பின்னணி மிகவும் சோகமானது. ஏச்சு, பேச்சு, கிண்டல் போன்றவற்றை சந்தித்து, எதிர்நீச்சல் போட்டு ஒரு எம்.எல்.ஏ. ஆகியிருக்கும் இவர், நிச்சயம் நம்முடைய அரசியல்வாதிகளை விட மக்களுக்குச் சிறப்பான சேவைகள் செய்வார் என நம்பலாம்.

பெங்களூர், அ. சங்கரன்.

✉ எட்டும் பெண்கள் சிறுகதை பெண்களின் ஏக்கம் எத்தகையது, திருமணம் மட்டுமே திருப்தி அளிக்காது என்பதைப் பெற்றோர்கள் புரிந்து கொள்ளும் வகையில் அமைந்திருந்தது.

சாத்தியாகுளம், சு. பாக்யமலர்.

✉ 'மூலிகையே மூலிகையே' சிறுகதை சிரிப்பை வரவழைத்து வயிறைப் புண்ணாக்கி விட்டது. அடுத்த 'கல்கி'யுடன் வலி நிவாரணி மூலிகையை இலவசமாகக் கொடுப்பீரா?

சென்னை-26, சி. மகேஷ்.



✉ 2.4.2000 நாளிட்ட 'கல்கி' இதழில் ''சினிமா ஒரு சூதாட்டம் என்றாரே ஆர். எம். வீரப்பன்?'' என்று ஒரு கேள்வி கேட்கப்பட்டு அதற்குப் பதில் அளித்திருக்கிறீர்கள். ஒரு விளக்கத்தை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சமீபத்தில் ஒரு வாரப் பத்திரிகைக்கு என்னிடம் பேட்டி கண்டவர், ''இப்போது சினிமா எடுப்பதை விட்டு விட்டீர்களா?'' என்று கேட்டார். அதற்கு நான் அளித்த பதில் : ''நாங்கள் எல்லாம் சினிமா எடுத்த காலத்தில் சினிமா ஒரு ஒழுங்குக்குள், கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. அது ஒரு தொழிலாக இருந்தது. ஆனால் இன்று அந்த நிலைகளை எல்லாம் விட்டு விட்டு சினிமா ஒரு சூதாட்டமாக மட்டும் போய் விட்டது. இந்தச் சூதாட்டத்தில் விரும்பி ஆடுகிறார்கள் சிலர். வேறுவழியில்லாமல் ஆடுகிறார்கள் சிலர். தலையைக் கொடுத்து விட்டோமே என்று தொடர்ந்து ஆடுகிறார்கள்'' என்றேன்.

ஏனென்றால் என்னுடைய வாழ்க்கையில் நான் ஈடுபட்ட ஒரே தொழில் திரைப்படத்துறைதான். அந்தத் தொழில் எப்போதுமே சூதாட்டமாக இருந்திருந்தால் என்னைப் போன்றவர்கள் ஈடுபட்டிருக்க முடியாது.

சென்னை - 17, இராம வீரப்பன்.

தெய்வ தரிசனம் –23

வரலாற்றில் இடம் பெறாத பல அழகிய கோவில்கள் தமிழ்நாட்டு கிராமங்களில் இருக்கின்றன. ஒவ்வொரு கிராமமும், சின்னஞ்சிறிய கிராமமாக இருந்தாலும் நான்கு கோவில்களாவது உடைய புண்ணிய ஸ்தலமாகவே இருப்பதைப் பார்க்கிறோம். ஊரைப் பார்த்தவண்ணம் பெருமாள் கோவிலும், எதிர்ப்பக்கம் பார்த்தவண்ணம் சிவன் கோவிலும், ஒரு அரசமரத்தடி அல்லது ஆற்றங்கரைப் பிள்ளையாரும், ஊரின் எல்லையில் ஐயனார் கோவிலோ மாரியம்மன் கோவிலோ அனைத்துக் கிராமங்களிலும் இருக்கின்றன. கிராமங்கள் செழிப்பாக இருந்த காலங்களில் கோவில்களும் அழகாகப் பராமரிக்கப்பட்டு வந்தன. யாராவது ஒரு மணி வாங்கிக் கட்டி விடுவார். மூன்று கால பூஜை நிச்சயமாக நடக்கும். கோவில் கிராம வாழ்க்கையின் முக்கியமான அம்சமாக இருந்தது.

இந்தக் காலத்தில் வயதானவர்கள் தனிக்குடித்தனம் செய்வதை நகரங்களில் பார்க்கிறோம். அனேகமாகப் பிள்ளைகளும் பெண்களும் துபாயிலோ, யு.எஸ்ஸிலோ, ஆஸ்திரேலியாவிலோ உத்தியோகத்துக்குப் போய் விடுகிறார்கள்.

கோவில்களில் கூட ''கணினி'' வைத்து ரிமோட்டில் வெளி நாடுகளிலிருந்து பூஜை புனஸ்காரங்கள் செய்யும் காலம் வந்து விடும் போலிருக்கிறது. அர்ச்சகர்கள் கூட வெளிநாட்டுக் கோவில்களுக்குப் போய் விடுகிறார்களே!

"சிவபெருமான் பார்வதி இரண்டு பேரும் கம்ப்யூட்டர் கற்றுக் கொள்ள ஆசைப்பட்டார்களாம். ஆனால் அவர்களுக்குத் தெரியவில்லை. கடைசியில் பிள்ளையாரைப் பிரார்த்தித்



• முருகன் கோயில் முகப்பு



• விஷ்ணு



• வள்ளி தெய்வானையுடன் முருகன்

திண்ணியத்து ஷண்முகநாதன்



• ஆஞ்சநேயர்

• வேணுகோபால் ஸ்வாமி



தார்களாம். ஏன் தெரியுமா? அவரிடம்தானே மௌனம் இருக்கிறது." (எஸ்.வி. சேகர் ஜோக்!)

ஆனால், சில கிராமக் கோவில்களுக்குப் போனால் நமக்கு ஆச்சரியமாக இருக்கிறது. கோவில் நல்ல நிலைமையில் இருக்கிறது. "இந்த ஊர்க்காரா எல்லாம் பெரிய உத்தியோகத்திலே இருக்கா. டில்லியிலே ஒருத்தர் இருக்கார். அமெரிக்காலே ஒருத்தர் இருக்கார். முடியறப்போ எல்லாம் வந்து பிரார்த்தனை செலுத்திட்டுப் போறா" என்று அர்ச்சகர் கூறுகிறார். வெளிநாட்டில் வாழும் புத்திரர்கள் பெற்றோரைக் கவனித்துக் கொள்வது போலத் தங்கள் குலதெய்வங்களையும் கவனித்துக் கொள்கிறார்கள்.

தலபுராணம் இல்லாவிட்டாலும், பாடல் பெற்ற தலமாக இல்லாவிட்டாலும், ஐந்து நிலைக் கோபுரம் இல்லாவிட்டாலும் கிராமத்துக் கோவில்களில் சில சிறப்புகள் இருக்கின்றன. விக்ரஹங்களின் அமைப்பும், உற்சவ மூர்த்திகளின் அழகும் கிராமத்துக்கே பெருமை சேர்க்கின்றன. சிற்பியின் கைவண்ணம் பார்க்கப் பார்க்க அதிசயமாக இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு அழகிய கிராமத்துக்கு இன்று போகிறோம். லால்குடிக்கு அருகில் உள்ள திண்ணியம். திருச்சியிலிருந்து பஸ் வசதி உண்டு. பெயர்தான் கிராமம். தவிர நகரத்து முக்கிய சின்னமான பெரிய டிஷ் ஆண்டெனா ஆகாயத்

ஆனந்தி

தைப் பார்த்து வாயைத் திறந்து கொண்டிருக்கிறது! ஆனாலும் நான்கு புறமும் பசுமையான வயல்கள், சமீபத்தில் புதுப்பிக்கப்பட்ட வீடுகள், கட்டுக்கட்டாகக் கரும்பை ஏற்றிச் செல்லும் வண்டிகள், வாழைத் தோப்பு என்று குளுமையாக இருக்கிறது. தெருவைத் தாண்டியதும் கோவில் தெரிகிறது.

சிறிய கோபுரம் கோபுரத்தின் மீது முருகப்பெருமான் மயில் வாகனத்தின் மீது அமர்ந்திருக்கும் கோலத்தில் சுதை சிற்பம். இருபுறமும் இரு தேவியரும் மயில் வாகனங்களில் தனித்தனியே வீற்றிருக்கிறார்கள். புது மாதிரி இருக்கிறதே என்று எண்ணிக் கொண்டே கோவிலுக்குள் போனால் தெற்கு நோக்கிய முருகன் ஸந்நிதி.



“எதுக்கு தலைவரே உங்க பையனுக்கு, அடிதடி, ஆசிட், உதை, ஊழல்'னு அரிச்சுவடி சொல்லித் தர்றீங்க?”

“நாளைக்கு அவன் தனக்கு அரசியலைப் பத்தி அ, ஆ வன்னா கூடத் தெரியாதுன்னு சொல்லிடக் கூடாது பாரு!”

— மதுரை என். உஷாதேவி

முதலில் கண்களில் படுவது அங்கே மாட்டப்பட்டிருக்கும் கவிதை.

திண்ணியம் திகழ்ந்த ஷண்முக நாதா
தெற்கினை நோக்கிய சக்தியின் பாலா
எண்ணிய நல்லவை ஈடேற்றியே
ஏற்றம் கொடுத்திடும் சற்குருநாதா.

மேற்கு நோக்கி சிவபெருமான், சந்நிதி இருந்தாலும் நேரே முருகப் பெருமானை முதலில் தரிசிக்கிறோம். மயில் வாகனத்தின் மீது வீற்றிருக்கும் ஆறுமுகன். பன்னிரு கைகள்.

“தயை நிறைந்த திரு விழிகள் பனிரண்டும்
திகழ்ந்த முறுவல் வதனம் ஆறும்
புஜக ராஜன் எனத் திகழ்ந்த பன்னிரு
புயங்களும்” என்று எம். எஸ். அவர்கள் பாடியது நினைவுக்கு வருகிறது. குஹ சரவணபவ சிவபாலன் இங்கே வள்ளி தேவசேனா சமேதனாகக் காட்சியளிக்கிறார். இதில் வியப்பு என்னவென்றால் வள்ளி ஒரு தனி மயில் மீதும், தெய்வயானை ஒரு தனி மயில் மீதும் அமர்ந்து தரிசனம் தருகிறார்கள். இந்த மூர்த்திகளைச் செய்த சிற்பி முருகனுடைய மனைவிகள் இருவரையும் சரியாசனம் கொடுத்து அமர வைத்திருப்பது நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. இரண்டு மயில்களும் முருகப் பெருமான் பக்கம் பார்க்கின்றன.

லால்குடியிலேயே அர்ச்சனைக்கு வேண்டிய பழம் புஷ்பம் வாங்கிக் கொண்டு போனபடியால், முதலில் திருச்சுற்றில் உள்ள விநாயகருக்கு அர்ச்சனை செய்தார் குருக்கள். சின்னஞ்சிறு கருவறை. அதற்கு வெளியே தளம் போட்டு மண்டபம் கட்டியிருக்கிறார்கள். பாவம் குருக்கள். மூன்றடியாகக் குனிந்து வாமனாவதாரம் செய்து உள்ளே சென்று அர்ச்சனை செய்தார். அவர் தலையில் இடித்துக் கொள்ளாமல் வெளியே வரவேண்டுமே என்று கவலைப்பட்டேன்! சிரத்தையாக வாழைப் பழத்தைக் கூடக் கிள்ளி நைவேத்யம் செய்தார். கிராமங்களில் பூஜை விதிகளை சரியாகக் கடைப்பிடிப்பது மகிழ்ச்சி தருகிறது.

கோஷ்டீச்வரர் என்ற அபூர்வமான பெயரைத் தாங்கிக் கொண்டு எந்தக் கோஷ்டியிலும் சேராமல் அத்தனை பேருக்கும் அருள்புரியும் ஈச்வரன் சந்நிதியில் தரிசனம் செய்கிறோம்.

“கோஷ்டீச்வரர் என்று எதனால் பெயர்?” ஒருவர் சொன்னார். “இங்கே நிறைய சிவலிங்கங்கள் இருந்ததாம். எல்லா லிங்கங்களையும் பல கிராமங்களுக்குக் கொடுத்து விட்டார்களாம். கோஷ்டியாக இருந்ததால் கோஷ்டீச்வரர் என்று கேள்வி” என்றார்.

அம்பாள் பெயர் பிருஹந்நாயகி. முருகப் பெருமானின் தாயார் பிருஹந்நாயகியாகத் தானே இருக்க முடியும். தன் அருமைச் செல்வன் வள்ளி தெய்வயானையுடன் மயில் வாகனங்களில் வீற்றிருப்பதைக் கண்டு சிரித்துக் கொண்டிருக்கிறாள். மாமியார்

நிற்கிறார். மருமகள்கள் சுவாதீனமாக உட்கார்ந்திருக்கிறார்கள். இதுவல்லவா அழகான குடும்பம்!

கல்வெட்டுக்கள் ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகையால் ஊர் மகாஜனங்களே சேர்ந்து கட்டிய கோவில் எனக் கருதலாம். இதைவிடச் சிறப்பு என்ன இருக்கிறது?

ஆறுமுகன் சன்னிதியிலும் அர்ச்சனை செய்து பிரஸாதம் தருகிறார் குருக்கள். தீபாராதனை செய்யும் போது அரக இலை வடிவமுள்ள வெள்ளி வேல் பளபளவென்று மின்னுகிறது. "வேல் புதியதாகச் செய்ததா?" "ஆமாம்! பழைய வேல் இன்னும் பெரிது" என்று எடுத்துக்காட்டினார். இதுவும் இலை வடிவமுள்ள வேல். அகலமான இலையின் மத்தியில் கல் பதித்த வேல். செப்பினால் செய்தது. முருகப்பெருமான் மீது சாத்தியிருந்த வெற்றிவேல். ரா. பி. சேதுப் பிள்ளையவர்கள் எழுதிய "வேலின் வெற்றி" என்ற புத்தகம் ஞாபகம் வந்தது. எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னால் படித்தது. மனம் எவ்வளவு அதிசயமான வஸ்து!

வெற்றி வேலைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொள்ளும் பாக்கியம் இன்று கிடைத்தது. ஏதோ ஒரு புத்துணர்வு, அந்த வேலில் ஊடுருவியுள்ள முருகப்பெருமானின் சக்தி நமக்குள்ளேயே பாய்ந்து விட்டது போல ஒரு புல்லரிப்பு. மனம்தான் காரணம் என்று தெரிந்தாலும் உணர்ச்சி உண்மையாக இருக்கிறதே.

சுவர்களில் கந்தரலங்காரம் கந்தர் அனுபூதி எல்லாம் கல்வெட்டாகப் பதித்திருக்கிறார்கள். கோபுர வாசலில் காவலாக நிற்கும் இடும்பனிடம் விடைபெற்றுக் கொண்டு தெருக்கோடியில் உள்ள மாமனின் கோவிலுக்குப் போகலாம்.

ஸ்ரீ வெங்கடராம பட்டாசாரியார் முதியவர். ஸேவார்த்திகள் வந்திருக்கிறார்களே என்று வேகமாக வருகிறார். இவர் ஏழாவது தலைமுறையாக லக்ஷ்மீநாராயணர் கோவில் பணி செய்கிறார்.

"எங்கள் சந்தானகோபால சுவாமி! அனுக்ரஹமூர்த்தி. இந்த ஊரில் ஸ்வீகாரம் என்பதே கிடையாது. கல்யாணம் ஆன உடனே மணமக்களை அழைத்துக் கொண்டு வந்து சேவிப்பார்கள். கிங்கிணி தாயத்து செய்து கோபாலனுக்குச் சாத்துவார்கள். ரோகிணி நக்ஷத்திரத்தில் அர்ச்சனை செய்வார்கள்" என்று தம்முடைய பகவானைப் பற்றிச் சொல்லிக் கொண்டே போகிறார்.

கோவா அரசை மிரட்டிய பில்!

ஜனாதிபதி கே.ஆர். நாராயணன், தன் மனைவியுடன் சென்ற கிருஸ்துமஸ் சமயத்தில் கோவா சென்றிருந்தார். ஜனாதிபதி தம்பதி கோவா ராஜ்பவனில் தங்கிக்கொள்ள, ஜனாதிபதியுடன் சென்றிருந்த இன்னும் அரை டஜன் பேர், ராஜ்பவனில் தங்க இடவசதி இல்லாததால், ஐந்து நட்சத்திர ஓட்டலில் தங்க வைக்கப்பட்டனர். இப்போது, அந்த வி.ஐ.பி. விருந்தினர்கள் தங்கியதற்கான கட்டணம் என்று பல லட்சம் ரூபாய்க்கு ஒரு பில் வந்திருக்கிறது. மிரண்டு போன கோவா நிர்வாகம், மாநில அரசிடம் நிதி வசதி இல்லை என்று சொல்லி, ராஷ்டிரபதி பவனுக்கு, பில்லை அனுப்பி வைத்து விட்டது.



• கே.ஆர். நாராயணன்

— சி.எம்

அந்த எளிமையும் அழுத்தமான நம்பிக்கையும் நமக்கும் நம்பிக்கை தருகிறது.

"முருகன் மருமான். எங்கே சுவாமி புறப்பாடு என்றாலும் இரண்டு கோவில்களிலும் தடபுடலாக இருக்கும். அந்தக் கோவிலிலிருந்து கிளம்பி வந்து இவரையும் அழைத்துக் கொண்டு இரண்டு பேருமாக, தான் ஊர்வலம் போவார்கள். அதே மாதிரி இவரைக் கொண்டு சேர்த்து விட்டுத்தான் மருமான் போவார். அவ்வளவு பிரியம்!"

ஸ்ரீ லக்ஷ்மிநாராயணருக்கும் சந்தான கோபால சுவாமிக்கும் தீபாராதனை செய்கிறார். பெருமான் லக்ஷ்மிதேவியை மடியில் வைத்துக் கொண்டிருக்கிறார். கண்ணபிரான் ஒரு காலை மடித்து முன் பக்கம் ஸ்வஸ்திகமாக வைத்து இடுப்பில் சிறிய நெளிவுடன் குழல் ஒலியில் தானே சொக்கிப் போய் நிற்கிறார். பீடத்தின் அடியில் பசுக்கள் அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கின்றன.

"நந்தினி பட்டின்னு பேரு. காமதேனுவின் பெண்கள். காளிங்க நர்த்தனத்தைப் பார்த்து அப்படியே சந்தோஷப்பட்டுதாம். கிருஷ்ணன் புல்லாங்குழல் வாசிச்சால் ஓடி வந்து விடுவார்கள் பட்டியும் நந்தினியும்" என்றார் பட்டர்.

கண்ணபிரானுடைய இடுப்பில் ஏகப்

பட்ட அரைஞாண்கள் சுற்றப்பட்டிருக்கின்றன. அவிழ்த்து எடுத்து வந்து காட்டுகிறார் பட்டர். தாயத்து, நாய்க்காசு, மாங்காய், மணிகள் எல்லாம் கறுப்புக் கயிற்றில் கோத்து அணிவித்திருக்கிறார்கள். அங்கே வேலைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டோம். இங்கே பகவானின் இடுப்புச் சதங்கையைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொள்ளும் பேறு கிடைத்திருக்கிறது. நம்மைக் காக்கும் பகவானைக் காக்க நாய்க்காசு கூட அணிவித்திருக்கிறார்கள். இதுவும் ஒரு பக்திதான். வாத்ஸல்ய பக்தி.

''இது அபிமானிக்கப்பட்ட தலம்'' என்கிறார் பட்டர். இவருக்கு 'அபரிமித பரிவாரய்யா' என்பார்கள். எண்ண முடியாத பரிவாரங்கள்.

ஒரு பக்கம் அஞ்சலி பந்தன ஆஞ்சனேயர். அவருக்கும் தீபாராதனை செய்கிறார்.

இன்னொரு பக்கம் ஸ்ரீவேணுகோபாலன். அழகான விக்ரகம். சிற்பி கிருஷ்ணன் பாதத்தைப் பின்பக்க ஸ்வஸ்திகமாகச் செய்து விட்டிருக்கிறார். அதனால் இவரைப் பிராகாரத்தில் வைத்து விட்டார்.

ரொம்ப மனமகிழ்ச்சியளித்தது கோவில் பிராகாரத்தில் உள்ள புஷ்ப செடிகள்தான். வெங்கடேச பட்டர் தாமே பராமரிக்கிறார். பவழ மல்லிகை, அரளி, துளசி, நந்தியாவட்டை எல்லாம் செழிப்பாகத் தெரிகின்றன. ''இதைப் பாருங்கோ! செம்பருத்தி. விருட்சிச் செடி வைத்தேன். அது மட்டும் நன்னா வரலை'' என்று சொல்லிக் கொண்டே அடுத்த மரத்திலிருந்து ரப்பர் குழாயை எடுத்து விருட்சிக்கு நீர் பாய்ச்சுகிறார். கோபாலனிடம் அவர் வைத்திருக்கும் அன்பை அவனுக்குப் பூஜிக்கப் புஷ்பம் தரும் இந்தச் செடிகள் மீதும் அவர் காட்டுவது போலத் தோன்றுகிறது. ஸ்ரீ ஆண்டாளின் தந்தையாரின் ஞாபகம்தான் வருகிறது.

''பசுந்தழை உரமும் மக்கிய மாட்டுச் சாணமும் கலந்து விருட்சிச் செடியைச் சுற்றிக் கொத்தி விட்டு வைத்தால் சீக்கிரம் வளரும்'' என்று எனக்குத் தெரிந்த தாவர ஞானத்தை வைத்துச் சொல்லி விட்டுக் கிளம்பினேன்.

கோவிலுக்குத் திருப்பணி நடந்து வருகிறது.

ஸ்ரீ சுதர்சன சக்கரம் பிரதிஷ்டை செய்யப் போகிறார்கள்.

''ஸ்ரீரங்கத்திலிருந்து வந்து தசாவதாரமும் எழுதப் போகிறார்கள்''. சுவர் பூசப்பட்டுத் தயாராக இருக்கிறது.

''பல்குனியாற்றுக்கு வடகரையில் சந்தானகோபாலனும், ஷண்முகநாதனும் இருக்கிறார்கள். ஈசான்யத்தில் மீனாக்ஷி சுந்தரேச்வரர் ஆலயம் இருக்கிறது. பிள்ளையார் கோவில் இருக்கிறது. ''ஆமாம்! ஏன் திண்ணியம் என்று பெயர் வந்தது?''


''திருநயம்! என்றுதான் ஊருக்குப் பேர். அது திண்ணியம் ஆயிடுத்து'' என்றார் பட்டர் நிச்சயமாக.

நயமான விளக்கம். அழகான ஊர், மாசற்ற காற்று, நீர்வளம், நெல்வளம், பக்தர்கள். நான்கு கோவில்கள். இன்னும் என்ன வேண்டும்?

மாமனையும் மருகனையும் தரிசித்த மகிழ்ச்சி உள்ளத்தில் வியாபிக்கிறது.

படங்கள் : **வெங்கடேஷ்**

லாலுவுக்கு பிடித்த தொடர்?...



ஏப்ரல் 8ம் தேதியிலிருந்து சனிக்கிழமை மாலை ஐந்து மணிக்கு 'ஹார்ஸ் டேல்ஸ்' என்ற நிகழ்ச்சி அனிமல் ப்ளானட் சேனலில் வர இருக்கிறது!

குதிரைகளைப் பற்றிய விலாவாரியான செய்திகள், நாம் கேள்விப்பட்டிராத தகவல்கள் இதில் இடம் பெறுகிறது. எந்தெந்த நாட்டில் குதிரை எப்படியெப்படி வளர்க்கப்படுகிறது, குதிரைக்கும் அதன் மீது சவாரி செய்பவருக்குமான உறவு, வி.ஐ.பிக்கள் வீட்டுக் குதிரைகள், குதிரைகள் வாங்க-விற்க என்று பல கோணங்களில் தயாரித்திருக்கிறார்கள். நமது நாட்டுக் 'குதிரை வியாபாரி'கள் இத்தொடரைப் பார்ப்பார்களா?

– ஏக்





பிளாட்பாரத்திலிருந்து பாராளுமன்றத்துக்கு!

“டெல்லிக்குச் சுற்றுலா புறப்படும் முன்பாகவே, மத்திய அமைச்சர் டி. ஆர். பாலுவின் உதவியால், நாங்கள் பாராளுமன்றத்துக்கு உள்ளே செல்ல பிரத்யேக அனுமதி பெற்றிருந்தோம். ஆனால் எங்களை உள்ளே விடவில்லை. வெளியில் பிளாட்பாரத்திலேயே உட்காரச் சொல்லி விட்டார்கள். எங்களுக்கு அவமானமாகப் போய் விட்டது” என்கிறார்கள் சென்னை அடையாறு செயின்ட் லூயிஸ் காது கேளாதோர் பள்ளி மாணவர்கள்!

“ஒரு எம்.பிக்கு இரண்டு விசிட்டர்கள் அனுமதி, ஒரு அமைச்சருக்கு நாலு பேர் அனுமதி. நீங்கள் மொத்தம் அறுபது பேர். எப்படி அனுமதிக்க முடியும்?” என்று கேட்ட செக்யூரிட்டி அலுவலர்களிடம், ஏற்கெனவே, காதுகேளாதோர் பள்ளி மாணவர்கள் என்ற முறையில் நாங்கள் விண்ணப்பித்ததன் அடிப்படையில், பாராளுமன்ற பார்வையாளர் அனுமதி பிரிவிலிருந்து அனுப்பப்பட்ட அனுமதி கடிதத்தைக் காட்டினோம். அப்படியும் அவர்கள் எங்களை உள்ளே அனுமதிக்கவில்லை” என்கிறார் அப்பள்ளியின் ஆசிரியரான கபீர்தாஸ்!

“பெரும் வாக்குவாதத்துக்குப் பின், மேலதிகாரிகளைச் சந்தித்து அனுமதி பெற ஒரே ஒரு ஆசிரியரை செக்யூரிட்டியினர் அனுமதிக்க, மாணவர்கள் பாராளுமன்றத்துக்கு வெளியில் பிளாட்பாரத்தில்! போகிற வருகிறவர்கள் எல்லாம், மாணவர்கள் போராட்டமா? தர்ணாவா? என்று விசாரிக்க ஆரம்பித்து விட்டனர். அப்போது அங்கே, பாண்ட், சட்டை, சால்வை அணிந்து

இது தீர்ப்பு!

கார் வாங்கினார் ஒரு பெண். கார் எப்பொழுதும் இடது பக்கமே திரும்புகிறதென்று கார் கம்பெனியின் மீது வழக்குப்



போட்டிருந்தார்! காரைத் தாமே ஓட்டிப் பார்த்த நீதிபதி, கார் நல்ல நிலையிலிருக்கிறதென்றும், அதை அந்தப் பெண் வைத்துக் கொள்ள வேண்டுமென்றும் கார் கம்பெனிக்குச் சாதகமாகத் தீர்ப்பளித்திருக்கிறார். இது நடந்தது மலேசியாவில்!

நன்றி: 'தி டெலிகிராஃப்'
தகவல்: பத்மினி கிருஷ்ணன்

ஜோல்னா பையுடன் வந்த ஒரு பெரியவர், எங்களை விசாரித்து விட்டு, செக்யூரிடியினரிடம் 'இவர்களை அனுமதியுங்கள்' என்றார். செக்யூரிடி மறுக்க, 'என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? தென்கோடியிலிருந்து வந்திருக்கிற மாணவர்களை சித்ரவதை செய்கிறீர்களே? இவர்கள் பாராளுமன்ற வாசலில் பிச்சையெடுக்க வந்திருக்கிறார்களா? இவர்கள் எல்லாரும் இந்த நாட்டின் குடிமக்கள்; அவர்களை உங்களால் தடுக்க முடியாது. இவர்களை அனுமதிக்காவிட்டால், உங்களைச் சும்மா விட மாட்டேன்' என்று உரக்கக் கத்தினார். அவர்கள் ஏதோ சொல்ல, "இப்போது இவர்களை அனுமதிக்கப் போகிறீர்களா? இல்லையா?" என்று அதிரடியாய்க் கேட்டு விட்டு, எங்களைப் பார்த்து, 'வாருங்கள். உள்ளே போகலாம்' என்றார். நாங்கள் பாராளுமன்றத்துக்குள்ளே போய், பார்வையாளர்கள் பகுதியில் உட்கார வைக்கப்பட்டோம்.

"எங்களுக்கு, எதிர்பாராத நேரத்தில் உதவிய அந்த மனிதர் குருதாஸ் குப்தா எம்.பி! இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்.

"பார்வையாளர் பகுதியிலும் ஏகப்பட்ட கெடுபிடி. எங்கள் மாணவர்கள் காது கேளாதவர்கள் என்பதால், பாராளுமன்ற நடவடிக்கைகளை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. நாங்கள், சைகை மொழியில் அவ்வப்போது விளக்கிக் கொண்டிருந்ததையும் பாதுகாப்பு காவலர்கள் ஆட்சேபித்தனர். எங்கள் நிலைமையை விளக்கிய பின் சமாதானமானார்கள்.

"நாங்கள், எங்களுக்கு அனுமதிக்கப்பட்ட நேரம் முடிந்து புறப்பட்ட போதும் எம்.பி. குருதாஸ் குப்தா எங்களைச் சந்தித்தார். அவருக்கு நன்றி கூறினோம்.

"நாங்கள் குதுப்மினார் சென்ற போதும் ஒரு திடீர்ப் பிரச்னை! மொராக்கோ நாட்டு ஜனாதிபதி குதுப்மினாரைப் பார்க்க வந்து விட்டார். சைரன் ஒலிக்க பார்வையாளர்கள் உடனடியாக அப்புறப்படுத்தப்பட்டனர். போலீசார், விசில் ஊதி, பார்வையாளர்களை இடத்தை விட்டு அகலச் சொன்னது, எங்கள் மாணவர்களுக்குக் கேட்காததால், பிரச்னையாகி விட்டது. நாங்கள் ஒவ்வொரு மாணவரையும் தோளில் தட்டி, நகர்ந்து போகச் சொல்லும்படியாகி விட்டது. இதனால் ஒரே டென்ஷன்!

"தாஜ்மகாலுக்குப் போனபோது, ஒரு இனிய அனுபவம். அங்கே வந்த சில அமெரிக்க டூரிஸ்டுகள், எங்கள் மாணவர்கள் காது கேளாதோர் என்று அறிந்ததும், சைகை மொழியில் அவர்களுடன் உரையாடத் தொடங்கி விட்டனர். ஆனால், அகில உலக அளவில் பயன்படுத்தப்படும் சைகை மொழிக்கும், இங்கே நாங்கள் பயன்படுத்துவதற்கும் இடையில் சில வேறுபாடுகள் இருப்பதால், அவர்களது சைகை மொழி, எங்கள் மாணவர்களுக்கு முழுவதுமாகப் புரியவில்லை" என்கிறார் ஆசிரியர் தனராஜ்.

— எஸ். சந்திரமௌலி

சுமி சூப்பர்மார்க்கெட்



ஃப்ளை ஓவர் புகழ் மேயரை ஈவினிங் அவர்ஸ்ல கத்திபாரா ஜங்ஷனுக்கும் பனகல் பார்க் டு பாண்டிபஜார் போற வழியிலயும் வந்து ஒன் அவர் நிக்கச் சொல்லி தர்ணா பண்ணலாமான்னு யோசிச்சிட்டிருக்கேன்.

நியாயமா இந்த ரெண்டு இடங்கள்ல ட்ராஃபிக்கை ரெகுலேட் பண்றதுதான் ரொம்ப முக்கியம். தினம் தினம் எத்தனை ஆக்ஸிடென்ட்ஸ்! எத்தனை டூவீலர் கவிழுது தெரியுமா? நாலு பக்கத்துலேருந்தும் ராமர் விட்ட பாணம் மாதிரி வண்டிங்க சீறி வர்ற காட்சி கதிகலக்குது.

என்னை மாதிரி மூஞ்சூறு வாகனம் வெச்சிருக்கறவங்க, இறங்கி தள்ளிட்டுப் போகலாம்னா கூட பின்னாடி நூறு லாரி ராட்சஸர்கள் ஹாரன் அடிச்சி பயமுறுத்தறாங்க.

பர்டிகுலரா, கத்திபாரா ஜங்ஷன்ல இருக்கற ட்ராபிக் போலீஸ்காரங்களைப் பத்தி சொல்லணும்.

லாரி, டூவீலர்ஸை மடக்கி விசாரிக்கறேன் பேர்வழின்னு திருவோடு ஏந்தாத குறையா ஒரு ஓரத்துல போயி கலெக்ஷன் பிஸினஸை ஆரம்பிச்சுடறாங்க.

சிக்னலும் கிடையாது; ஒரு மண்ணாங்கட்டியும் கிடையாது அங்கே. ஒவ்வொரு நாளும் டூ வீலர்ஸ் படற பாட்டைச் சொல்லி முடியாது!

சந்து பொந்துக்கெல்லாம் பாலம் கட்டற மேயர் இந்த இரண்டு ஸ்பாட்டையும் இம்மீடியட்டா கவனிக்கணும். அப்பத்தான் 22ம் நூற்றாண்டுலயாவது பயணிகள் இந்த ரூட்ல பயமில்லாம போக முடியும்.

* * *

ஆண்டு நிறைவு விழாவுக்கு ஒரு ப்ளான் வெச்சிருக்கேன்னு எழுதினாலும் எழுதினேன். அடேங்கப்பா, நூறு ஃபோன் கால்ஸ், ஆயிரம் போஸ்ட் கார்ட்ஸ், லட்சம் டெலிகிராம்ஸ் (னு எழுதத்தான் ஆசை!)

என்ன ப்ளான்னு சொல்றதுக்கு முன்னாடி இந்த வருஷம் உருப்படியா என்னென்ன செஞ்சிருக்கேன்னு ஒரு லிஸ்ட் போடலாமா?

நிறைய வீக் மட்டம் போட்டிருக்கேன். சுமார் 35 நல்ல புஸ்தகங்களை இன்ட்ரொட்யூஸ் பண்ணியிருக்கேன். நிறைய இலக்கியவாதிகளோட வயித்தெரிச்சலைக் கொட்டிக்கிட்டதோட இல்லாம சில சிற்றிதழ்களோட கண்டனத்துக்கும் ஆளாகியிருக்கேன். சில தமிழ்ப் பண்டிதர்களோட மானசீக சாபங்களைப் பூமாலையா ஏத்துக்கிட்டிருக்கேன். (அரசியல்வாதிகள், கதராடையைப் பொன்னாடையா ஏத்துப்பாங்களே, அது மாதிரி.) நாட்டுல பல நல்ல கவிஞர்கள் உருவாகக் காரணமா இருந்திருக்கேன் (ம்க்கும்!) அடுக்கிட்டே போனா ஒரு சப்ளிமென்ட் வேண்டியிருக்கும். ராணி குருநாதனோ, விஜய ராகவனோ, லாவண்யாவோ என் சாதனைகளை விளக்கி ஒரு மலர் கொண்டு வர ட்ரை பண்ணலாம். அல்லது, இந்த columnஐ ஆராய்ந்து ஒரு பிஎச்டி வாங்கலாம்.


இப்பவே புரிஞ்சிருக்கும். யா! இந்த மார்க்கெட்டை கொஞ்ச நாள் ஏறக்கட்டி வெக்கலாம்ங்கறதுதான் ந்யூ இயர் ப்ளான்.

லட்சக்கணக்கான ரசிகர்கள் கண்ணீர் விடப் போறாங்கன்னு தெரியும். 'வேண்டாம் சுமி!' 'ப்ளீஸ் சுமி'ன்னு கதறப் போறீங்கன்னும் தெரியும்.(!) (நம்ம எதிரிகள் கேக் வெட்டப் போறதும்!) பட், திஸ் இஸ் மை டிஸிஷன். ஒரு சேஞ்சுக்காக. ஃப்ரெஷ் ஐடியாஸோட, வேற விதமா வேற ஒரு சந்தர்ப்பத்துல சந்திக்கலாம்னுதான் நினைக்கறேன்.

எடிட்டருக்கே ரொம்ப வருத்தம். எதுக்கு நிறுத்தறேன்னு கேட்டாங்க. சும்மாத்தான்! ஏதாவது விசேஷம்னா கெஸ்ட் ரைட்டரா அப்பப்ப தலைகாட்டறேன்னு சொல்லியிருக்கேன்.

மன்ற உறுப்பினர்களுக்கு என் மனமார்ந்த தமிழ் ந்யூ இயர் வாழ்த்துகள்! பை!

— சுமி



• ஸ்டாலின்

உமா சொன்னாள்!

பானுமதி ராஜகோபாலன்

மகாதேவன் வேலைக்குப் போவதில் பாகீரதிக்குத் துளியும் இஷ்டமில்லை

"இப்ப என்ன நெருக்கடின்னு நீங்க வேலைக்குக் கிளம்பறேள்? ரிடையர்டு ஆகி ஆறு மாசமா டென்ஷன் இல்லாமே ஹாயா கோவில், உபன்யாசம், சபா கச்சேரி, பிரண்டு வீடுன்னு நிம்மதியாத்தானே இருந்தேள்? திடுதிப்புனு எதுக்கு இப்ப மறுபடியும் வேலைக்குப் போக ஆரம்பிச்சிருக்கேள். ஏற்கெனவே உடம்பிலே பிளட்பிரஷர், ஷுகர் எல்லாம் இருக்கு. பழையபடி அவசர அவசரமா கிளம்பி பஸ்ஸிலே இடிபட்டு போய் நாள் பூரா முதுகு ஒடிய உட்கார்ந்து உழைக்கத் தெம்பு வேண்டாமா?"

மகாதேவன் கைப்பையை எடுத்துக்கொண்டார்.

"அதுக்கில்லே பாகீரதி! சரண்யா எம்.ஏ. முடிச்சுட்டா. பொழுதுபோறதுக்காக கம்ப்யூட்டர் கிளாஸ் அது இதுன்னு போக ஆரம்பிச்சுட்டா. ஆச்சு. அவ கல்யாணத்துக்கும் வரன் தேட ஆரம்பிக்கணும். கல்யாணம்னு வந்துட்டா நம்ம கிட்டேயும் நாலு காசு அதிகமா இருந்தா தேவலைதானே."

"சரண்யா கல்யாணத்துக்குன்னு உங்க பி.எஃப். பணத்தை அப்படியே பிக்ஸட்லே போட்டு வெச்சாச்சு. ரகுவும் எஞ்ஜினியரிங் முடிச்சுட்டு டில்லியிலே கைநிறைய சம்பாதிக்கறான். பென்ஷனும் உங்களுக்கு வரது. போதாதா?"

அவள் பேச்சைக் கேட்க மகாதேவன் அங்கு நிற்கவில்லை. கிளம்பிப் போய்விட்டார்.

பாகீரதி அன்று இரவே, மகாதேவன் வீட்டில் இல்லாத சமயமாகப் பார்த்து பிள்ளையிடம் டெலிபோனில் புலம்பினாள்.

ரகு அந்த சனி ஞாயிறு லீவில் கிளம்பி வந்து தாம், தூம் என்று குதித்தான்.

"அதான் நான் தலையெடுத்தாச்சு இல்லையா? எதுவானாலும் நான் பார்த்துக்கறேன். நீங்க வேலைக்குப் போய் சம்பாதிச்சுதான் இங்கே உலை கொதிக்கணுமா? சரண்யா கல்யாணத்தைப் பத்தி நீங்க கவலைப்பட வேண்டாம். நானே செலவு பண்ணி அவ கல்யாணத்தை ஜாம் ஜாம்னு நடத்திக் காட்டறேன் பாருங்கோ."

பாகீரதிக்குக் கண்ணீர் தளும்பியது.

"பார்த்தேளா... இப்படி ஒரு பிள்ளை கிடைச்சதே நம்ம புண்ணியம்தான்."

மகாதேவன் இலேசாகச் சிரித்தார்.

"அப்படி இல்லைடா. எனக்கும் பொழுது போக வேண்டாமா? சும்மா இருக்க முடியலை. அதான்..."

"கொஞ்ச நாள் அப்படித்தாம்பா இருக்கும். வட இந்தியா டூர் ஏற்பாடு செய்யட்டுமா? ரெண்டு பேரும் போயிட்டு வரேளா? சரண்யா



வேணா அதுவரை அத்தை வீட்டிலே இருக்கட்டும்."

"அதெல்லாம் வேண்டாண்டா. சரி... நீங்க ரெண்டு பேரும் சொல்ற மாதிரி வேலையை விட்டுடறேன். ஆனா திடுதிப்புனு விட்டுட முடியாது. என் பிரண்ட் கோபாலனோட மாப்பிள்ளையோட சொந்தக் கம்பெனி இது. கோபாலன்தான் மாப்பிள்ளைகிட்டே சொல்லி இந்த வேலையை வாங்கிக் கொடுத்தான். மாப்பிள்ளையும் ரொம்ப தங்கமான பிள்ளை. ஹெவி ஒர்க் எதுவும் எனக்குக் கொடுக்கறதில்லை. இப்படி இருக்கறப்போ திடீர்னு வேலையை விட்டா அவாளை அவமதிக்கிற மாதிரி ஆயிடாதா? ரெண்டு மூணு மாசம் போகட்டும். தினம் பஸ்ஸிலே ரெண்டு தடவை பிரயாணம் பண்ண முடியலை. நாள் பூரா உட்கார்ந்திண்டே இருக்க முடியலைன்னு ஏதாவது சாக்கு சொல்லி நிறுத்திக்கறேன்... போதுமா?"

ஓரளவு திருப்தியுடன் கிளம்பினான் ரகு.

பாட்டோடு பாட்டாக சரண்யாவுக்கு வரன் தேடும்



முயற்சியில் மும்முரமாகக் கிளம்பினார் மகா தேவன். ஒன்றும் சரியாக அமையவில்லை. ஆனால் வரன் தேடிப் போன இடத்தில் ரகுவுக்குத் தோதாக பெண் ஜாதகம் ஒன்று கிடைத்தது.

ஜாதகம் பொருந்தியதோடு மற்ற விஷயங்களும் ஒத்து வந்தன. மனிதர்களும் நல்ல மாதிரியிருந்தார்கள். கிட்டி முட்டிப் போனதில் பாகீரதிக்கு தூரத்து வகையில் சொந்தமாகவும் ஆகிவிட்டார்கள்.

ஆனால் சரண்யாவுக்குப் பண்ணாமல் ரகுவுக்கு பண்ணுவதா என்று இலேசான நெருடலும் எழுந்தது.

சரண்யா கோபப்பட்டாள்.

"என்னப்பா இது? பத்தாம்பசலி மாதிரி பேசறே? நல்ல இடமா வந்திருக்கறப்போ உடனே ரகுவுக்குக் கல்யாணம் பண்ணிடறதுதானே நல்லது. எனக்கு ஆகலையேன்னு இப்ப இதை நழுவ விட்டுட்டா, என் கல்யாணத்துக்குப் பிறகு அண்ணாவுக்கு இதே மாதிரி நல்ல பெண் கிடைப்பாள் என்கிறது என்ன நிச்சயம்?" என்று வாதாடினாள்.

மகாதேவனும் பாகீரதியும் ஓரளவு சமாதானம் ஆனார்கள். ஆனால் ரகு இலேசில் சம்மதிக்கவில்லை. பெண் பார்க்க வரவே ஒத்துக்கொள்ளவில்லை. சரண்யா கல்யாணத்துக்குப் பிறகுதான் பண்ணிக் கொள்வேன் என்று ஒற்றைக் காலில் நின்றான். ஆள் ஆளுக்கு சமாதானம் சொல்லி வேப்பிலை அடித்து... எப்படியோ ஒரு சுபயோக சுபதினத்தில் ரகு – உமா திருமணம் அமர்க்களமாக நடைபெற்றது.

கல்யாணம் முடிந்து, ரகு உமாவுடன் டில்லிக்குக் கிளம்பினான்.

"அப்பா! நீங்க சொன்ன மூணு மாச கெடு முடிஞ்சிட்டுது. உமா கூடச் சொன்னா, நீங்க இப்ப வேலைக்குப் போறது உமாவுக்குக் கூடப் பிடிக்கலை. சரண்யா கல்யாணம் நம்ம பொறுப்புதானே? நாம செய்ய மாட்டோமான்னு கேட்கறா? அப்புறம் உமா இன்னொண்ணும் சொன்னா. சரண்யா கல்யாணத்துக்கு அப்புறம் நீங்க ரெண்டு பேரும் இங்கே தனியா இருக்க வேண்டாம். நம்மளோட டில்லிக்கு வந்துடட்டும்னும் சொன்னா. இப்ப நீங்க வேலைக்குப் போறதை விட்டுடறேன்னு சொன்னாத்தான் உமாவுக்கும் திருப்தியா இருக்கும்" என்றான் ரகு.

"ஆமாம் அப்பா! நாங்கதான் பொறுப்பை ஏத்துண்டாச்சில்லையா? இனிமே நீங்களும் அம்மாவும் ரெஸ்ட் எடுத்துக்குங்கோ. எல்லாம் நாங்க பார்த்துக்கறோம்" என்றாள் உமா.

பாகீரதி அப்படியே நெகிழ்ந்து போனாள். பிள்ளைதான் தங்கம் என்றால் மாட்டுப் பெண் சொக்கத் தங்கமாக ஜொலிக்கிறாளே?

அவர்கள் கிளம்பிப் போன மறுநாள் மகாதேவன் வழக்கம் போல் ஆபீஸ் போக ஆயத்தம் செய்தார்.

பாகீரதிக்குக் கோபம் வந்தது.

"அதான் பிள்ளையும் மாட்டுப் பெண்ணும் படிச்சுப் படிச்சு சொன்னாளோன்னோ? அப்புறமும் நீங்கபாட்டுக்கு ஆபீஸுக்குக் கிளம்பினா என்ன அர்த்தம்?"

மகாதேவன் கண்ணாடி முன் நின்று தலை வாரிக் கொண்டார்.

"பாகீரதி! நான் முதன் முதலா வேலைக்குப் போகத் தொடங்கினப்போ ரகு வந்து சப்தம் போட்டான் இல்லையா? அப்போ கூட வேலையை விட்டுடலாம்னு தான் நினைச்சேன். ஆனா இப்போ அவன் பேசினதைப் பார்த்தப்போ நிச்சயம் போயே ஆகணும்னு தீர்மானம் பண்ணிட்டேன்."

"ஏன் அப்படி? அந்தப் பொண்ணு கூட உரிமையா நீங்க வேலைக்குப் போக வேண்டாம்னுதானே சொல்லித்து?"


"அங்கேதான் நீ ஒண்ணைக் கவனிக்கலை. முதல் தடவை ரகு பேசினப்போ நான் இருக்கேன் அப்பா, நான் பார்த்துக்கறேன், நான் செய்யறேன்னு சொன்னான். ஆனா இப்ப அவன் என்ன சொன்னான் கவனிச்சியா? உமா சொன்னா, உமா அபிப்ராயப்படறா, உமா தீர்மானம் பண்ணிட்டான்னு அவனோட முடிவையே தன் முடிவா எடுத்துண்டு பேசினான். அவளும் நல்ல பொண்ணுதான். ஆனா அவா இரண்டு பேரும் இனிமே ஒண்ணு... அதனால நம்ம தேவைக்கு யாரையும் அண்ட வேண்டாம்...

பாகீரதி ஒன்றும் பேசாமல் டிபன் பாக்ஸில் மதிய உணவை வைத்து கைப்பையில் போட்டு அவரிடம் நீட்டினாள். ○

"என்னமோ... நம்ம பையன் பத்மநாதன் அடிக்கடி 'பத்துக்குப் பத்து'ங்கிறான்..."

"இன்னுமா புரியலே... அவன் எதிர் வீட்டு பத்மப்ரியாவை விரும்புறாங்க..."

— தஞ்சை ராமு





வந்தாரே வின் சத்தா!

போஃபர்ஸ் வழக்கில் முக்கியப் புள்ளியான மிஸ்டர் Q என்கிற குவாத்ரோச்சி இன்னும் இந்தியாவுக்கு வராமல் டபாய்த்துக் கொண்டிருக்க, இன்னொரு புள்ளியான 'வின்சத்தா' இந்தியா வந்து இறங்கியிருக்கிறார். டயாபடீஸ், சிறுநீரகக் கோளாறு, ஹைப்பர் டென்ஷன், ஹார்ட் பிராப்ளம், மூட்டுவலி, இன்னபிற வியாதிகளுடன் தனது பர்சனல் டாக்டர் ராணாவத் சகிதம் இந்தியா வந்துள்ள வின்சத்தா விமான நிலையத்திலிருந்து நேரே போனது டெல்லி பாத்ரா மருத்துவமனைக்குத் தான். அங்கிருந்து கோர்ட். மறுபடி ஆஸ்பத்திரி!

வின்சத்தாவுக்கு வயது எழுபத்து ஏழு. முழுப் பெயர் வாஷேஷர் நாத் சத்தா. இவருக்கு கோர்ட்டில் நாலாயிரத்து ஐந்நூறு பக்கங்கள் கொண்ட போஃபர்ஸ் கேஸ் சம்பந்தப்பட்ட விவரங்கள் அடங்கிய ஆவணங்கள் தரப்பட்டன. அவற்றைப் படிக்கிற நிலைமையில் வின்சத்தா இல்லை. அவரது அனாடிரானிக்ஸ் கார்ப்பரேஷன் என்ற நிறுவனத்தின் டெல்லி அலுவலகத்தில் பணிபுரியும் ஒரு புத்திசாலி அதிகாரி இப்போது அந்த டாகுமெண்ட்களை தீவிரமாகப் படித்து, வின்சத்தாவின் சட்ட ஆலோசகர்களுடன் விவாதித்துக் கொண்டிருக்கிறார். ''எனக்கும், போஃபர்ஸ் பேரத்தில் வழங்கப்பட்ட கமிஷனுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை'' என்கிறார் வின்சத்தா.

வின்சத்தா ஒரு விஞ்ஞானப் பட்டதாரி. சுகர் டெக்னாலஜி படித்தவர். அதன்பின் அமெரிக்கப் பல்கலைக்கழகம் ஒன்றில், ஸ்காலர்ஷிப்பில் பிசினஸ் நிர்வாகம் படித்தார். அமெரிக்காவில் படிப்பை முடித்துவிட்டு, அங்கேயே பன்னாட்டு நிறுவனமான ஜான்சன் அண்டு ஜான்சனில் பணிக்குச் சேர்ந்தார். பிறகு பல்வேறு பன்னாட்டு நிறுவனங்களுக்கு, ஆலோசனைகள் வழங்கும் கன்சல்டன்சி நிறுவனம் ஒன்று ஆரம்பித்தார். இவரது உலகளாவிய பிசினஸ் வலை விரிந்தது. அப்படித் தொடர்பு கிடைத்த நிறுவனங்களுள் ஒன்றுதான் போஃபர்ஸ்.

இந்திய அரசு, போஃபர்ஸ் நிறுவனத்துக்குப் பீரங்கிகள் வாங்குவதற்கான ஆர்டரைக் கொடுத்ததில் வின்சத்தாவுக்கு முக்கியப் பங்கு உண்டு.

போஃபர்ஸ் நிறுவனத்துக்கு ஆர்டர் கிடைத்ததையடுத்து, தன் நண்பர்கள் மற்றும் டெல்லி வி.ஐ.பிகளுக்கு டெல்லியின் ஐந்து நட்சத்திர ஓட்டல் ஒன்றில் ஆடம்பர பார்ட்டி ஒன்று அளித்தார். இப்போது அதைப் பற்றிக் குறிப்பிடும்போது, "இதற்கும் போஃபர்ஸ் நிறுவனத்துக்கு, மத்திய அரசு பீரங்கிகள் வாங்க ஆர்டர் கொடுத்ததற்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. என்னுடைய அறுபதாவது பிறந்த நாளையொட்டி என் நண்பர்களுக்கு அளிக்கப்பட்ட பார்ட்டிதான்" என்று விளக்கம் தருகிறார் இவர்.

"நான் ஆயுத வியாபாரத்தில் கமிஷன் ஏஜெண்டாக இருந்திருக்கிறேன். ஆனால் அது, இந்திய அரசு ஆயுதம் வாங்கும் போது, இடைத்தரகர்களுக்கு கமிஷன் தரக்கூடாது என்ற முடிவினை எடுப்பதற்கு முன்பு. நான் அதன்பின் ஆலோசனை வழங்கும் பணியைத்தான் செய்தேன். கமிஷன் ஏஜெண்டாகச் செயல்படவில்லை" என்பது இவரது வாதம். இப்போது அவர் வசிப்பது துபாயில். அங்கே அவரது மகன் ஹர்ஷ் சத்தா பிசினஸ் செய்து வருகிறார்.

போஃபர்ஸ் விவகாரத்தில் சம்பந்தப்பட்ட ஹிந்துஜா சகோதரர்கள், குவாத்ரோச்சி ஆகியோரை கண்டுகொள்ளாமல் தன்னை மட்டும் இம்சைப்படுத்துகிறார்கள் என்று ரொம்ப வருத்தம் வின்சத்தாவுக்கு!

— மௌலி

வாழ்த்துச் சொன்ன பெண் பைலட்!



மத்திய அமைச்சர் ரங்கராஜன் குமாரமங்கலம் சமீபத்தில் சென்னை வந்திருந்தார்; 'இண்டஸ்ட்ரியல் எகானமிஸ்ட்' விருதை வழங்கி விட்டு, மனம் திறந்து பேசினார் மேடையில். சில துளிகள் :

● பீஹாரில் எல்லா கிராமங்களுக்கும் மின்சார வசதி செய்து கொடுக்க வேண்டுமானால் இன்னும் 700 வருடங்கள் ஆகும்.

● என் அப்பா காலத்தில் எல்லாப் பிரச்னைகளுக்கும் நேஷனலைசேஷன்தான் தீர்வாக இருந்தது. இப்போது நேர் எதிர் : தனியார்மயம்தான் தீர்வாக இருக்கிறது!

● ஒரிசாவில் மின் விநியோகத்தைத் தனியார்வசம் ஒப்படைத்து விட்டார்கள். புத்திசாலித்தனமான முடிவு. மற்ற மாநிலங்கள் இதை உணரவில்லை.

● தனியார் துறை, மின்சார உற்பத்திக்கு முதலீடு செய்ய முன்வரும்பொழுது, ஒப்பந்தம் கையெழுத்திட்டுக் கொடுத்து விடுங்களேன் என்று தமிழ்நாடு மின்வாரியத் தலைவரிடம் சொன்னேன். அதெல்லாம் வேண்டாம். நாங்கள் சர்ப்ளஸ் (அதிகப்படி) ஆகத்தான் இருக்கிறோம் என்கிறார். அப்புறம் ஏன் பவர்கட் அறிவிக்க வேண்டும்?

● அமெரிக்காவில் வீடுகளுக்கு வசூலிக்கும் மின்சாரக் கட்டணம் ஒரு யூனிட்டுக்கு 9 முதல் 12 செனட். அதாவது சுமார் 4.50 ரூபாய். தொழிற்சாலைகளுக்கு வசூலிக்கும் கட்டணம் 2 சென்ட்தான். நான் அமெரிக்க செனட் உறுப்பினராக இருந்தால் அதைத்தான் ஆதரிப்பேன்.

● நான் திருச்சி எம்.பியாக இருந்து 4 மேம்பாலங்கள் கட்டியிருக்கிறேன். அடைக்கலராஜ் எத்தனை கட்டினார்? – இப்படித்தான் என் தொகுதி மக்களிடம் நான் பேசி வோட்டு வாங்க வேண்டியிருக்கிறது!

● குடிசையில் ஒரு பல்பு எரிந்து விட்டால், 'பாருப்பா, கொக்கி போட்டு மின்சாரம் இழுத்துக்கிட்டான்!' என்கிறார்கள். நுங்கம்பாக்கம் போன்ற ஏரியாக்களில் எத்தனை பங்களாக்களில் இரண்டும் மூன்றுமாக ஏர்கண்டிஷனர்கள் இருக்கின்றன. ஆனால் இவற்றுக்கும் இவர்களது மின்சார பில்லுக்கும் சம்பந்தமே இருக்காது!

● 12000 மெகாவாட் மின்சாரத்தைத் தனியார் துறை எளிதாக உற்பத்தி செய்யலாம். மீதியை பொதுத்துறை நிறுவனம் செய்யலாம்.

● இன்று காலை அந்தமானிலிருந்து வரும் விமானத்தை ஓட்டி வந்த பெண் பைலட், நான் அமைச்சர் என்கிற காரணத்துக்காக காக்பிட்டிலிருந்து வாழ்த்துச் சொன்னார். 'அட, பெண் பைலட்டா?' என்று அவரைச் சந்தித்தேன். உடனே அவர் தெஹ்ரி அணைக்கட்டு உடைந்து ஏராளமான சேதம் உண்டாகப் போகிறது என்று சுமார் 15 நிமிடங்களுக்குப் பொரிந்து தள்ளினார். அம்மா தாயே, தெஹ்ரி டேம் உடைய வேண்டுமானால் உண்டாகும் நிலஅதிர்ச்சி, ரிக்டர் ஸ்கேலில் பயங்கரமாக இருக்க வேண்டும். அணைக்கட்டு உடைவதற்கு முன் நில அதிர்ச்சியின் பாதிப்பில் அங்கே மக்களே இருக்க மாட்டார்களே?' என்றேன்.

— சாருகேசி

கிழட்டுக் குதிரை!

வால்ஷ்



"சாதனைகள் ஒருவருக்குச் சொந்தமல்ல. அவை உடைக்கப்பட வேண்டும். வால்ஷின் சாதனை மகத்தானது"

– வெஸ்ட் இண்டீஸின் வேகப் பந்து வீச்சாளர் வால்ஷ் 435 விக்கெட்டுகளை வீழ்த்தி உலக சாதனை படைத்ததையடுத்து கபில்தேவ் சொன்ன வாழ்த்துச் செய்தி இது!

"வால்ஷ் ஒரு திறமைசாலி. நீண்ட நாட்களாக அவர் கிரிக்கெட் ஆடி வருகிறார். அவரது பந்து வீச்சில் எந்தப் பிசிறும் இல்லை"

– இதுவும் கபில்தான்!

• கபில்



வாஸிம் அக்ரம் கூட ஒருமுறை கூறியிருந்தார்: "கபிலின் சாதனையை முறியடிப்பதே எனது நோக்கம். ஆனால் வால்ஷை நினைத்தால்தான் பயமாயிருக்கிறது" என்று!

அது நடந்தே விட்டது. கடந்த 27ம் தேதி ஜிம்பாப்வேக்கு எதிரான போட்டியில் ஓலோங்காவின் விக்கெட்டை வீழ்த்தியதன் மூலம் இந்த உலக சாதனையைச் செய்தார் வால்ஷ். அப்போது அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு வேறு எதையும் ஒப்பிட்டிருக்க முடியாது! அப்படியொரு எக்ஸ்பிரஷன்!

கிரிக்கெட் பார்த்துக் கொண்டிருந்த அத்தனை ரசிகர்களும் எழுந்து நின்று தெரிவித்த கரவோசையும், வெஸ்ட் இண்டீசின் முன்னாள் கேப்டன் ரிச்சர்ட்ஸ் மைதானத்துக்குள் வந்து அவருக்கு வாழ்த்துத் தெரிவித்ததும் கண்கொள்ளாக்காட்சி!

84 – 85ம் ஆண்டு ஆஸ்திரேலியாவுக்கு எதிராக முதன் முதலில் சர்வதேசக் கிரிக்கெட்டுக்குள் வால்ஷ் காலடி வைத்தபோதே கிரிக்கெட் உலகில் ஒரு கலக்கம் இருக்கத்தான் செய்தது! 114 போட்டிகளில் இன்று 435 விக்கெட்டுகளை வீழ்த்தியிருக்கிறார்.

(கபில் 131 போட்டிகளில் 434 விக்கெட்டுகளை வீழ்த்தியிருக்கிறார்.)

"வால்ஷ் ஒரு கிழட்டுக் குதிரை" – வெஸ்ட் இண்டீஸ் கிரிக்கெட் வீரர்களில் அவருக்கு நெருக்கமான சிலர் இப்படித்தான் அவரைச் சொல்வார்களாம். 37 வயதான பின்பும் அவரின் திறமை 'பளிச்'சிடுகிறது. இன்னும் பல வருடங்கள் வெஸ்ட் இண்டீஸ் கிரிக்கெட் அணியில் அவர் இருப்பார் என்கிறார் அவருக்கு நெருங்கிய கிரிக்கெட்டர் ஒருவர்.

"ஆரம்பத்தில் விளையாடும்போது சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் ஒரு கனவாகத்தான் இருந்தது. இப்போது நிறைவேறியிருக்கிறது. மகிழ்ச்சிதான்" என்கிறது இந்த 'கி. குதிரை'.

— அப்பு

● அ. சுகுமார், காட்டுக்கானூர்.
? எனக்கு வீடே கிடையாது. மனைவிக்குத்தான் வீடு உள்ளது என்று அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் பொன்னுசாமி கோர்ட்டில் வாக்குமூலம் தந்துள்ளாரே?
! 'என் கையில் நயாபைசா இல்லை; சட்டைப் பையில்தான் ஐந்நூறு ரூபாய் நோட்டுக்கட்டு உள்ளது' என்பது போலிருக்கிறது.

● டி. சந்திரன், சித்தோடு.
? தராசு பதில்களில் 'கஷ்டம் கஷ்டம்', கல்கியில் 'வாட்டர் கலாட்டா; வருத்தத்தில் ஷபானா' – கல்கிக்கு எதற்கு இந்த வேற்று முகம்?
! ஷபானாவை அட்டையில் போட்டதால் வாட்டர் திரைக்கதையை ஆதரிப்பதாகி விடாது. ஷபானாவுக்கு உள்ள கருத்துச் சுதந்தரத்தைத்தான் ஆதரிக்கிறோம்.

● வி. சிவா, அரசரடி.
? அ.தி.மு.க.வினர் மீதான ஊழல் வழக்குகளில் அரசுத் தரப்புச் சாட்சிகள் திடீர் திடீரென பல்டியடித்து விடுகிறார்களே?
! காரணங்கள் ஆராய்ச்சிக்குரியன என்றாலும் ஊழல் நடக்கவில்லை என்று நிரூபிக்கும் பொறுப்பு குற்றம் சாட்டப்பட்டவருக்கு இருக்கும் வகையில் அமெரிக்கப் பாணியில் சட்டம் திருத்தப்பட்டாலேயொழிய இத்தகைய வழக்குகளில் குற்ற நிரூபணம் மிகவும் கடினமாகவே இருக்கும்.

ராப்ரிதேவியின் வள்ளல் தன்மை குறித்து


• வளமான வாக்குமூலம்

● ஆ. செல்வம், சென்னை – 28.
? புதுச்சேரி கச்சேரி எப்படி?
! அபஸ்வர களஞ்சியம்!

● கு. கணேசன், பனங்காட்டூர்.
? பீஹாரில் காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் அனைவருக்கும் அமைச்சர் பதவியை வாரி வழங்கியுள்ள ராப்ரிதேவியின் வள்ளல் தன்மை குறித்து...?
! எல்லாம் வாய்க்கரிசி! இதிலென்ன வள்ளல் தன்மை கொள்ளை போகிறது! மக்கள் வரிப் பணத்தில் 83 பேருக்குச் சம்பளம்! மக்களைச் சுரண்டி ஏமாற்றும் மாண்புமிக்கவர்கள் எண்ணிக்கைதான் அதிகமாகிறது.

● எல். மீனாட்சி சுந்தரம், திருவண்ணாமலை.
? வாழப்பாடி – ராமதாஸ் மோதலின் முடிவு என்னவாக இருக்கும்?
! வாழப்பாடி 'கழற்றிவிடப்'படக்கூடும். அப்புறம் அவர் மறுபடி 'ஜெ' பக்கம் சாயக்கூடும்! இந்திய அரசியலில் என்னதான் நடக்காது!

● முகநி. சுபா, கீழ்நத்தம்.
? சின்ன எம்.ஜி.ஆர். எனக் குறிப்பிடுவதற்கே தராசார் அங்கலாய்க்கிறாரே 'ஆன்மிகச் செம்மல்' 'ஆன்மிக அவதாரம்' என்றெல்லாம் கூட சுவர் விளம்பரங்கள் வருகின்றனவே?
! அரசியலுக்கு அடுத்தபடி எந்தத் துறை நல்ல பிஸினஸ் என்று தெரிந்து வைத்திருக்கிறார்கள்.

● அ. ஆரோக்கியராஜ், விஜயவாடா – 1.
? 'புதுவையில் காங்கிரஸ் கோஷ்டிகள் அடித்துக் கொண்டது சந்தோஷத்தில்தான்; வேறு காரணத்தினால் அல்ல...' என்கிறாரே ப. கண்ணன்?
! 'வரும் தேர்தலில் வோட்டுப் போட்டு ஆட்சியில் அமர்த்தினால் சந்தோஷத்தில் வாக்காளர்களை அடித்து விடப் போகிறார்கள் – ஜாக்கிரதை!


• அட்டையும் ஆதரவும்!


• ஜெ பக்கம்...?

● வி. லக்ஷ்மி ராமன், சென்னை – 73.
? அமெரிக்க அதிபர் கிளிண்டனின் விஜயத்தின் போது மக்கள் அவரைப் பார்த்து ரசிக்க முடியாதபடி 'பந்தா'வாமே?
! முன்னெப்போதையும் விட கிளிண்டனுக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகமானது

காலத்தின் கட்டாயம். ஆயினும் ராஜஸ்தானில் பல பெண்களுடன் டான்ஸ் கூட ஆடினாரே. – ரசிக்கவில்லையா?

● பூஜா, வேலூர் – 1.

? முகவரி படத்தில் பாலகுமாரன் வசனம் எப்படி?

! முழுமையான சினிமாக்காரர் ஆகிவிட்டிருக்கிறார். அதனால்



வாய்க்கரிசி வள்ளல்!



பிஸினஸ் ஞானம்!



'ஆட்ட'நாயகன்!



'சினிமா'குமாரன்!

தான் ஓரிரு இடங்களில் 'அட' என்று தோன்றியவை கூட வெளியே வந்ததும் 'அடடா' என்று மறந்து விடுகிறது.

● பி. நடராஜன், அன்னூர்.

? ராப்ரி தேவி – ஜெ. ஒப்பிடுக?

! ஒப்பிட ஒன்றுமில்லை. முன்னவர் வெறும் கருவி; பின்னவர் கர்த்தா!

● ரொசாரியோ ரவிச்சந்திரன்.

? அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டனுக்கு எதிர்ப்புக் கோஷங்கள் எழுப்புவதும் கொடும்பாவி எரிப்பதும் விரும்பத்தக்கதா?

! எதிர்ப்புக் கோஷங்கள் ஜனநாயகத்தின் ஓர் அங்கம். அதை கிளின்டனே வரவேற்பார். ஆனால் கொடும்பாவி கொளுத்துதல் அநாகரிகம். கிளின்டன் மட்டுமல்ல; யாருக்குமே கூடாது.

● ம. மாரிமுத்து, மதுரை – 3.

? மூலிகைப் பெட்ரோல் தயாரிப்பதாகச் சொல்லி தற்போது ஜெயிலில் இருக்கும் ராமர் பிள்ளை; வெடிகுண்டுகளுடன் போலீசுக்கு டிமிக்கி கொடுத்து வரும் ஆயிஷா, இவர்களின் பிறந்த ஊரான மம்சாபுரத்தில் நானும் பிறந்திருக்கிறேன். – இது பற்றித் தங்கள் கருத்து என்ன...?

! ஓரிரு அயோக்கியர்களால்

❑ ரூ. 50 பரிசு பெறுபவர் :
புதுப்பேட்டை இராமலிங்கம்,
24, பேட்டை வீதி,
புதுப்பேட்டை (S.O.)
607 108.
தென்னார்க்காடு வள்ளலார் மாவட்டம்.

* ரூ. 25 பரிசு பெறுபவர் :
ஏ. ஆரோக்கியராஜ்,
8-33-11-B
நிஜாம் கேட், விஞ்சிபேட்
விஜயவாடா - 1.

ஊரைப் பழிப்பது முறையல்ல. நீங்கள் மம்சாபுரத்து மகாத்மாவாக வாழ்ந்து காட்டுங்களேன்!

● இராமலிங்கம்,
புதுப்பேட்டை. ❑

? த.மா.கா. தனித் தன்மையை இழந்து 'அரசு கவிழ்ப்புக் கட்சி' என்ற பட்டமும் பெற்ற பிறகு, எதிர்காலத்தில் கூட்டணி கேள்விக்குறியாகும் என்று மூப்பனார் நினைத்தே பார்க்க மாட்டாரா...?

! இது கவிழ்ப்பு அரசியல் சீசனாக இருப்பதால் அதில் ஸ்பெஷலைஸ் செய்து அதன் மூலமே காமராஜ் ஆட்சியை அமைத்து விடலாம் என்று நினைக்கிறாரோ என்னவோ!

● எம். அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி.

? பிறவி எழுத்தாளர் என்று தராசார் யாரைக் குறிப்பிட விரும்புகிறார்?

! பிரும்மா! அவர்தானே கோடிக்கணக்கானோரின் திரைக்கதையை எழுதுவதற்காகவே பிறந்தவர்!

● க. பூங்கொடி, சித்தோடு.

? பத்திரிகையாளர்களை மதித்து ஜெ. பேட்டி தருவதில்லையே, ஏன்?

! அவர் வேறு யாரை மதித்து என்ன செய்திருக்கிறார், சொல்லுங்கள்!

முதல்

பிரபஞ்சன்

மாலை நேரம்தான் என்றாலும் வானம் இருட்டிக் கொண்டு வந்தது. வெள்ளை அடித்த சுவர் போல இருந்த வானம், திடுமென கருத்து இருண்டது. பேய் பிடித்தாற்போல, மேகங்கள் கருத்து இங்கும் அங்கும் அலைந்து, மேலே கனேபரம் நடப்பது போல தோற்றம் கொண்டது. சுற்றிச் சுழன்று எழுந்த காற்று புழுதியைக் கொண்டு வந்து முகத்தில் அறைந்தது. சட்டென்று, பேச்சுக்குக் கட்டுப்பட்டாற்போன்று புழுக்கம் நிறைந்த அமைதி நிலவியது.

"மழை வரும் போல இருக்குது, அரவிந்தன்."

அரவிந்தன் வானத்தைப் பார்த்தான்.

"மேகம் திரண்டிருக்கு. என்றாலும் காற்று வேற இருக்கு. மழை வராமலும் போகலாம்'' என்றாள் லலிதா.

''வரட்டுமே. வந்தால் இறங்கிப் போய்விடலாம்.''

அரவிந்தன் சின்னச் சின்னத் தட்டுகளில், உணவுப் பண்டங்களைப் பரிமாறினான். முதலில் வந்தது ரவா கேசரி. அப்புறம் வடை, அப்புறம் கொஞ்சம் கடலைச் சுண்டல்.

''இத்தனை கஷ்டப்பட்டுக் கொண்டு தன்னந்தனியா அரவிந்தன் எதுக்கு இவ்வளவு பண்ணணும்?''

"பாரதி, அரவிந்தன் பிரமாதமான சமையல் கலைஞர். அதை வெளிக் காட்டி இருக்கிறார்."

''இன்னும் இருக்கு. சித்ரான்னங்கள் இருக்கு. தேங்காய்ச் சாதம், எள்ளுச் சாதம். அப்புறம் சூடான மசாலா பால்."

''அப்ப்பா'' என்றாள் பாரதி.

''எல்லாம் உனக்குத் தாண்டி. வெளிநாடுகளுக்கு எல்லாம் போறே. மாசக் கணக்கான பயணம். இது பிரிவு உபசார விழா."

பாரதி சொன்னாள்.

"நண்பர்கள் பிரியறது இல்லை. எப்படிப் பிரிய முடியும்?" என்ற பாரதியிடம், லலிதா சொன்னாள்.

"தத்துவப்படி, பிரிவு இருக்க முடியாது தான். இருந்தாலும், பார்க்க, பேச, அருகிலே இருக்க முடியாததுதானே. அதுதானே பிரிவு?"

"அப்படியா அரவிந்தன்?"

அரவிந்தன், சாப்பிட்டுக் கொண்டு சொன்னான்.

"மேடம், ஊருக்குப் போற சந்



மழைத் துளி

23

தோஷத்தைக் கொண்டாடறேன். அவ்வளவு தான்."

சில நிமிஷங்கள் கடந்ததும் அவன் சொன்னான்.

"உடைச்சு விட்டு மூலையில போட்ட மாதிரி கிடந்தவன் நான். அப்படியே வாழ்க்கையை ஓட்டிடறதுன்னு இருந்தேன். அந்தச் சமயத்துலதான் அரவிந்தன் என்னைத் தேடி வந்தார். தூசு தட்டி என்னை எழுப்பினார். உன்னால பாட முடியும்னு சொன்னார். நம்பிக்கையை ஏற்படுத்தினார். மேடை போட்டுக் கொடுத்தார். என்னையே நான் தெரிஞ்சுக்கறதுக்கு உதவியா இருந்தார். அரவிந்தன் கொடுத்த வாய்ப்பு இது. எல்லாத்துக்கும் நான் அரவிந்தனுக்குத்தான் நன்றி சொல்லணும்."

பாரதியின் நா தழுதழுத்தது.

அழுத்தமான மௌனம் நிலவியது. அதை அரவிந்தன் உடைத்தான்.

"நன்றி என்ன நன்றி? உங்கள் தகுதியும் சிறப்பும் உங்களைச் சுற்றி இருந்தவர்களுக்குத் தெரியலையேங்கறதுதான் என் ஆதங்கம்."

"கட்டிய கணவனுக்கும் என்பது தான் கொடுமை" என்றாள் லலிதா.

"கணவனுக்கு எப்படித் தெரியும்? அல்லது கணவனைத்தான் மனைவிக்கு எப்படித் தெரியும்? லாட்டரிப் பரிசு மாதிரி, இங்கே நல்ல தாம்பத்யம் அதிர்ஷ்டத்தைத் தானே நம்பி இருக்கு?"

பாரதி, தன் பயணத் திட்டத்தைச் சொன்னாள்.

ஸ்டேட்ஸில் மட்டும் மொத்தம் பத்து இடங்களில் அவள் பாடுகிறாள். அப்படியே பிரான்ஸ், கனடா என்று மூன்று மாசப் பயணம். குழந்தை, தாத்தாவிடம் இருக்கிறாள். என் சிஷ்யை என்னோடு வருகிறாள். அப்புறம், மிருதங்கம், வயலின் கலைஞர்கள்... அப்புறம், சென்னை விமான நிலையத்துக்கு நேராக வைதேகி வருகிறாள்.

"உணவு உனக்கு ஒத்துக் கொள்ளணும். உனக்குப் பலது பிடிக்காது. என்னோய் ஒத்துக் கொள்ளாது" என்ற லலிதாவுக்கு அரவிந்தன் சொன்னான்.

"போற இடத்தில் எல்லாம், மல்லிப்பூ இட்லி கிடைக்குமான்னு தேடித் திரியறது. ரொம்ப அசிங்கம். பல பேர், இங்கிருந்து போகிறவர்கள் அப்படித்தான் அலைகிறார்கள். எது கிடைக்கிறதோ, அதைச்



சாப்பிட்டுக் கொண்டு இருக்கிறதுதான் சரி. எதுக்கு வெளிநாட்டுக்குப் போறது? அவங்க கலாசாரம், வாழ்க்கை முறைகளைத் தெரிஞ்சுகிட்டு வருகிறதுக்குத்தானே? அவங்க சாப்பாட்டையும் நாம் ஏத்துக்கிறதுதான், அவங்களுக்குச் செய்கிற மரியாதை."

அரவிந்தன் சொன்னதைப் பூரணமாக ஆதரித்தாள், பாரதி.

சாப்பிட்டு முடித்து, பாலையும் அருந்தினார்கள்.

சட்டென்று, ஒரு ஒற்றை மழைத் துளி, பாரதியின் நெற்றியில் விழுந்தது.

"மழை வரப் போகிறது" என்றாள் அவள்.

"வரட்டும். பூமி நனையட்டும்."

அவர்கள் மௌனமாக இருந்தார்கள்.

நேரம் ஆகிக் கொண்டிருந்தது.



''இப்போது உன் மீது சுமத்தப்பட்டுள்ளது முப்பதாவது வழக்காகும். இது பற்றி என்ன நினைக்கிறாய்?''

''கின்னஸ் சாதனைன்னு நினைக்கிறேன் சார்!''

– அ. குமார்

"புறப்படலாமா?" என்றாள் பாரதி.

"நாளைக்கு இந்நேரம் சென்னையில் இருப்பாய்."

"ஆமாம். அனேகமாக விமான நிலையத்துக்குப் புறப்பட்டுக் கொண்டிருப்போம்."

லலிதாவை அவள் வீட்டில் விட்டுவிட்டு, பாரதிக்குத் துணையாக அவள் வீடு வரைக்கும் போவது அவன் திட்டமாக இருந்தது.

அவர்கள் புறப்பட்டார்கள்.

"வாழ்க்கையில எனக்குக் கிடைச்ச பெரிய அதிர்ஷ்டம், உங்க ரெண்டு பேர் சிநேகம்தான். இல்லேன்னா, நான் நானா இருந்திருக்க மாட்டேன்."

"அது எப்படி, யாருடைய இஷ்டத்துல நடக்கிறதுன்னு தெரியறது இல்லை. எல்லார்க்குமே, மனித ஒத்தாசை கிடைக்கவே செய்யுது. கடவுள் நேரா வர முடியாத காரணத்தால, தாயை அனுப்பறார்னு சொல்லுவாங்க. இது பாதி தூரம்தான் உண்மை. முழு உண்மை என்னன்னா, மனிதர்களுக்குப் பெரிய ஆறுதலும், பெரிய உதவியும் சக சிநேகம்தான். உண்மையான சிநேகத்தை அடையறது, பெரிய வரம். அது கிடைச்சுட்டா, எல்லாமும் கிடைச்ச மாதிரிதான்..."

பாரதியின் வார்த்தைகளில் மூழ்கியிருந்த லலிதா சொன்னாள், பாரதி தொடர்ந்தாள்.

"சிநேகம், எல்லா உறவிலும் ஊடா போக முடியும். அப்பா பிள்ளை, கணவன் மனைவி, அண்ணன் தங்கை எல்லா உதவிலயும். அப்படி இருந்தா, அந்த உறவு அற்புதமாகும். இல்லேன்னா, கஷ்டம்தான்."

லலிதா வீடு வந்ததும், அவள் கண்ணீர் ததும்ப விடைபெற்றுப் போனாள்.

பாரதியும், அரவிந்தனும், அவள் வீடு நோக்கி நடக்கத் தொடங்கினார்கள்.

தெரு அமைதியாகி இருந்தது. ஜனநடமாட்டம் குறைந்து, வீடுகளில் இருந்து வெளியே வந்த வெளிச்சங்கள், தெருவில் வழிந்து கிடந்தன.

"ஒரு விஷயம் உங்களைக் கேட்கணும், அரவிந்தன்."

"சொல்லுங்க. மேடம்."

அவனால் உடனே சொல்ல முடியவில்லை. என்றாலும் சொன்னான்.

"என் மேல் இத்தனைக் கரிசனம் எதுக்கு உங்களுக்கு?"

அவன் யோசிக்க வேண்டியிருந்தது.

"நானும் அதுபற்றி யோசிக்க இருக்கேன். என்னோட பழகுகிற ஆண்கள், பெண்கள் நிறையப் பேர். படித்தவர்கள் அனேகர். ஆனாலும், உங்களைப் பார்த்த அந்த முதல் கணம், நீங்களும் நானும் பல காலம் பழகின பழைய நண்பர்கள் மாதிரி எனக்குத் தோணிச்சு. என் வாழ்க்கை உங்களோடதான்னு சட்டுன்னு அந்த நிமிஷத்துல தோணிச்சு. அதைச் 'சிக்குன்னு' புடிச்சுக்கிட்டேன். மற்றபடி வேற எதுவும் காரணமா சொல்ல முடியலை."

சிவுக்கென்று, ஒரு பறவை, தெருவைக் குறுக்காகக் கடந்து, ஏதோ ஒரு வீட்டின் மெத்தை கவரில் போய் அமர்ந்து இவர்களைப் பார்த்தது.

பாரதிக்கு அவளை அறியாமலே, கண்ணீர் சுரந்தது. கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

"உங்கள் அம்மாவுக்கு என்ன பதில் சொல்லி அனுப்பினீர்கள்?"

"எதைப் பற்றி மேடம்?"

"உங்க கல்யாணம் பற்றி..."

"யோசிப்போம்னு சொல்லி அனுப்பிட்டேன்."

"இன்னும் முடிவுக்கு வரல்லையா?"

"இல்லை."

"ஏன்?"

"என்ன மேடம். நீங்களும் இப்படிக் கேட்டுக்கிட்டு? கல்யாணம் என்ன துணி எடுக்கிற சமாசாரமா? கடைக்குப் போயி, பிடிச்ச

துணியை ரெண்டு மீட்டர் கிழிச்சுக்கிட்டு வர்றதுக்கு?"

அவள் சிரிப்பை அவனால் கேட்க முடிந்தது.

"நம்மைப் போன்றவர்களுக்கு மட்டும் தான் இது மாதிரி பிரச்னைகள்."

"ஏன்னா, வர்ற துணைக்கும் தனியான மூளை, மனசு, ஆத்மா, தனியான அந்தரங்கமான ஆசைகள் இருக்கும்னு நமக்குத் தெரியும். அதை நாம் மதிக்கிறோம். அதனால யோசிக்கிறோம். பொருந்துமான்னு சந்தேகப்படறோம்."

"கல்யாணம் ஆகி மனம் பொருந்தின தம்பதிகளா சில பேர். ஏன், பல பேர் இருக்கத்தானே செய்றாங்க?"

"மனம் பொருந்தினா, அது லாட்டரிப் பரிசுதான். ஒரு வகை அதிர்ஷ்டம்தான். ஏன், விபத்துன்னு கூடச் சொல்லலாம். இனிய விபத்து. ஆனா, பொருந்திப் போச்சுங்கறது, எனக்குச் சந்தேகமான விஷயமாகத்தான் இருக்கு."

"அப்போ, கல்யாணம் ஆகி, வாழ்ந்துகிட்டு இருக்கிற பெரும்பாலோர், தன்னை இழந்து, தொலைச்சுட்டுத்தான் வாழறாங்கன்னு சொல்றீங்களா?"

"அப்படித்தான் எனக்குப் படுது. கோவலன் கண்ணகியையே எடுத்துக்கலாமே. கோவலனுக்கு இருந்த கலை ஈடுபாடு, கண்ணகிக்கு இல்லாமையால்தானே, அவங்க பொருந்தி வாழலை."

"அது கண்ணகியோட குறைபாடா?"

"ஆகாது. நிச்சயம் ஆகாது. அது, இரண்டு பேரையும் சேர்த்து வைச்ச பெரியோர்களுடைய பிழை. கண்ணகி, கணவனோட பலவீனத்தை மன்னிச்சதுக்குக் காரணம், அவளோட பெருந்தன்மை. அத்தோட, அவ காலத்துல, பெண்ணுக்கு வேற வழி இருக்கலை. பெண், தான் நூல்னு நம்பினாள். கணவன் ஊசின்னு ஏத்துக்கிட்டா. தான் தனி மனுஷி, ஆண் என்பவனுக்கு உள்ளது எல்லாம் தனக்கும் உள்ளதுன்னு அவளுக்குச் சொல்லிக் கொடுக்கப்படலை. அந்தக் காலத்துக்கு அது சரி. இப்போ, அது பொருந்தாது."

வீடு வந்து சேர்ந்தார்கள்.

"சரி.... எனக்கு உத்தரவு கொடுங்கள். நான் புறப்படறேன்."

அவள் சில நிமிஷங்கள் பேச முடியாமல் நின்றாள்.

"சரி, புறப்படுங்கள்."

"நாளைக்குக் காலையில் புறப்பாடா?"


"ஆமாம். நாலு மணிக்குப் புறப்படறோம். சென்னையில் அப்பாவின் சிஷ்யர் வீட்டில் இருப்போம். அங்கே இருந்து பயணம்."

"வெளிநாடுகளில், நேரம் இருந்து, முடிந்தால் கடிதம் எழுதுங்கள்."

"கட்டாயம்."

அவன் விடைபெறும் முகமாக அவளை வணங்கினான். பாரதியும் கை கூப்பினாள். அரவிந்தன் திரும்பி நடந்தான். இரவின் அமைதியில், அவன் காலடி ஓசை, கேட்டுக் கொண்டே இருந்தது. தெருமுனையில் அவன் திரும்பும் வரை. அவனையே பார்த்துக் கொண்டு நின்றாள் பாரதி.

வெயில் சுட்டெரித்துக் கொண்டிருந்த ஒரு மதியம். மதிய உணவு என்று பக்கத்து விடுதியில் இருந்து வந்திருந்த எதையோ விழுங்கி, தண்ணீர்க் குடித்து நாற்காலியிலே சரிந்து அமர்ந்து, பேப்பரைப் புரட்டிக் கொண்டிருந்தான், அரவிந்தன். அவன் அறைக் கதவைத் திறந்து கொண்டு வந்த லலிதா, அவனிடம் ஒரு கவரை நீட்டினாள்.



"என் காதலரை 'கட்' பண்ணிவிட முடியாம முழிக்கிறேன்... ஏதாவது ஐடியா சொல்லேன்?"

"நூறு ரூபா கைமாத்து கேளு!"

— மானாமதுரை குமார்ஜி

"தபால்."

"எங்கிருந்து?"

"பாரதியிடமிருந்து."

பரபரப்புடன், கவரைப் பிரித்துப் படித்தான், அரவிந்தன்.

அன்பார்ந்த நண்பர் திரு. அரவிந்தன் அவர்களுக்கு,

வணக்கம். நலம். தாங்கள் நலமாக இருக்கப் பிரார்த்திக்கிறேன்.

பயணத்தின் முதல் கட்டமாக, என் முதல் கச்சேரி, கட்டடங்களின் நகரமான நியூயார்க்கில் நடந்தது. கடவுள் கிருபைதான். இங்குள்ள ரசிகர்கள் அருமையானவர்கள். புதிய இசையைக் கேட்க வந்த ஐரோப்பியர்கள், அமைதிகாத்து, ஊசி விழுந்தால் கூடக் கேட்கும் அளவுக்கு அமைதி காத்து, என்னைக் கௌரவித்தார்கள். என்னை என்றா சொன்னேன்? நம் தேசக் கலையை. தியாகையருக்கும், சாஸ்திரிக்கும், தீட்சிதருக்கும், சிவனுக்கும், ஊத்துக்காடு மற்றும் உள்ள அருணாசல கவிக்கும் கிடைத்த மரியாதை இது. அது இந்தப் புல்லின்

கா...கா...கா...கா...காமெடிஜி!

சின்னில் வரும் சீனியர் ஜூனியர் தொடரில் ராம்ஜி பண்ணும் காமெடியினால் அவர் பெயர் இப்போது காமெடிஜியாகி



இருக்கிறது. ''மனுஷருக்கு டான்ஸ் மட்டும்தான் வரும்னு நினைச்சா காமெடியிலும் கலக்குறாரே''என்று ஒரே பாராட்டு மழையாம்! சமீபத்தில் பாராட்டியவர்கள் விவேக்கும், தாமுவும். உன்னிகிருஷ்ணனும், யுவன்சங்கர் ராஜாவும் பாடியுள்ள இந்தத் தொடரின் டைட்டில் சாங்க் கேசட்டில் வரப்போவதாகவும் சின்னத்திரை வட்டாரத்தில் டாக்! இந்தப் பாட்டை எந்தப் படத்துக்காவது சுவீகரித்துக்கொள்ளப் போகிறார்களா?

– ஏக்

மேலும் பொசிந்தது. சுமார் ஒன்றரை மணி நேரம் பாடினேன். எல்லோரும் எழுந்து நின்று நீண்ட நேரம் கையொலி எழுப்பி, எங்களைப் பாராட்டிக் கொண்டே இருந்தார்கள். எல்லோரும், எங்கள் குழுவோடு கைகுலுக்கினார்கள். முதலில், கணபதி வணக்கத்துடன், அப்புறம் அதைத் தொடர்ந்து தமிழ்ப் பாரதியுடனும், பிறகு, கல்யாணியை ஆலாபனைக்கு எடுத்துக் கொண்டேன். பக்கவாத்தியங்கள் அருமையான துணையாக இருந்தார்கள். டேப் பண்ணி இருக்கிறேன். வரும்போது எடுத்து வருகிறேன்.

நீண்ட மாலையொன்றில், ஷாப்பிங் போனோம். குட்டிக்கு(என் சிஷ்யைக்கு) ஒரு கவுன் எடுத்தேன். குழந்தைக்கு (சந்தியாவுக்கு) ஒரு சட்டை வாங்கினேன். உங்களுக்கு நீல நிறத்தில், அழகான சட்டை ஒன்று வாங்கி இருக்கிறேன்.

மாலை நேரங்களில், பெரும்பாலும், கச்சேரிகள். காலை நேரங்களில், இங்குள்ள பார்க்குகளில் உலவுகிறோம். மகிழ்ச்சி தரும் அனுபவம். ஜனங்கள், தூய்மையை நேசிக்கிறார்கள். அவசர உலகம்தான். என்றாலும், அதற்குள்ளும் ஒரு அலை அமைதியைத் தேடிக் கொள்கிறார்கள். வாழ்க்கையைப் பற்றிய பயம் இவர்களுக்கு அதிகம். கிடைப்பதை அவசரம் அவசரமாக விழுங்கி வைக்கிறார்கள், எல்லா அனுபவங்களையும்.

நீர்வீழ்ச்சி-தப்பு-அருவிக்குப் போயிருந்தோம், ஒரு நாள். வெள்ளி உருகல். அல்லது பஞ்சுக் கயிறுகளின் தொங்கல். அல்லது நிலவின் தாடி. எப்படிச் சொல்வது. இரவுக்குச் சற்று முந்தைய நேரம். அதன் ஓசைக்குத்தான் நம் நடராசப் பெருமான் ஆடுகிறாரோ என்று தோன்றுகிறது.

தெற்கு ஆசிய இசை பற்றி ஆராயும் மாணவன் ஒருவன், நம் இசை பற்றி, ஒரு கவிதையே எழுதி என்னிடம் தந்தான். 'ஐ லவ் யு' என்று பலமுறை சொன்னான், அந்தச் சகோதரன். அதில் இப்படி எழுதி இருந்தது.

''தமிழ் நாட்டு இசை என்றார்கள்.
ஓசை, உள்ளிருந்து வெளிவந்து
அரங்கை நிரப்பி,
மீண்டும், எங்கள் உள்புகுந்து,
எதை எதையோ
தட்டிச் சீராக்கிச்
சமன் படுத்தி- பின்னர்
வானத்துக்குள் கலந்து போய்விட்டது.
நாங்கள் இருந்தோம். ஆனால்,
நாங்கள் இல்லாமலும் இருந்தோம்.
விட்மனின் வார்த்தைகளில்,
நான் எனக்குள்ளும்,
எல்லோரும் எனக்குள்ளும்...''

உங்களைப் போலவே அழகாக, அர்த்தமுடன் பேசுகிறான்.

இங்கிருக்கும் ஒவ்வொரு கணமும், நான் உங்கள் இழப்பை உணர்கிறேன். அழகான, மதிக்கத்தக்க, ரசிக்கத்தக்க, வணங்கத்தக்க, போற்றத்தக்க எந்தப் பொருளைப் பார்த்தாலும், அரவிந்தன் ஞாபகம் வருகிறது. எனக்குப் பிரிவு என்கிற துக்கம் இல்லை. நீங்கள்தான் எப்போதும் என்னிடம் இருக்கிறீர்களே...

சிநேகிதி,
பாரதி.

கவரை மடித்து சட்டைப் பாக்கெட்டில் வைத்தான். ஜன்னல் வழியாக வானம் தெரிந்தது. நிர்மலமான வானம். பிரகாசமுடன் சூரியன்.

வெளிச்சம், உலகைத் தழுவிக் கொண்டிருந்தது. ததும்பி வழிந்தது.

(முற்றும்)

கலக்கத்தில் சோனியா!



ராஜ்யசபா தேர்தல்களில் அதிகாரப்பூர்வ காங்கிரஸ் வேட்பாளர்கள் அனைவரும் தோல்வியைத் தழுவியுள்ளதையடுத்து கலக்கத்தில் இருக்கிறார் சோனியா! காரணம், காங்கிரஸ் எம்.எல். ஏ.க்கள் தன் சொல்லை மீறி கட்சி மாறி வோட்டுப் போட்டிருப்பதுதான். இதனால் தனக்கான மரியாதை குறைந்து கொண்டிருப்பதாக நினைக்கத் தொடங்கியிருக்கிறாராம் சோனியா. இதற்கு வலு சேர்ப்பது போல், 'சோனியா இன்னும் தன் பாடங்களைப் படிக்கவில்லை' என்று கட்சியின் முன்னாள் செய்தித் தொடர்பாளர் கபில்சிபல் பேட்டி அளித்துள்ளார். இவருடன் ஒரு டி.வி நிகழ்ச்சியில் வாதம் புரிந்த கட்சியின் இன்னொரு முன்னாள் செய்தித் தொடர்பாளரான எம்.ஜே. அக்பர், "சோனியா இருக்கும் வரை கட்சி உருப்படாது; கட்சியின் எதிர்காலம் இருளில் மூழ்கிவிடும்" என்று ஒரே போடாக போட்டிருக்கிறார்! அக்பரின் கூற்று கட்சிக்குள் விவாதத்தைக் கிளப்பியுள்ள நிலையில் கபில்சிபல் தலை உருளலாம் என்கிறார்கள். கட்சியின் எதிர்காலத்தைச் சோனியா இருளில் மூழ்கவைத்து விடுவாரோ இல்லையோ கட்சியை இருளில் மூழ்க வைத்து விட்டார். காங்கிரஸ் அலுவலக மின்சாரக் கட்டணம் மட்டும் பல லட்சம் பாக்கியாம்! சென்ற வாரம் ஒருநாள் அமைதியாக ஃபியூஸை கழற்றிச் சென்று விட்டனர் மின் ஊழியர்கள். ஃபியூஸை எப்படி உருவலாம் என்று ஒரு கோஷ்டி மின்வாரியத்தில் கலாட்டாவில் ஈடுபட்டது. பிறகு ஒருவழியாய் கரண்ட் வந்துவிட்டது. பழைய பாக்கியைச் செலுத்திய பிறகுதான்.

ராமதாஸ் – வாழப்பாடி மல்யுத்தத்தைத் தொடர்ந்து டெல்லி வந்தார் வாழப்பாடி! சில பல வேண்டியவர்களைப் பார்த்தார். பா.ம.கவினரின் கொட்டத்தை அடக்க வேண்டும் என்று பிரேரணை வைத்தார். டாக்டரின் வட்டாரங்கள் இதைக் கூர்மையாக கவனிக்கின்றனவாம்! வாஜ்பாயிடம் வாழப்பாடி ஏதாவது வாயைத் திறந்தால், அவர் பெட்ரோலியத் துறை அமைச்சராக இருந்தபோது நடந்த 'டீல்'களைப் பட்டியலிட்டுக் கொடுக்கப் போவதாகப் பேச்சு. இப்போது அதற்கு ஆவணங்கள் திரட்டும் வேலை நடந்து கொண்டிருக்கிறதாம்!

— இந்த்ரப்ரஸ்தன்

SHA

SUPER SALE

56 வது ஆண்டு விழா கொண்டாட்ட

இன்று இங்கே... நாளை எங்கே... என்று இரவோடு இரவாக மறைந்து விடும் வியாபார நிறுவனங்கள் உள்ள இன்
கால உலகில் ஷா & கோ தனது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவை மற்றும் நேர்மையான வியாபாரம் மூலம் த
56வது ஆண்டில் வீறு நடைபோடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறது.

குதூகலிக்கும் நமது மக்கள், நமது நாடு, நமது நகரம், நமது முந்தைய மதராஸ் இன்றைய சென்னை, இவற்று
ஷாவும் வளர்ந்து இந்த அபூர்வமான 56 வருடங்களை எண்ணி பெருமையடைகிறது.
சுதந்திர இந்தியாவைக் காட்டிலும் சற்றே வயதான ஷா & கோ தனது 56 வருடத்தை தனது வாடிக்கையாளரு
பகிர்ந்து கொண்டாடும் வகையில் உங்களுடைய விருப்பமான கம்பெனிகளின், விருப்பமான பொருட்களை எப்பொழு
இல்லாத அளவிற்கு "சிறப்பு விலையில்" தந்து கொண்டாடி மகிழ்கிறது.

எனவே முந்துங்கள் ! உடனே வந்திடுவீர் ஷா & கோவிற்கு

0% வட்டி மற்றும் உடனடி கடன் வழங்குபவர்கள்

COUNTRYWIDE Personal Finance · CITIBANK · ICICI

■ கிரெடிட் கார்டு சார்ஜ் கிடையாது
■ எக்ஸலண்ட் எக்சேஞ் திட்டத்தில் உங்களது பழைய ரெப்ரிஜிரே
மற்றும் கலர் டி.விகளுக்கு ரூ.8000 வரை மதிப்பு
■ ஷாவின் சிறப்பு விலை சலுகை கிரெடிட் கார்டு மற்றும் கட
தவணை திட்டத்தில் வாங்குபவர்களுக்கும் உண்டு
■ சென்னை நகர எல்லைக்குள் இலவச டெலிவரி

SHAH'S

The Name That Spells Confidence

S
AN
Ph
BRANCH
Ch

H'S

Brand	Product & Model	MRP	SPL PRICE	SAVINGS
SAMSUNG	REFRIGERATOR 310 ltrs	Rs. 30,990	Rs. 23,390	Rs. 7,600
	CTV 5203	Rs. 17,500	Rs. 13,315	Rs. 4,185
	MICROWAVE 2933	Rs. 16,290	Rs. 13,860	Rs. 2,430
	VCD 288	Rs. 11,890	Rs. 10,385	Rs. 1,505
	AIRCONDITIONER 1.5 ton	Rs. 29,600	Rs. 26,400	Rs. 3,200
LG	CTV 21GE SUPREME	Rs. 21,200	Rs. 18,000	Rs. 3,200
	WASHING MACHINE 8003	Rs. 10,500	Rs. 8,990	Rs. 1,510
BPL	CTV FYR 21	Rs. 18,374	Rs. 16,380*	Rs. 2,394
	CTV LCR 20	Rs. 11,852	Rs. 10,040*	Rs. 1,812
AKAI	VCD with HOME THEATRE	Rs. 17,980	Rs. 14,990	Rs. 2,990
THOMSON	CTV-21QAV	Rs. 18,990	Rs. 16,475*	Rs. 2,915*
	CTV-21FUSION-M	Rs. 15,690	Rs. 14,490*	Rs. 1,900
	VCR	Rs. 11,990	Rs. 9,610*	Rs. 2,780

ASK FOR FREE GIFT

Brand	Product & Model	MRP	SPL PRICE	SAVINGS
Godrej	REFRIGERATOR-165 ltrs	Rs. 10,167	Rs. 8,335	Rs. 1,832
ONIDA	CTV-21IQ	Rs. 13,990	Rs. 12,810	Rs. 1,180
IFB	WASHING MACHINE EXECUTIVE	Rs. 19,495	Rs. 17,825	Rs. 1,670
AIWA	MUSIC SYSTEM-380	Rs. 20,240	Rs. 17,400	Rs. 2,840
	CTV-219	Rs. 12,490	Rs. 11,425	Rs. 1,065
	CORDLESS TELEPHONE TOKYO JAPAN	Rs. 2,990	Rs. 2,390	Rs. 600
	WALKMAN	Rs. 1,100	Rs. 995	Rs. 105
Whirlpool	WASHING MACHINE	Rs. 8,990	Rs. 7,590*	Rs. 1,400
Satyam	ONLINE INTERNET-25 Hrs.	Rs. 990	Rs. 890	Rs. 100
	ONLINE INTERNET-100 Hrs.	Rs. 3,300	Rs. 2,990	Rs. 310

ாவின் 56 வது ஆண்டு விழா சலுகை!*

ாவின் சிறப்பு விலை சலுகை பெற்றிட இந்த கூப்பனை கொண்டுவரவும்!

ர் :
ாசம் :
ாழில் :
hone : Fax :

தேவையான பொருள்: கலர் டிவி ☐
ரெப்ரெஜிரேட்டர் ☐ வாஷிங் மெஷின் ☐
மியூசிக் சிஸ்டம் ☐ வி.சி.டி ☐ வி.சி.ஆர் ☐
வாக்மேன் ☐ மைக்ரோவேவ் ☐ டெலிபோன் ☐
ஏர்கண்டிஷன் ☐ இன்டர்நெட் ☐

C SHAH & CO

ALAI 158, Mount Road, (Opp. Spencer), Chennai - 600 002.
2659 / 8523871 (CAR PARKING : CLUB HOUSE ROAD / PATTULLOS ROAD)

YNAMPET 518, Mount Road, Teynampet, (Eldams Road Signal),
- 600 018 Ph : 434 92 68, 431 04 62 (PARKING FACILITY AVAILABLE)

குறையொன்றுமில்லை

முக்கூர்

உளன் கண்டாய் நல்நெஞ்சே! உத்தமன்; என்றும்
உளன் கண்டாய்; உள்ளுவார் உள்ளத்து உளன் கண்டாய்;
வெள்ளத்தின் உள்ளானும் வேங்கடத்து மேயானும்
உள்ளத்தின் உள்ளான் என்று ஓர்.

– பொய்கையாழ்வார் நெஞ்சை அழைத்துப் பேசுகிறார்.

'இல்லையென்று நினைக்கப் போகிறாய்... உளன்!' பெரியவாச்சான் பிள்ளை இதற்கு வியாக்யானம் பண்ணுகிறார்: 'யார் அவனை இல்லை என்று சொல்கிறார்களோ அவரைப் பிடித்து நெருக்குகிறார் ஆழ்வார்...' – என்று வியாக்யானம் பண்ணுகிறார் – உளன்!

'இருக்கிறது' என்பது ஆஸ்திகர்களுடைய வார்த்தை. 'இல்லை' என்று சொல்வது நாத்திகவாதம். தைத்ரிய உபநிஷத்தில் 'சத்து' என்றால் யார் 'அசத்து' என்றால் யார் என்று விவரிக்கப்பட்டிருக்கிறது.

சத்து என்றால், 'பகவான் ஒருவன் உளன்; அவனுக்கு நாமெல்லாம் தாசர்கள்' என்று சொல்வோர்களெல்லாம் சத்து. பகவான் இல்லை என்று சொல்லுவோர் அசத்!

சத்துகளெல்லாரும் தாசர்கள் என்று கொண்டாடுகிறது சாஸ்திரம்.

அஸ்தி – இருக்கிறது என்று சொல்கிறவர்கள் ஆஸ்திகர்கள். நாஸ்தி – இல்லை என்று சொல்பவர்கள் நாஸ்திகர்கள். நாஸ்திகர்களும் 'இருக்கிறது' என்றுதான் சொல்கிறார்கள்! எதிர்மறையிலே சொல்லி அவன் இருப்பதைத்தான் காட்டுகிறார்கள்.

அது எப்படி என்கிறீர்களா...?

இல்லை என்கிற விஷயம் உலகத்திலே நாம் எப்போது உபயோகிக்கிறோம்? 'அவ்வாறு இல்லை, இது இல்லை, அது இல்லை, இப்படி இல்லை' என்றுதான் வருமேயொழிய அடியோடு இல்லாததை இல்லை என்று யாராவது மறுத்துச் சொல்லப் போகிறார்களா?

ஆகவே, ஏதேனும் ஒன்றை எடுத்து வைத்துக் கொண்டு 'இல்லை' என்று சொல்வதனாலேயே ஏற்கெனவே இருப்பதை ஸ்தாபனம் பண்ணியதாகத்தானே ஆகிறது. ஆகையினாலே, நாஸ்திக வாதத்தினாலேயும் 'இருக்கிறது' என்று ஸ்தாபனம் பண்ணியதாகத்தான் ஆகிறது.

இருப்பதை ஒப்புக் கொண்டு ஏற்றதனால்தான் ஹிரண்ய கசிபு அதை 'இல்லை செய்வேன்' என்று புறப்பட்டான்.

போதன்ன பாகவதத்திலே சொல்கிறார்: 'உலகத்துக்கெல்லாம் ஆதாரம் விஷ்ணு. விஷ்ணுவைக் காட்டிலும் பரதத்வம் மற்றொன்று உண்டோ?' என்கிறார். சர்வத்துக்கும் பரமாய் ஆதாரமாய் இருக்கக்கூடிய விஷ்ணுவினிடத்திலே துவேஷத்தை வளர்த்துக் கொண்டான். ஹிரண்ய கசிபு.

பரமாத்மாவோ தன்னிடத்தில் இருப்பதை வெளியிடுகிறான். உண்டாக்குதல், அழித்தல், அதை நிறைவுறச் செய்தல் மூன்றும் அவனே செய்கிறான். அபார பார ஸ்தோத்திரம் என்று உண்டு. அது என்ன சொல்கிறது என்றால், 'எது உலகத்திலே உயர்த்தி என்று சொல்லப்படுகிறதோ அந்த உயர்த்திக்கெல்லாம் மேலானவன் அவன்' என்கிறது.

உலகத்தில் பார்த்தால் எது உயர்த்தி?.... அர்த்தமே அனர்த்தமாகத்தான் இருக்கிறது லோகத்திலே!

பொருள் நம்மைக் காப்பாற்றுமா?

காப்பாற்றாது! அர்த்தம் – அனர்த்தம் என்கிறார் ஆதிசங்கரர். ஏன்...? ஏனென்றால் அர்த்தம் பரமார்த்தமாகாது.

பரமார்த்தம் என்றால் எல்லாமே அதிலிருந்து நமக்குக் கிடைக்க வேண்டும். அப்படி கிடைக்கச் செய்கிற சாதனம்தான் பரமார்த்தம். அதை வைத்துக் கொண்டு நாம் இன்னொன்றைப் பெறவோ சம்பாதிக்கவோ வேண்டுமானால் அப்படிப்பட்ட சாதனம் பரமார்த்தம் ஆகாது. எதனிடத்திலிருந்து

63



லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

எல்லாமே கிடைக்கிறதோ அதுதான் பரமார்த்தம்.

ஒருத்தருக்கு ஏகமாகப் பசிக்கிறது. பிராணனே போய்விடும் போலிருக்கிறது. எதிரே லட்ச ரூபாய் வைத்துக் கொண்டிருக்கிறார். எடுத்துச் சாப்பிட முடியுமா? லட்ச ரூபாயைச் சாப்பிட்டால் பசி அடங்குமா? ஆ

அது பரமார்த்தமாகாது.

இந்த இடத்திலே இருபது லட்ச ரூபாய் அடுக்கி வைக்கப் பட்டிருக்கிறது. அதைப் பார்த்தவுடனே மனிதனான அடியேனுடைய மனசிலே ஒரு விகாரம் ஏற்படுகிறது... இது மொத்தமும் இருந்ததென்றால் சௌக்யமாக இருக்குமே. மொத்தம் நமக்கே இருந்துவிடக் கூடாதா என்று கேட்கத் தோன்றுகிறது. விகாரம் அடைகிறது மனம்.

ஆனால், என்ன ஆச்சர்யம் பாருங்கள்.... ஒரு கட்டெறும்பு அந்த இருபது லட்சம் ரூபாய் மேலே ஏறிப் போய்க் கொண்டேயிருக்கிறது. அங்கேயிருந்து வந்து, ஒரே ஒரு கற்கண்டை எடுத்துக் கொண்டு போய்விட்டது. இருபது லட்சம் ரூபாயையும் லட்சியமே பண்ணவில்லை அது.

இதைப் பார்த்தே அந்த ரூபாய் பரமார்த்தமா, சாமான்யமா என்பதைத் தெரிந்து கொள்ளலாம்!

எதை நாம் பார்த்தாலும் ஒரு காலத்துக்குத்தான் வேண்டியதாக இருக்கும். வெயில் காலத்தில் ஃபேன் வேண்டியிருக்கிறது. இதே ஃபேன் தனுர் மாசத்தில் போட்டால் நிறுத்தத் தோன்றுகிறது. ஒரு காலத்தில் வேண்டும்; இன்னொரு காலத்தில் வேண்டாம் என்னும்போது அது பரமார்த்தமாகுமா?

இந்த மாதிரி உலகத்தில் ஒவ்வொரு விஷயத்தையும் ஆராய்ந்து கொண்டே போனோமானால் எதுவுமே பரமார்த்தமில்லை என்று தெரிந்து போய் விடும்.

அப்படியானால் எதுதான் பரமார்த்தம்?

பரமார்த்தம் என்று சொன்னால் அது விஷ்ணுதான் என்கிறார் பராசர மஹரிஷி.

அவனை நினைக்க நினைக்க, அவன் அடி சேர சேர, மனத்தினால் அவனை ஆராதிக்க ஆராதிக்க, அது ஒன்றுதான், அவன் மட்டும்தான் பரமார்த்தம்.

அதனால்தான் சுவாமிதேசிகன் விஜய ராகவ பெருமானைக் குறித்து பரமார்த்த ஸ்துதி என்று பண்ணியிருக்கிறார்.

சரணாகதி பண்ணக்கூடிய மகான்கள், நித்யம் இந்த சுலோகத்தைச் சொல்ல வேண்டும் என்கிறார்.

பகவான் மட்டும்தான் பரமார்த்தம். மற்ற எதுவுமே பரமார்த்தம் ஆகாது. எல்லாவற்றையும் காக்கும் பூதங்கள், அதற்கு மேலே இந்திராதி தேவதைகள், பிரும்மாதி தேவதைகள், எல்லாவற்றையும் கடந்து நிற்கக்கூடியவன்; பிரும்ம சப்தத்தால் அழைக்கப்படக் கூடியவன்; தத் சப்தத்தால் அழைக்கப்படக் கூடியவன்; தத்வம் என்ற சப்தத்தால் அழைக்கப்படக்கூடியவன் – இப்படிப் பல சப்தங்களால் அழைக்கப்படக்கூடிய அவனை சிந்தனை பண்ணுங்கள். அந்த விஷ்ணுதான் நம்மால் வரிக்கப்பட வேண்டியவன்; நமக்கு வரத்தைக் கொடுக்கக்கூடியவன். காயத்ரி மந்திரத்திலே பாருங்கள். அதற்குள்ளே விளங்கக்கூடியவன். சர்வ வியாபியானவன்.

சுவாமி தேசிகன் சார சாரம் என்கிற ரஹஸ்யத்திலே ரொம்ப அழகாகச் சொல்கிறார்: அரசனைக் காட்டிலும், ஆகாசத்தைக் காட்டிலும் வியாப்ருதி உடையவன் விஷ்ணு.

வியாப்ருதி என்றால் வித்தியாசம் என்று அர்த்தம். ராஜாவைக் காட்டிலும் ஆகாசத்தைக் காட்டிலும் பகவான் விஷ்ணு வித்தி

அருள்வாக்கு

கர்ப்பமாக நாம் தாயாரிடம் வைக்கப்படுவதிலிருந்து, கடைசியில் தகனமாகிறவரையில் நம்மை சுத்தப்படுத்த சாஸ்திரங்களில் நாற்பது ஸம்ஸ்காரங்கள் சொல்லியிருக்கிறது. அவற்றோடு அஹிம்சை, சத்தியம், அஸ்தேயம், சௌசம், இந்திரிய நிக்கிரஹம், இவையும் நம்மால் அநுஷ்டிக்கப்பட்டால், நம் அழுக்குகள் எல்லாம் போய், 'நாம் உண்மையில் யார்? ஸ்வாமி என்பவர் யார்? பரம சத்தியம் என்பது என்ன?' என்பதை எல்லாம் அறிகிற பக்குவம் உண்டாகும். பிறர் பொருள் மீது



''இன்னும் சமையல் ஆகலையா, நான் ஹோட்டலுக்குப் போறேன்...''

''பத்து நிமிஷம் பொறுங்கள்...''

''அதுக்குள்ள சமைச்சு முடிச்சுடுவியா?''

''இல்லே புடைவை மாத்திக்கிட்டு நானும் வரேன்!''

– எஸ். மோகன்



ஆசைப்படாமலிருப்பது அஸ்தேயம். 'சௌசம்' என்பது 'சுசி' என்பதிலிருந்து வந்தது. 'சுசி' என்றால் சுத்தம். வெளியிலே சுத்தமாக, தூய்மையாக, ஆசாரமாக இருந்தால் அதுவே உள் தூய்மைக்கு உபகாரம் செய்யும். நீராடுவது, மற்ற மடி ஆசாரங்கள் சௌசத்தின் கீழ் வரும். இந்திரிய நிக்ரஹம் என்பது ரொம்பவும் முக்கியம். சரீர சந்தோஷத்துக்காக எதை வேண்டுமானாலும் செய்வது எதை வேண்டுமானாலும் பார்ப்பது, எதை வேண்டுமானாலும் கேட்பது, எதை வேண்டுமானாலும் தின்னுவது, எதை வேண்டுமானாலும் பேசுவது என்றில்லாமல், இவற்றையெல்லாம் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவது இந்திரிய நிக்கிரகம்-புலனடக்கம். அதாவது யாராக இருந்தாலும் ஆசையைக் குறைத்துக் கொள்ள வேண்டும். ஆசை போகாமல் எந்த ஆத்மசம்பத்தும் உண்டாகாது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

யாசப்பட்டிருப்பதானலே அவன் சிறந்தவன் என்கிறார்.

. இது என்ன என்பது நமக்குப் புரிய வேண்டும். பகவானை சர்வ வியாபி என்கிறோம். அவன் எங்கும் பரவியிருக்கிறான். எல்லாவற்றுள்ளும் எங்கும் பரவியிருக்கிறான்.

ஆகாசம் கூட எங்கும் பரவியிருக்கிறதே, அப்போது அதற்கும் பகவானுக்கும் என்ன வித்தியாசம் என்று கேட்டால்... ஆகாசத்தைக் காட்டிலும் அவனிடத்தில் ஒன்று அதிகமாக இருக்கிறது. எங்கும் பரவியிருப்பதுடன் அதற்குள் புகுந்து எல்லாவற்றையும் செயல்படுத்துகிறான். அப்படிச் செயல்படுத்தும் சக்தி ஆகாசத்துக்கு இருக்கிறதா? இல்லை! பரவியிருத்தல் மட்டுமே அதற்கு இருக்கும் குணம். செயல்படுத்துதல் என்பது அதனால் முடியாது.

ராஜா இருக்கிறான் – சக்ரவர்த்தி. அவன் குடிமக்களைக் கட்டளையிட்டு இப்படிப் போ, அப்படி வா என்று செயல்படுத்துகிறான். ஆனால் ராஜாவுக்கும் பகவானுக்கும் என்ன வித்தியாசமென்றால் ராஜா சுவதே தேசி. அவனுடைய தேசத்தில்தான் அவன் ஆளுகை. ஒரு தேசத்து ராஜா இன்னொரு தேசத்தில் கால் வைக்க முடியுமா...? ஒரு வரையறைக்குட்பட்ட பூ பிரதேசத்தைப் பரிபாலனம் பண்ணக்கூடிய ராஜாவுக்கு எல்லாவற்றையும் பரிபாலனம் பண்ணக்கூடிய சக்தி ஏற்படுமா?

ஆனால், பகவான் விஷ்ணு, கட்டளையிடுகிறான், ஆணையிடுகிறான், நியமிக்கிறான் என்றால் எல்லாவற்றையும் நிர்ணயிக்கிறான். ஆகையினால்தான் சொன்னார் – 'சக்ரவர்த்தியைக் காட்டிலும், ஆகாயத்தைக் காட்டிலும் வியாபித்திருப்பதனாலே' என்று.

நரசிம்ஹ அவதாரத்தின் மூலம் இதைத்தான் இந்த வியாபிதத்தைத்தான் காட்டுகிறான் பரமாத்மா.

விஷ்ணு என்பது ஒரு தேவதையைக் குறிக்கிறது. தேவதை என்றால் நரசிம்ஹனைக் குறிக்கிறது. பரமாத்மா நரசிம்ஹ ரூபத்தோடு, 'ஓஹோ' என்ற சப்தத்தோடு, அற்புதமாய் சர்வவியாபியாய் எழுந்தருளினான்.

விஷ்ணுவினுடைய தன்மையை உலகத்துக்குக் காட்டவே நரசிம்ஹாவதாரம் எடுத்தான் பரமாத்மா. எங்கும் நிறைந்தான்; எல்லா வஸ்துக்களிலும் வியாபித்திருந்தான்.

பரத்வாஜ மஹரிஷி இந்த மட்டபள்ளி லக்ஷ்மிநரசிம்ஹனைப் பார்த்துப் பிரார்த்தனை பண்ணுகிறார் :

ஹே லக்ஷ்மி நரசிம்ஹா! சர்வ வியாபி! சர்வாந்தராத்மா! என்று

உபநிஷத்தில் வருகிறது பாருங்கள் அத்விதீயம் பிரும்மா என்று – அவனைக் காட்டிலும் வேறொன்று இல்லை.

இதை எடுத்துக்காட்டும்படியான மட்டபள்ளி க்ஷேத்திரத்தில் இதை வந்து பாருங்கள்; சமஸ்த தேவதைகளும் அங்கே வந்து வழிபடுவதைப் பாருங்கள்.

(தொடரும்)





ஆஸ்கர்ர்..!

'சேகர் கபூர் கோட்டை விட்ட ஆஸ்கர் விருதை மற்றொரு இந்தியரான சியாமளன் பிடிப்பார் என்று ஏகப்பட்ட கணிப்பு!

இவரின் 'சிக்ஸ்த் சென்ஸ்' படம் ஒன்று இரண்டல்ல. ஏழு பிரிவுகளில், ஆஸ்கருக்குப் பரிந்துரைக்கப்பட்டது! ஏதாவது ஒரு பிரிவில், ஆஸ்கர் கதவைத் தட்டும் என்று எதிர்பார்த்தார் சியாமளன். ம்ஹூம்! இவரின் கனவை பொசுக்கிவிட்டு 'அமெரிக்கன் ப்யூட்டி' என்ற படம் ஐந்து ஆஸ்கரைத் தட்டிச் சென்றிருக்கிறது.

'சிக்ஸ்த் சென்ஸ்' ஆஸ்கருக்குத் தேர்வுச் செய்யப்படாததற்கு பல காரணங்கள் இருந்தாலும் இப்படியொரு காரணமும் சொல்லப்படுகிறது!

அதற்கு முன் படத்தின் கதை:

பிரபல மனவியல் மருத்துவர் (ப்ரூஸ் விலிஸ்) ஒருவரால் சிகிச்சை அளிக்கப்பட்டும் குணமாகாத ஒரு நோயாளி, மருத்துவரைச் சுட்டுவிட்டுத் தானும் தற்கொலை செய்து கொள்கிறான்.

சில வருடங்களுக்குப் பின் அந்த மருத்துவர் ஒரு சிறுவனைச் சந்திக்கிறார். பல்வேறு ஆவிகள் அவன் கண்களுக்குப் புலப்பட அவன் மனநலம் குன்றி விசித்திரமாக நடந்துகொள்கிறான். ப்ரூஸ் விலிஸ் அவனைப் பக்குவமாக அணுகி, அவன் மன உணர்வுகளை வெளிக் கொணர்ந்து, பின்னணியை விளக்குகிறார். சிறுவன் சகஜ நிலைக்குத் திரும்புகிறான்.

ஆனால் இறுதியில் இடம் பெறுகிறது அந்தத் திடுக்கிட வைக்கும் திருப்பம். நோயாளியால் சுடப்பட்டபோதே ப்ரூஸ் விலிஸ் இறந்துவிட, அவரது ஆவிதான் சிறுவனுக்கு உதவி செய்திருக்கிறது. தான் ஒரு ஆவி என்பதையே கடைசிக் காட்சியில்தான் அவரால் உணர முடிகிறது. (நாமும்தான்!)

ஆவிகள் தொடர்பான படம் ஆஸ்கார் விருது பெறுவதென்பது குறிஞ்சி மலர் சமாசாரம்! கடைசியாக ஒரு பேய்க்கதை சிறந்த படமாகத் தேர்வு பெற்றது 1949ல்தான். 'ஹாம்லெட் கோஸ்ட்' என்ற திரைப்படத்திற்கு அந்தப் பெருமை கிடைத்தது.

எக்ஸார்ஸிஸ்ட், ஓமன், ட்ராகுலா, சைக்கோ, தி என்டிடி போன்ற உலகைக் கலக்கிய பேய்ப் படங்கள்கூட இசைக்காக, ஒப்பனைக்காக என்றெல்லாம் ஆஸ்கர் விருதுகள் பெற்றனவே தவிர சிறந்த படமாகத் தேர்வாகவில்லை. 'தி சிக்ஸ்த் சென்ஸ்' தேர்வாகாததற்கும் இதே ஆஸ்கர் பார்வை காரணமாக இருந்திருக்கலாம் என்கிறார்கள்.

ஆஸ்கர் பகுத்தறிவு வாதம்!

— ஜி

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Fditor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 275/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 140/-; Overseas : Rs. 1000/- (Air Mail)

"உடனடியாக வீடு கட்டவோ அல்லது விரைவான முதலீட்டு லாபமோ"
எப்படியானாலும் இது ஒரு புத்திசாலித்தனமான முதலீடு.

இந்த வீட்டு மனையை வாங்கச் சரியான நேரம்

(கீழே கொடுத்துள்ள 5 காரணங்களுக்காகவே)

சிந்து நகர், சென்னை – 600 056

பூந்தமல்லி பை-பாஸ் அருகே – CMDA அப்ரூவ்டு மனைகள். (நெ. 65/99.)

- அமைந்துள்ள இடம் ✔
- மாநகருக்கு மிக அருகில் ✔
- பாதுகாப்பு ✔
- முதலீடு செய்யும் பணத்துக்கு தகுந்த மதிப்பு ✔
- வேகமாக உயரும் நில மதிப்பு ✔



சிறப்பு அம்சங்கள்

● உடனே வீடு கட்டலாம் / அருகில் வீடுகள். ● கோயம்பேட்டிலிருந்து 10 நிமிட பயணம். ● அண்ணா நகரிலிருந்து 15 நிமிட பயணம். ● சுலபமான மூன்று வழிப் பாதைகள். கிண்டி, செயிண்ட்தாமஸ் மவுண்ட் போரூர் 100 அடி சாலை. அரும்பாக்கம், கோயம்பேடு, மதுரவாயில் 100 அடி சாலை / அம்பத்தூர், ஆவடி 60 அடி சாலை. ● சென்னை-பெங்களூர் (NH4) தேசிய நெடுஞ்சாலை. ● கோயம்பேட்டில் அமைந்துவரும் பிரம்மாண்ட பஸ் நிலையம். ● தாம்பரம்-வானகரம் புறவழிச் சாலை. ● மாநகரின் அனைத்து பகுதிகளுக்கும் தாராளமான பஸ் வசதி. ● மெடிக்கல், டெண்டல், இஞ்சினியரிங், கேட்டரிங் ஆர்ட்ஸ் கல்லூரிகள் மிக அருகில். ● சுவையான / மிருதுவான நிலத்தடிநீர். ● சுத்தமான பத்திரம் / நம்பகமான நிறுவனம். ● உடனடி பத்திரப் பதிவு.

BLBயின் உறுதி செய்யப்பட்ட சேவை (விற்பனைக்கு பின்)

● 5 வருடங்களுக்கு மனை பாதுகாப்பு சேவை. ● பத்திரப் பதிவுக்கு பின் தனிப் பட்டா ஏற்பாடு (பட்டா செலவு தனி.) ● வீடு கட்டும் பட்சத்தில் தரமான எஞ்சினியர்களை கொண்டு BLB மூலமாக கட்டுமானப் பணி ஏற்பு. ● வீடு கட்ட கடன் வசதி ஏற்பாடு.

மனையை பார்வையிட இலவச வாகன வசதி தினமும்
காலை 7.00 மணி, 11.00 மணி மற்றும் மாலை 3.00 மணி

PH : 4357721 / 31 *TEL-FAX.* 4353183 ● CELL : 98400-44018

BLB PLEDGED TO ETHICS

BLB Estates (P) Ltd.

S-3, "Ramana Flats", Rathna Nagar, Off : Anna Salai,
Teynampet, Chennai - 600 018.
(Behind Apollo Cancer Hospital)

வர்த்தகத்தில் நேர்மை; பணியில் பொறுப்பு

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2000 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka